என்ற செய்யுளைக் காண்க. இது புறநானூற்றுச் செய்யுள். இதன் கவிச்சுவை நோக்கிப் புறத்திரட்டின்கண்ணும் இளமை நிலையாமை யென்னும் அதிகாரத்தில் (368) இது சேர்க்கப்பெற்றுளது. செய்யுளிலே பயின்றுவரும் **தொடித்தலை விழுத்தண்டு** என்னுந் தொடரால் இதனை யியற்றிய ஆசிரியரைத் தொடித்தலை விழுத்தண்டினார் என்று முன்னோர் வழங்கினர்.

கிரேக்க அந்தாலஜியின் ஒப்புமை

தமிழிலே தொகைநூல்கள் மிகப் புராதன காலத்துத்தானே தொகுக்கப்பட்டமை போல, கிரேக்க மொழியிலும் மிகப் பழைய காலத்தில் 'அந்தாலஜி' (*Anthology*) என்று கூறப்படும் தொகைநூல் தொகுக்கப்பட்டுள்ளதென அறிகின்றோம். கிரேக்கத் தொகைநூலின் வரலாற்றைக் குறித்து ரிச்சர்ட் கார்நெட் (*Richard Garnett*) என்ற ஆசிரியர் விளக்கமாக எழுதியிருக்கின்றனர். அந்தாலஜி என்ற சொல்லுக்குப் பூந்துணர் என்று பொருள். சுமார் கி. மு. 90-ல் மிலீகர் என்பவரால் இத்தொகைநூல் தொகுக்கப் பெற்றதாம். இதன்கண் அடங்கிய செய்யுட்களின் ஆசிரியர்களில் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு வகைப் பூவோடு உவமித்து ஒப்புமைப்பொருளை வலிந்துகொண்டு தொகைகாரர் தாமே சில செய்யுட்கள் செய்திருக்கின்றனர். இத் தொகைநூற் செய்யுட்கள் தெய்வங்களையும் புகழ்பெற்று விளங்கிய அரசர் முதலிய பெரியோர்களையும் பெருநிகழ்ச்சிகளையும் பொருளாகக் கொண்டு அமைந்துள்ளன. சுருங்கச்சொல்லல் (*Conciseness of expression*), பொருளாழமுடைமை (*Pregnancy of ideas*), நவின்றோர்க்கினிய நன்மொழி புணர்த்தல் (*Felicity of diction*), பொருளின் ஒருமை (*Singleness of thought*) என்ற குணங்கள் இவற்றிலே அமைந்திருந்தனவெனச் சொல்லப்படுகின்றது. இவ் வியல்புகளோடு பொருந்திய கிரேக்கத்தொகைநூல் புறநானூறு என்னுந் தொகை நூலோடு பெரிதும் ஒப்பிடற்பாலதா யுள்ளது. மிலீகரது தொகைநூலுக்குப்பின் நான்கு தொகைநூல்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றின. இவைகளெல்லாம் அந்தாலஜி என்ற பெயராலேயே வழங்கின. இச்சொல் இன்றும் ஆங்கில முதலிய மொழிகளில் பயின்று வருகின்றமை நன்கறியப்பட்டதேயாம். இறுதியில் தொகுக்கப்பட்டது ஜஸ்டினியன் என்னும் அரசன் (கி.பி. 483-565) காலத்திலாகும். இந்தத் தொகைநூலிலே காதற் செய்யுட்கள் பலதுறைகளாகப் பகுக்கப்பட்டுச் சேர்க்கப்பெற்றுள்ளன வென்று அறிகின்றோம். இதனோடு தமிழ்த் தொகை நூல்களுள் அகப்பொருள் கூறுவனவாய் அமைந்துள்ள

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு என்ற ஐந்து தொகைகளும் ஒப்பிடத்தக்கன.

பழமையிலும் பொருளமைதியிலும் செய்யுள் நயத்திலும் மாத்திரமேயன்றி வேறுசில விஷயங்களிலும் இவ் விருமொழிகளிலுள்ள தொகை நூல்களும் ஒப்பிடற் குரியன. கிரேக்க நாகரிகம் நீடித்திருந்த காலத்தில் அதன் நிலைமை பல படியாக மாறிவந்திருக்கின்றது. இம்மாறு பாட்டுக்களுக்கிடையேயும் கிரேக்கத் தொகைநூல் கிரேக்கர்களுக்குப் புத்துயிர் கொடுத்துதவிய அமிர்த சஞ்சீவினியாய் நீடித்து நிலைத்து வந்திருக்கின்றது. இதுவே போன்றுள்ளன தமிழ்த் தொகைநூல்களும். இரண்டிலும் பழைய நாகரிகங்களும் வழக்கவொழுக்கங்களும் பிரதி பலித்துக் காண்கின்றன. பிற்காலத் தெழுந்த இலக்கியங்களின் நெறியை வரம்பு கட்டுதற்கும் இத் தொகைநூல்கள் உதவின. இவ்வாருகப் பல படியாலும் இருதேசத்துத் தொகைநூல்களும் ஒன்றோடொன்று உவமிக்கக் கூடியனவா யுள்ளன.

சங்ககாலத்துத் தொகை நூல்கள் பிறந்த சந்தர்ப்பமும் அவற்றின் இயல்புகளும் இதுவரை கூறப்பட்டன. புறத்திரட்டுப் போன்ற தொகை நூல் பிறந்த சந்தர்ப்பம் மேற்கூறியது போன்றதன்று. இதனை நோக்குவதற்குமுன், இரண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் தோன்றிய வேறு சில தொகை நூல்களைப்பற்றிச் சிறிது ஆராய்வோம்.

சங்ககாலத்திற்குப்பின் 14-ம் நூற்றண்டு வரையில் தோன்றிய தொகை நூல்கள்

முதற்கண், சங்க காலத்தை அடுத்துத் தோன்றிய கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றினைக் குறித்துச் சில சொல்லவேண்டுவது அவசியமாகின்றது. இங்கே கருதும் நூல் நாலடியாராகும். மதுரையைச் சூழ்ந்துள்ள எண் பெருங்குன்றங்களில் வாழ்ந்த ஜைனமுனிவர்களால் எண்ணுயிரம் வெண்பாக்கள் இயற்றப் பெற்றன வென்றும், அவற்றை யெழுதிய ஓலை நறுக்குக்கள் அனைத்தையும் வைகையிற் செல்லவிட நானூறு நறுக்குக்கள் மாத்திரம் நதியின் எதிர்சென்று தம் தகுதியைப் புலப்படுத்தின வென்றும், இவற்றிலுள்ள வெண்பாக்களைத் தொகுத்து 40 அதிகாரங்களாகப் பதுமனர் என்பவர் வகுத்தார் என்றும் நாலடியார் ஏட்டுப்பிரதிகளிற் காணப்படுகின்ற ஆசிரியப் பாவொன்று கூறுகின்றது. இக்கூற்றினின்றும் ஒருண்மை வெளியாகின்றது. புலவர்கள் பலர் பாடிய செய்யுட்களைத் தொகுத்த வொரு நூலே நாலடியாரென்று வழங்குவது. ஆதலால் இதுவும் ஒரு தொகை நூலேயாகும். சங்கத்தொகை நூல்களிற் பெயரறியப்பட்ட புலவர்கள் பலரது செய்யுட்கள் உள்ளன; செய்யுட் பொருளும் அகம், புறம் என்னும் இரு பகுதியில் அடங்குவதாயுள்ளது; கொல்லாமை, பொய்யாமை முதலிய நீதிகள் நேராக இவற்றுல் உணர்த்தப்படுவன வல்ல.

நாலடியாரிற் பெயரறியப்படாத புலவர்களுடைய செய்யுட்கள் உள்ளன; கொல்லாமை, பொய்யாமை முதலிய நீதிகள் இதில் நேராகக் கூறப்படு கின்றன. அகம், புறம் என்ற பாகுபாடு இதன்கண் இல்லை. இங்ஙனம் ஒருபாலொற்றுமையும் ஒருபால் வேற்றுமையும் உடையது இந் நாலடியார். இதனைக் கீழ்க்கணக்கு நூல் களுள் முதலாவதாக வைத்து எண்ணும் செய்யுள் ஞாபகத்துக்கு வரலாம்.

நீதி பற்றியன

நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி மாமூலம்
இந்நிலைய காஞ்சியொ டேலாதி யென்பதூஉங்
கைந்நிலையு மாங்கீழ்க் கணக்கு.

இங்ஙனம் முதலாவதாக வைத்துள்ளது மேற்கணக்கு நூல்களாகிய தொகை நூல்களுக்கும் ஏனைய கீழ்க்கணக்கு நூல்களுக்கும் இடை நிகர்த்த தன்மையுடையதாய் இந்நூல் அமைந்த காரணத்தாற் போலும்.

நாம் இங்கே முக்கியமாகக் கவனிக்கவுள்ளது எளிதில் வரையறை செய்யமுடியாத புறமும் அகமுமாகிய பொருட் கூறுபாட்டினை மேற் கொள்ளாது நீதியைப் பொருளாகக்கொண்டு அறம் பொருள் இன்பம் என்ற பாகுபாட்டினைப் பின்பற்றி நாலடியார் அமைந்தது என்பதாகும். எனவே இத்தொகை நூல் நீதியாகிய பிறிதொரு நெறிபற்றித் தொகுக்கப் பட்டது.

இதனை யடுத்து நமது மனக்கண்முன் வரும் தொகைநூல் சமயச் சார்பாகவுள்ளது. சைவத் திருமுறைகளும் வைஷ்ணவரது நாலாயிர திவ்யப் பிரபந்தமும் உண்மையில் தொகைநூல்களே யென்று கருதத் தக்கன. சேக்கிழார் அருளிச் செய்த திருத்தொண்டர் புராணத்தைத் தவிர்த்து ஏனைய 11 திருமுறைகளும் தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பிகள். இங்ஙனமே நாலாயிர திவ்யப் பிரபந்தத் தைத் தொகுத்தவர் ஸ்ரீமந் நாதமுனிகள். இவற் றைத் தொகை நூல்களாகக் கொள்ளுதலிற் கருத்தொற்றுமை யில்லாது போயினும், ஒன்பதாம் திருமுறையையும், பதினொராம் திருமுறையையும் இயற்பாவையும் தொகைநூல் எனக் கொள்ளுதலில் கருத்து வேறுபாடு நிகழ்தற்கு இடமின்று. ஒன்பதாம் திருமுறை திருமாளிகைத் தேவர் முதல் சேதிராயர் ஈறாகக் கூறப்படும் ஒன்பதின்மர் இயற்றி யருளியதாகும். பதினொராம் திருமுறையும் திருவாலவாயுடையார் முதல் நம்பியாண்டார் நம்பிகள் ஈறாகக் கூறப்படும் பன்னிருவர் அருளிச் செய்ததாகும். இங்ஙனமே இயற்பாவும் முதலாழ்வார்கள் முதலியோரது அருளிச்செயல் களாகும். வேறொரு தொகை நூலையும் இங்கே குறிப்பிடுதல் தகும். இது 'சங்கரநாராயணத் திரட்டு' எனப் பெயர் பெறும்; தத்துவ

சமயம் பற்றியன

தேசிகர் சந்தானத்தில் 35-ஆம் சந்தானமாகிய சுயம்பிரகாச யோகியார் தேவாரம் திருவாய்மொழிகளில் 1,100 செய்யுட்களை யெடுத்து 52 அதிகாரமாகப் பகுத்து ஆயிரத்திரட்டாகத் தொகுத்தது. மேற்கூறிய தொகை நூல்கள் பிறிதொரு நெறியைக் கைப்பற்றின. கடவுள் வணக்கமாக இருத்தல் வேண்டுமென்ற ஒன்றே இந் நூல்களின் கடைப்பிடி.

சமயச் சார்பான இத்தொகை நூல்களை யடுத்து நாம் கவனித்தற்குரியன 'சிவப்பிரகாசப் பெருந்திரட்டு', 'குறுந்திரட்டு' என்பன. இவைபற்றி இற்றைக்கு 35 ஆண்டுகட்கு முன்னர் செந்தமிழில் (I, பக். 285) ஓர் குறிப்பு வெளிவந்துள்ளது. இவை திரட்டப்பெற்ற காலம் 14-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியாக இருத்தல் கூடும். பெருந்திரட்டு 137 நூல்களினின்றுந் திரட்டப்பட்ட 2813 செய்யுட்களை யுடையது; கலைக்கட்டளை, அநுபவக்கட்டளை என்னும் இரு பெரும் பிரிவுகளும், 28 இயல்களும், 218 அதிகாரங்களுமாக வகுக்கப்பட்டுள்ளது. இதுகாறும் அறியப்படாதனவும் வெளிவாராதனவுமான பல நூல்கள் இப்பெருந்திரட்டிலே எடுத்தாளப்பட்டுள்ளன. இந்நூலை நோக்குமிடத்துத் தொகுக்கும் நெறி முற்கூறிய வினைத்தினும் வேறாய் மாறிவிட்டமை புலனும். தத்துவக் கோள்கைகளை மேற்கொண்டு தொகை செய்தலே இந்நெறியாம்.

தத்துவம் பற்றியன

இதுகாறும் கூறப்படாத வேறிரண்டு தொகைநூல்களுள்ளமை தமிழறிஞர்களுக்குப் புலனும். அவை பன்னிரு படலமும், பன்னிரு பாட்டியலுமாம். பன்னிருபடலம் தொகை நூலென்பது

'தென்மலை யிருந்த சீர்சால் முனிவரன்
தன்பாற் றண்டமிழ் தாவின் றுணர்ந்த
துன்னருஞ் சீர்த்தித் தொல்காப் பியன்முதற்
பன்னிரு புலவரும் பாங்குறப் பகர்ந்த
பன்னிரு படலமும் பழிப்பின் றுணர்ந்தோன்'

என்று வரும் புறப்பொருள் வெண்பாமாலைச் சிறப்புப்பாயிரத்தால் விளங்கும். அகத்தியரது மாணாக்கர்கள் பன்னிருவரும் இந்நூலைச் செய்தன ரென்பர். பன்னிரு பாட்டியல் என்ற நூலும் புலவர்கள் பலர் இயற்றியவற்றைத் தொகுத்த ஒரு பாட்டியல் நூலாம். இவ்விரு நூல்களையும் தொகைநூல் என்ற வகையிற் சேர்த்து நான் கூறாததற்கு ஒரு முக்கிய காரணமுண்டு. இவையிரண்டும் நூற்பாவினுலியன்ற இலக்கணங்களாம்; இலக்கியங்களல்ல.

மேற்கூறிவந்த இலக்கியத் தொகைநூல்கள், கிறிஸ்துவப்தம் ஆரம்ப காலந் தொடங்கி 14-ஆம் நூற்றாண்டு முடியவுள்ள நீண்ட காலப் பகுதி

யில் பற்பல காலத்தில் தோன்றியன. புறநானூறு முதலிய தொகை நூல்கள் கிறிஸ்துவப்தத்தின் தொடக்கத்தில் தொகுக்கப்பட்டனவாதல் வேண்டும். இவற்றிற் பெரும்பாலனவற்றினுள்ள கடவுள் வாழ்த்துக் களைப் பாரதம் பாடிய பெருந்தேவனார் இயற்றியிருக்கின்றனர். ஆனால் இப்பெருந்தேவனார் இப்போது காணப்படும் பாரத வெண்பாவை யியற்றியவரும் தெள்ளாறெறிந்த நந்திபோத்தரையன் காலத்தவருமான பெருந்தேவனாரல்லர். சின்னமனூர்ச் சாஸனத்திலே 'மகாபாரதந் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம்வைத்தும்' என்ற தொடர் காணப் படுகின்றது. சங்ககாலத்திலேயே ஒரு பாரதம் இயற்றப்பெற்றிருத்தல் வேண்டும் என்று கொள்ளுதற்குப் போதிய ஆதாரமுளது. இதனை இயற்றியவரே தொகைநூல்களிற் காணப்படும் பெருந்தேவனாராதல் வேண்டும். நாலடியார் எழாம் நூற்றாண்டில் தொகுக்கப்பெற்றதெனக் கூறுதல் ஏற்புடையதே யாகும். ஒன்பதாம் திருமுறையும் இயற்பாவும் 10-ஆம் நூற்றாண்டில் தொகுக்கப்பெற்றனவாம். சிவப்பிரகாசப் பெருந் திரட்டு 14-ஆம் நூற்றாண்டில் தொகுக்கப்பெற்றதாகும்.

சங்க காலத்திற்குப் பின் 14-ஆம் நூற்றாண்டு வரையுள்ள தமிழிலக்கிய வளர்ச்சி

இந்நீண்ட காலப் பகுதியிலே தமிழிலக்கியம் பல துறைகளில் வளர்ச்சியுற்றது. கவியரசர்களுள் அதிமுக்கியமானவர்க ளெல்லாம் இக்காலப் பகுதியிற் சிறந்து விளங்கினார்கள். தெய்வப் புலமைத் திருவள்ளுவர் இக்காலத்தே திகழ்ந்தனர். இவரது வாய்மொழியின் மாண்பு 'ஓதற்கெளிதா யுணர்தற் கரிதாகி-வேதப்பொருளாய் மிக விளங்கித்-தீதற்றோர்-உள்ளுதோ றுள்ளுதோ றுள்ள முருக்கி' நின்றது. சேரமன்னர் குலதீபமான இளங்கோவடிகள் தமது கம்பீரமான காவியத்தைத் தமிழ்த் தெய்வத்தின் திருவடிகட்குச் சிலம்பாக அணிவித்தார். கொங்குவேளிர் தமது உதயணன் கதையை உண்ண வுண்ணத் தெவிட்டாத செந்தமிழால் இயற்றித் தமிழ்த் தெய்வத்தின் திருச் செவியிற் சார்த்தினர். தோலாத மொழியுடையா ராகிய பெரும்புலவர் சூளாமணி யென்னும் இனிய மதுரச்செஞ்சொற் காவியத்தை இயற்றித் தமிழ்த்தெய்வத்தின் திருமுடியில் அணிவித்தனர். திருத்தக்க தேவராகிய புலவர் கோமான் சிந்தாமணியென்னும் அரதன மாலையைத் தமிழ்த் தெய்வத்தின் திருமேனியில் அணிவித்தனர். உலக மகா கவிகளுள் ஒருவரெனக் கருதத் தகும் கம்பர் என்னும் கவிச் சக்கர வர்த்தியார் தமது இராமாவதாரம் என்னும் அரும்பெற லமிழ்தினைத் தமிழ்த் தெய்வத்திற்கு நிவேதிக்கப்படும் திருவமிர்தாகப் பாகஞ் செய் தருளினர்.

இங்ஙனமாகப் பெருங் கவிகள் தோன்றித் தமிழகத்துக்குப் பெருமை யளித்த பின்னர், தமிழ் மக்களுக்கு, அக்கவிஞர்களது செய்யுட்களிலே

இடையறாது பயிலவேண்டுமென்றும் அவாவுண்டாதல் இயல்பே. இவர்கள் இயற்றிய பெருநூல்களனைத்தினையும் கற்றலென்பது ஒருசிலர்க்கல்லது ஏனையோர்க்குக் கூடாதாம். ஆதலால் அப்பெருநூல்களிற் பலவற்றினின்றும் திரட்டப்பெற்ற ஒரு நூல் அத்தியாவசியமாக வேண்டப்படுவதாயிற்று. இதனை நோக்கியே புறத்திரட்டு என்னுந் தொகை நூல் தொகுக்கப்பெற்றதென்னலாம்.

புறத்திரட்டு என்ற தொகை நூலின் தோற்றம்

மேற்கூறியவற்றால் புறநானூறு முதலியன தோன்றிய சந்தர்ப்பமும் புறத்திரட்டுத் தோன்றிய சந்தர்ப்பமும் முற்றிலும் வேறானவை யென்பது தெளிவாம். ஒன்று தனிப் பாடல்கள் பலவற்றுள் ஒரு சிலவற்றைப் பொறுக்கித் தொகுத்திருப்பதாம்; பிறிதொன்று பெரு நூல்கள் பலவற்றினின்றும் ஒரு நெறிபற்றிச் செய்யுட்களைத் தொகுத்ததாம். தனிப் பாடல்கள் எல்லாக் காலத்தும் உண்டாவனவே. எனினும், இலக்கிய சரித்திரத்தின் ஆரம்பத்தில் தோன்றுவன ஆராய்ச்சியாளர்க்கு மிக்க பயன் தருவனவாயிருக்கும். பெருநூல்கள் இலக்கிய சரித்திரத்தின் ஆரம்பத்தில் அருகியே தோன்றுமென. காலஞ் செல்லச் செல்ல, அவை பெருகும். அவை பெருகி நின்ற நிலையிலேதான் புறத்திரட்டுப் போன்ற தொகைநூல்கள் உண்டாதல் கூடும்.

புறத்திரட்டு என்னும் அரியநூல் தொகுக்கப் பெற்ற காலத்திற்குச் சற்று முன் பின்னாக வடமொழியிலும் இவ்வகைத் தொகைநூல்கள் தோன்றின. அவற்றில் ஒருசிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன். கவீந்த்ர வசன ஸமுச்சயம் என்ற தொகை நூலின் பிரதியொன்று நேபாள தேசத்து அகப்பட்டது. இது 12-ஆம் நூற்றாண்டிலெழுதப் பெற்றது. இதிற் கூறப்பட்டுள்ள கவிஞரனைவரும் கி. பி. 11-ஆம் நூற்றாண்டிக்கு முற்பட்டவர்கள். இதன்கண் இன்பம், ஒழுக்கம், அரசியல் நீதிகள் முதலியனபற்றிய செய்யுட்கள் தொகுக்கப் பெற்றுள்ளன. இதுவே இப்பொழுது அகப்படும் வடமொழித் தொகைநூல்களெல்லாவற்றுள்ளும் காலத்தால் முந்தியது என்று கொள்ளற்குரியது.

வடமொழித் தொகை நூல்களின் தோற்றம்

குலசேகர ஸூக்தி ரத்நஹாரம் என்பது காலிங்கராயனென்பவனால் தொகுக்கப்பெற்றது. இக்காலிங்கராயன் கலிங்கத்துப் பரணியில் குறிப்பிடப்பட்ட கருணாகரத் தொண்டைமான் என்றும், முதற் குலோத்துங்கனே குலசேகரனென்று குறிக்கப்பட்டுள்ளானென்றும், இது 'வாழி சோழ குலசேகரன்' என்ற பரணித் தொடரால் ஆதரிக்கப் படுகிறதென்றும், காலிங்கராயனது சாஸனத்தில் அவன் அருளாகரன் என வழங்கப் படுகிறானென்றும் திருவிதாங்கூர்ச் சாஸனவிலாகாத்

தலைவராகச் சிலகாலம் இருந்த ஸ்ரீ A. S. இராமநாதையரவர்கள் எழுதி யுள்ளார்கள். இதனை ஸ்ரீ மு. இராகவையங்காரவர்கள் செந்தமிழில் (23-ஆம் தொகுதி, பக். 299) மறுத்தெழுதியிருக்கின்றார்கள்.

பரணி கொண்டாடும் பேறுவாய்ந்த தமிழ்ப் பெருவீரனொருவன் இவ்வடமொழித் தொகுதிநூலைத் தொகுத்தானென்பது உண்மையாதல் சாலுமோ என்று ஐயப்பாடு நிகழ்தல் இயல்பே. இதன் உண்மை யெவ்வாறாயினும், இத்தொகைநூல் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப்பொருள்கள் பற்றி வகுக்கப்பட்டுள்ளது என்பது இங்கே கருதத் தக்கது.

ஸுபாஷித முக்தாவலி என்பது கி. பி. 1275-ல் தொகுக்கப் பெற்றது. இதன் ஸங்கிரஹம் ஒன்றும் விரிந்தநூல் ஒன்றும் உள்ளன. செல்வம், ஊழ், இன்பம் முதலியன பற்றிய செய்யுட்கள் இதன்கண் அடங்கியுள்ளன.

சார்ங்கதர பத்ததி என்பது கி. பி. 1363-ல் தொகுக்கப் பெற்றது. இதன்கண் 163 அத்தியாயங்களும் 4689 சுலோகங்களும் உள்ளன.

ஸுபாஷித ஸுதாநிதி என்பது வேதபாஷ்யம் இயற்றிய ஸாயணரால் கி. பி. 14-ஆம் நூற்றாண்டில் இயற்றப் பெற்றது.

இவ்வடமொழித் தொகைநூல்கள்* கால வொற்றுமை கருதி இங்கே தரப்பட்டன. இவையும் வடமொழி இலக்கியங்கள் செழிப்புற்றுப் பெருகியபின்னரே தோன்றியனவாதல் தெளிவாம். பொருட்பாகுபாட்டி னும், அதிகார அமைப்பினும், பொருள் விளக்கத்தினும், இவற்றிற்கும் புறத்திரட்டிற்கும் நெருங்கிய வொற்றுமை காணப்படுகின்றது. இது பின் வருவனவற்றால் தெளிவாகும்.

*ஆசிரியர் பலரால் இயற்றப்பெற்ற செய்யுட்களை ஒருசேரத் தொகுத்த தொகையைக் 'கோசம்' என்றும், ஆசிரியரொருவரே இயற்றிய பல செய்யுட் களைத் தொகுத்த தொகையை 'ஸங்காதம்' என்றும் தண்டியாசிரியர் தமது காவ்யாதர்சத்திற் கூறினர். தமிழ்த் தண்டியலங்காரமும் 'தொகைநிலைச் செய்யுள் தோன்றக் கூறின் - ஒருவ னுரைத்தவும் பல்லோர் பகர்ந்தவும் - பொரு ளிடங் காலந் தொழிலென நான்கினும் - பாட்டினு மளவினுங் கூட்டிய வாகும்' எனக் கூறுகின்றது.

II

தமிழிலக்கண நூலோர் 'அறம் பொருளின்பம் வீடடைதல் நூற்பயனே' என்று விதி அமைத்திருக்கின்றனர். நூற்பயன் இந்நான் காயினும், நூலுட் கூறப்படுவன வீடொழிந்த ஏனை மூன்றுமேயாம் என்பது பெரியோர் கொள்கை. இக்கொள்கைக்கு 'வீடென்பது சிந்தையு மொழியுஞ் செல்லா நிலைமைத் தாகலின், துறவறமாகிய காரண வகையாற் கூறப்படுவதல்லது இலக்கண வகையாற் கூறப்படாமையின்' எனக் காரணங் காட்டுவர் பரிமேலழகர். வீடொழிந்த ஏனை மூன்றனையும் 'த்ரிவர்க்கம்' என வழங்குவர் வடமொழியாளர்.

புறத்திரட்டு வள்ளுவரது முப்பாலைப் பின் பற்றியது

இம்மூன்று உறுதிப் பொருள்களையும் அடிப்படையாகக் கொண்ட பாகுபாடு சங்ககாலந் தொட்டே ஆன்றோர் ஆட்சியிலுள்ள தென்பதற்குத் தக்க சான்றுகள் உள்ளன. 'அறனும் பொருளும் இன்பமு மூன்றாம் ஆற்றும் பெரும' என்பது புறம் (28). இப் பாகுபாட்டினையே 'புறத்திரட்டு' என்ற தொகைநூலும்[1] மேற்கொண்டுள்ளது. இவ்வாறு கொள்ளுதற்கு இம்மூன்று பொருள்களையும் கூறுவதாய், காலத்தால் மிக முற்பட்டதாய், பெருமையால் தலைசிறந்ததாய் விளங்கிய ஒரு தமிழ்ப்பெருநூலே காரணமாயிருந்தது.

முப்பாலின் பெருமை

இங்கே குறிப்பிடும் நூல் இன்னதென்பது எளிதில் ஊகிக்கக் கூடியதே. அதுதான் நமது ஒப்புயர்வற்ற முப்பாலாகும். பண்டைக் காலத்துப் பெருநூல்களுள்ளே இம்முப்பாலைப் போலத் தமிழ்மக்களது உள்ளத்தைக் கொள்ளைகொண்டது பிறிதொன்றும் இல்லை யென்பதை யாவரும் அறிவர். இந்நூல் எவ்வகையினருக்கும் எவ்வகை நிலையினும் துணைநின்றுதவும் அறிவுரைக் களஞ்சியம்; ஒவ்வொரு குறளும் தனித்தனியே செப்பஞ் செய்யப் பெற்றதோர் அரும்பெறல் மணியாகும். ஓத இனிதாயும், கேட்க இனிதாயும், உணர இனிதாயும் உள்ளது இத்தெய்விகப் பெருநூல். 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்னும் அருமைத் திருக்குறள் முப்பாலுக்குப் பெரிதும் பொருந்துவதொன்றும். பெரும் புலவர்கள் எனக் கருதத்தகும் ஆசிரியர்கள் பலரும் இந்நூலை யெடுத்

---

1. 'புறநானூற்றுப் பிரதியொன்றன் தொடக்கத்தில் 'அறநிலை' என்று வரையப் பெற்றிருந்தது. அப்படியே பொருள்நிலை, இன்பநிலை யென்ற பகுதிகள் எந்த எந்தப் பாடலிலிருந்து தொடங்குமோவென்று தேடிப்பார்த்ததில் ஒரு பிரதியிலும் கிடைக்கவில்லை. ஆனாலும், இந்நூல் அறநிலை, பொருள்நிலை, இன்பநிலை என்னும் மூன்று பகுதிகளாகப் பகுக்கப் பெற்றிருக்க வேண்டுமென்பது இதனால் ஊகித்தறியப் படுகின்றது.'

—புறநானூறு, இரண்டாம் பதிப்பின் முகவுரை

தாண்டுள்ளமை நோக்கினால், இது தோன்றிய காலந்தொட்டுப் பெரும் புகழ்பெற்று நிலவிவருகின்றமை தெளிவாம்.

நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திர மென்ப (பொருள், 490)

என்ற தொல்காப்பியச் சூத்திரமும்,

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும் (குறள், 28)

என்ற திருக்குறளும் எதனை யெது பின்பற்றியதென வரையறுத்துணர முடியாதபடி நம்மை மயக்குகின்றன.

நாடி நட்பி னல்லது
நட்டு நாடார்தம் மொட்டியோர் திறத்தே

என்ற நற்றிணைச் செய்யுளின் (32) அடிகளும்

நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு (குறள், 791)

என்ற திருக்குறளும் தம்முட் பெரிதும் ஒத்தியல்கின்றன.

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுவாளை
(XXIII, இறுதி வெண்பா)

என்ற சிலப்பதிகார அடியும்,

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய் (XXII, 59-61)

என்ற மணிமேகலை யடிகளும் குறளினையும் அதனாசிரியரையும் தக்கவாறு போற்றிப் பாராட்டுகின்றன.

சூளாமணியை எடுத்துக்கொள்க. அதன்கண்,

இகழ்ச்சி யிற்கெடு வார்களை யெண்ணுக
மகிழ்ச்சி யுண்மனை மைந்துறும் போதெனப்
புகழ்ச்சி நூலுட் புகன்றனர் பூவினுட்
டிகழ்ச்சி சென்றசெம் பொன்முடி மைந்தனே (சீய. 56)

என வந்துள்ள செய்யுள்,

இகழ்ச்சியிற் கெட்டாரை யுள்ளுக தாந்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போது (குறள், 539)

என்னுந் திருக்குறளைக் கருதியதாகும்.

பஞ்சகாவியங்களுள் ஒன்றாகக் கருதப்படுவதும் இப்பொழுது இறந்துவிட்டதுமான வளையாபதியில்,

மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்றார்க் குடம்பு மிகையவை யுள்வழிப்
பற்றா வினையாய்ப் பலபல யோனிக
ளற்றா யுழலு மறுத்தற் கரிதே

எனவொரு செய்யுள் உளதாகப் புறத்திரட்டினால் அறிகின்றோம். இதன்கண் திருக்குறளொன்று வடிவு சிதையாது அப்படியே வந்துள்ளமை காணலாம்.

ஊரவர் கவ்வை யெருவிட் டன்னைசொல் நீர்படுத்து (5, 3, 4)

என்ற திருவாய்மொழி

ஊரவர் கவ்வை யெருவாக அன்னைசொல்
நீராக நீளுமிந் நோய்

என்ற திருக்குறளை உட்கொண்டுள்ளமை தெளிவு.

கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுளவென்று—பண்டையோர்
கட்டுரையை மேம்படுத்தாள்

என்று வரும் ஆதியுலாவடிகளிற் சேரமான் பெருமாள் நாயனார் ஓர் திருக்குறளை அமைத்திருக்கின்றனர்.

தொழுதகங் கையி னுள்ளுந் துறுமுடி யகத்துஞ் சோர
அழுதகண் ணீரி னுள்ளு மணிகலத் தகத்து மாய்ந்து
பழுதுகண் ணரிந்து கொல்லும் படையுட னொடுங்கும் பற்றா
தொழிகயார் கண்ணுந் தேற்றந் தெளிகுற்றார் விளிகுற்றாரே
(சிந்தா. 1891)

என்ற சிந்தாமணிச் செய்யுளில்

தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரு மனைத்து

என்ற திருக்குறள்மணி அழுத்தப்பெற்று விளங்குகின்றமை காணலாம்.

கொடுப்பது விலக்குகொடி யோர்தமது சுற்றம்
உடுப்பதுவு முண்பதுவு மின்றியொழி யுங்காண் (பால. வேள்வி. 18)

என்று கம்பர் தமது இராமாவதாரத்திற் கூறியது

கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉம்
உண்பதூஉ மின்றிக் கெடும்

என்ற வள்ளுவரது பொய்யாமொழியை மேற்கொண்ட தென்பது தெள்ளிதிற் புலனாம்.

பெரும்புலவர்கள் திருக்குறளை யெடுத்தாண்டதனோடு அதன் பெருமை அமைந்துவிடவில்லை. குறட்கருத்துக்களைச் சரிதங்களால் உதாகரித்தும், மிகச் சிறந்தனவாகக் கருதியனவற்றைப் பாட்டுடைத்

தலைவனொருவனை விளித்து அவன் மனங்கொள்ளும்வண்ணம் உணர்த்தியும், வெண்பா, கலித்துறை, விருத்தமுதலிய பாவகையில் நூல்களியற்றித் தமிழறிஞர் இப்பெருநூலை அநுபவித்து வந்தனர். இத்தகைய சிறு நூல்களாகிய தினகர வெண்பா, சோமேசர் முதுமொழி வெண்பா, சிவசிவ வெண்பா, திருப்புல்லாணி மாலை முதலியன தமிழ் மக்களாற் பாராட்டப்பட்டனவேயாகும்.

இங்ஙனமாக, தோன்றிய காலந்தொட்டு இன்றுவரை கற்றார் பலராலும் ஒருங்கு போற்றப்பட்டு, பல தேயத்து அறிஞர்களாலும் மொழிபெயர்க்கப்பட்டு நிலவி வருகின்ற திருக்குறள் நூலைப் பின்பற்றிப் புறத்திரட்டு அமைக்கப்பட்டதென்பதில் வியப்பு யாதுமில்லை.

புறத்திரட்டில் முதலிரு பால்களின் பொருளமைதி

நூலின் பெரும் பகுப்புக்களில் மாத்திரமன்றிச் சிறு பகுப்புக்களினும், அவ்வந்நூல் அதிகாரவடைவினும், குறளாசிரியர் வகுத்த நெறியினையே புறத்திரட்டும் பின்பற்றிச் செல்கின்றது. திருக்குறளில் அறத்துப்பால் பொருட்பால்களை யெடுத்துக்கொள்வோமாயின், அவற்றின்கண்ணே 108 அதிகாரங்கள் உள்ளன. புறத்திரட்டில் புறத்திணைபற்றி வகுத்த பகுதியை நீக்கி ஏனையவற்றைக் கணக்கிடின், 108 அதிகாரங்கள் உள்ளன. இருநூல்களினும் அதிகாரங்களை அமைத்துள்ள வைப்பு முறையினும் சிறிதும் வேறுபாடில்லை. ஆனால் குறளிற் காணும் அதிகாரங்களுள் 14 அதிகாரங்கள் புறத்திரட்டிற் காணப்பெறவில்லை. இங்ஙனமே புறத்திரட்டிற் காணும் அதிகாரங்களுள் 15 அதிகாரங்கள் திருக்குறளிற் காணப்பெறவில்லை. ஒரு நூலில் இல்லாத அதிகாரங்களை மற்றை நூலின் மற்றை அதிகாரங்களுள் அடக்கிக் காட்ட இயலும். உதாரணமாக, செல்வநிலையாமை, இளமை நிலையாமை, யாக்கைநிலையாமை, பல்வகை நிலையாமை என நான்கு அதிகாரங்கள் புறத்திரட்டில் உள்ளன. இவை திருக்குறளிலுள்ள 'நிலையாமை' என்னும் ஓரதிகாரத்தில் அமைவனவே. வினைத்தூய்மை, வினைத்திட்பம் என்று இரண்டு அதிகாரங்கள் திருக்குறளில் உள்ளன. இவை புறத்திரட்டின் 'வினைசெயல்வகை' என்னும் ஓரதிகாரத்தில் அமையத்தக்கனவே. இங்ஙனமே பெரும்பாலும் உள்ளன. அமைப்பு முறையில் மாத்திரமன்றிப் பொருள் விளக்கு நெறியினும் இந்நூல் திருக்குறளைப் பின்பற்றி அதனைப் பூர்த்தி செய்கின்றது. திருக்குறள் மேற்கொண்ட பால், அதிகார அடைவுகளைத் தானும் பெற்று, சங்கத்தொகைநூல், குறளொழிந்த ஏனைய கீழ்க்கணக்கு நீதிநூல்கள், இதிகாசங்கள், காவியங்கள், சமயத்திற முரைக்கும் நூல்கள் முதலியவற்றினின்றும் ஆராய்ந்தெடுத்த செய்யுட்களை ஏற்ற பெற்றி ஏன்றுகொண்டு அமைந்துள்ளது புறத்திரட்டு என்னும் இப்பெருநூல். திருக்குறளிலுள்ள அறிவுச் செல்வத்தை மேலும் பெருக்குவதற்கெனத்

தொகுக்கப்பெற்ற தமிழ்ச் செல்வமென்று இந்நூலைக் கூறின், அது சாலவும் பொருந்துவதேயாம்.

இங்ஙனமமைந்த நூலுக்கு 'நீதித் திரட்டு' எனப் பெயரிடுதல் பொருந்துமெனச் சிலர் கருதலாம். இப்பெயர் சென்னை அரசாங்க நூல் நிலையத்திலுள்ள சுவடிப் பிரதியிற் காணப்படுவதும் நாம் கவனித்தற் குரியது. காலஞ் சென்ற திரு. த. கனகசுந்தரம் பிள்ளையவர்கட் குரியதும் அவர்களுடைய குமாரரால் எனக்கு உதவப்பட்டதும் ஆகிய ஏட்டுப்பிரதியின் மேலேயுள்ள வெள்ளேட்டில் 'நீதித்திரட்டு' என இக்காலத்தொருவரால் எழுதப்பட்டுள்ளமையும் உண்மையே. ஆனால் நீதித்திரட்டு என்பது நூலிற்கு உரிய பெயரன்று; புறத்திரட்டு என்பதே பெயர். இப்பெயர் மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் பிரதியிலும், இலக்கண விளக்கம் வைத்தியநாத தேசிகர் பரம்பரையார் வீட்டுப் பிரதியிலும், தஞ்சை சரபோஜி மகாராஜா நூல்நிலையத்துப் பிரதியிலும் காணப்படுவதேயாகும். மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களும் 'புறத்திரட்டு' என்பதனையே நூற்பெயராகப் பலவிடங்களிலும் குறித்துள்ளார்கள் (பதிற்றுப்பத்து: முகவுரை பார்க்க). அன்றியும் 'நீதி' என்பது 'புறம்' என்ற பெரியதொரு பாகுபாட்டில் அடங்கும்; 'புறம்' என்றதன்கண் அடங்குவனவெல்லாம் 'நீதி' என்பதன்கண் அடங்கமாட்டா. கைக்கிளை, பெருந்திணை யென்னும் பகுதிகளும், வெட்சி முதலிய புறத்திணைக்குரிய துறைகளும் நீதியின்கண் எவ்வகையானும் அடங்கா. இக்காரணத்தால், புறத்திரட்டென்பதே நூற்பெயரென்பது தெளிவாம்.

பொருளமைதியால் நேர்ந்த பெயர் மாட்சி

இருவகைத் திணைகளுள் புறத்திணைத் துறைகளை இத்திரட்டின்கண் தொகுத்திருக்கும் முறையும் சங்க காலத்துச் சான்றோர்கள் மேற்கொண்டுள்ள கருத்தைத் தழுவியதேயாம் :

புறப் பொருளமைதி

வெட்சி நிரைகவர்தல் மீட்டல் கரந்தையாம்
வட்கார்மேற் செல்வது வஞ்சியாம்—உட்கா
தெதிரூன்றல் காஞ்சி யெயில்காத்தல் நொச்சி
அதுவளைத்த லாகு முழிஞை—அதிரப்
பொருவது தும்பையாம் போர்க்களத்து மிக்கோர்
செருவென் றதுவாகை யாம்.

இம்முறையினையே தழுவி 'நிரைகோடல்' முதல் 'வாழ்த்து' முடிய 23 துறைகள் அதிகாரங்களாக வகுக்கப்பட்டிருக்கின்றன.

இனிக் காமத்துப்பாலினைக் குறித்துச் சில கூறவேண்டுவனவுள. எனக்குக் கிடைத்த புறத்திரட்டுப் பிரதிகளுள் ஒன்றிலேனும் இப்பகுதி

காணப்பெறவில்லை. ஆனால் என்னிடமிருக்கும் புறத்திரட்டுச் சுருக்கம் என்ற நூற்பிரதிகளுள் ஒன்றொழிய ஏனைப் பிரதிகளனைத்திலும் இப்பகுதியுள்ளது. சுருக்கத்தின்கண் உள்ள இப் பகுதி விரிந்த நூலாகிய புறத்திரட்டின் கண்ணும் உளதாயிருத்தல் வேண்டும். இப்பொழுது காணப்படாததன் காரணம் ஒருவாற்றானும் புலப்படவில்லை. புறப்பொருட்பகுதி வாழ்த்து என்னும் அதிகாரத்தோடு முடிதல்கண்டு அதனையே நூலிறுதியென மயங்கிப் பின்னுள்ள பகுதி வேறொரு நூலென வெண்ணி நாளடைவில் இப்பகுதியை நம் முன்னோர் இழந்துவிட்டதாகக் கருதுதலும் கூடும்.

காமத்துப் பால் பிரதிகளிற் காணப்பெறமை

புறத்திரட்டுச் சுருக்கத்திலுள்ள காமத்துப்பாற் செய்யுட்களைக் குறித்துப் பிறிதொன்று கவனிக்கத்தக்கது. இச்செய்யுட்களனைத்தும் முத்தொள்ளாயிர மென்னும் அரிய பேரிலக்கியத்தைச் சார்ந்தனவாகும். 'அங்கதப் பாட்டவற் றளவோ டொக்கும்' (தொல். செய்யுள். 160) என்பதனுரையில் 'கைக்கிளைச் செய்யுள் முத்தொள்ளாயிரத்துட் பலவாயினும்' எனப் பேராசிரியர் கூறுதலால், சுட்டியொருவர் பெயர்கொண்ட பாடாண்டிணைப் புறப்புறக் கைக்கிளைச்செய்யுட்கள் இந்நூலின்கண் மிகுதியாயிருத்தல்வேண்டும். இவ்வகைக்கைக்கிளைச் செய்யுட்களில் 65 செய்யுட்கள் புறத்திரட்டுச் சுருக்கத்திலுள்ளன. காமத்துப்பாற் குரியவாயும் புறத்தோடு இயைபுடையவாயு முள்ள ஏனைய பகுதிச் செய்யுட்களும் புறத்திரட்டில் தொகுக்கப் பெற்றிருத்தல் கூடும்.

புறத்திரட்டுச் சுருக்கத்திற் காமத்துப் பால் முழுதும் முத்தொள்ளாயிரச் செய்யுட்களே

புறத்திரட்டிலுள்ள முத்தொள்ளாயிரத்துச் செய்யுட்களனைத்தையும் ஒருசேரத் தொகுத்து 1905-ம் ஆண்டில் ஸ்ரீ ரா. இராகவையங்காரவர்கள் செந்தமிழ்ப் பிரசுரமாக வெளியிட்டுள்ளார்கள். அவர்கள் 'இன்பப்பகுதிபற்றிய இன்பொருட்பாடல்கள் சென்னையிலிருக்கும் தமிழ்ப்பண்டிதர் ப்ரஹ்மஸ்ரீ வேங்கடராமய்யங்காரவர்களுடைய புறத்திரட்டுக் காமத்துப்பால் ஏட்டிலும் மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் சைவ நூற் பரிசோதகர் ஸ்ரீமத் ரா. சுப்பிரமணியக் கவிராய ரவர்களுடைய புறத்திரட்டேட்டிலும் இருந்தன' என்று முகவுரையில் எழுதியிருக்கின்றார்கள். இவ்வேடுகள் புறத்திரட்டுச் சுருக்கப் பிரதிகளேயென ஸ்ரீ ஐயங்காரவர்கள் எனக்குத் தெரிவித்தார்கள்.

இப்பொழுது அறத்துப்பாலில் 45 அதிகாரங்களும் 473 செய்யுட்களும், பொருட்பாலில் 86 அதிகாரங்களும் 1032 செய்யுட்களும் உள்ளன. புறத்திரட்டுச் சுருக்கத்திலுள்ள காமத்துப்பாலிற் கைக்கிளை

பற்றி 65 செய்யுட்கள் காணப்படுகின்றனவென முன்னே கூறப்பட்டது. இவற்றையுங் கூட்டின் 1570 செய்யுட்கள் புறத்திரட்டி னுள்ளன.

புறத்திரட்டில் மூலநூல்கள் குறிக்கப்பட்டுள்ளமை

புறத்திரட்டின் அமைப்பிற் காணப்படும் ஓர் அரிய செய்தி இங்கே கூறுதற்குரியது. இதன்கணுள்ள செய்யுட்கள் இன்னநூலைச் சார்ந்தன வென வுணர்த்தப்படுகின்றன. இதனால் இக்காலத்து இறந்துபட்ட பல நூல்களினின்றும் பலசெய்யுட்கள் கிடைக்கின்றன. இச்செய்தி தமிழிலக்கிய ஆராய்ச்சி யாளர்க்கு எத்துணை யளவாகப் பயன்படு மென்பது கூறவேண்டா. பண்டையுரையாசிரியர்கள் தமதுஉரைகளில் எடுத்தாண்டுள்ள மேற்கோள்கள் இன்னநூலைச் சார்ந்தனவென்று பெரும்பாலும் உணர்த்தாமலே எழுதிச்செல்வர். இவ்வழக்கத்திற்கு மாறாக, புறத்திரட்டைத் தொகுத்தவர் மூலநூல்களைக் குறித்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. குறித்துச் சொல்லுமுறையும் கவனிக்கற்பாலது. ஓர் அதிகாரத்தில் ஒரு நூலிலிருந்து ஒரு செய்யுள் தரப்பட்டிருக்குமாயின், அச்செய்யுளுக்குப்பின் அந்நூற்பெயர் காணப்படும்; பல செய்யுட்கள் தரப்பட்டிருக்குமாயின், இறுதிச்செய்யுளுக்குப்பின் நூற்பெயர் குறிக்கப் படும். நூற்பெயருக்குப் பின்வருவது வேறுநூலைச் சார்ந்த செய்யுளாக விருக்கும். இம்முறையைப்பின்பற்றியே புறத்திரட்டு முழுவதிலும் மூல நூல்கள் காட்டப்பட்டுள்ளன. ஒரு சிலவிடங்களில் நூற்பெயர்கள் தவறாகவுள்ளன வென்பது உண்மை. ஒருசில்லிடங்களில் நூற்பெயர்கள் வெவ்வேறாக மாறுபட்டும் பிரதிகளில் உள்ளன. இக் குழறுபடைகள் பிரதிசெய்தோர்களால் நேர்ந்திருக்க வேண்டுமென்று கொள்ளுதலே தகுதியாவது. 1570 செய்யுட்களுள்ள இப்பெருநூலில் 13 செய்யுட் களே இப்பொழுது மூலம் விளங்காதிருப்பன.

செய்யுட்களின் வைப்புமுறை

இந்நூலகத்துக் கோக்கப்பட்டுள்ள செய்யுட்களின் வைப்புமுறையும் இங்கே குறிக்கத்தக்கது. வெண்பா, விருத்தம், அகவல் என்ற முறையிலே இத்தொகை செய்தார் செய்யுட்களை அமைத்திருக் கின்றனர். இந்நெறிக்கு விலக்காகவும் ஒரு சில்லிடங் கள் உள்ளன. இவ்விடங்கள் இப்பதிப்பில் அங் கங்கே காட்டப்பட்டிருக்கின்றன. முறைபிறழ்தற்குக் காரணம் யாதென் பது உய்த்துணர வேண்டுவதாயுள்ளது. நூலைப் பிரதிசெய்தோர்கள் முதலில் எழுதுதற்குத் தவறிய செய்யுளைப் பிற்படச் சேர்த்திருக்கலாம்; அல்லது பொருத்தமுடையதாகத் தமக்குத் தோற்றிய செய்யுளை வைப்பு முறை நோக்காது அவர்கள் இடைப்பெய்திருக்கலாம். இஃது எவ்வா றாயினும், செய்யுட்களை அமைத்துள்ள முறை மேற்குறித்ததே யென்பது ‘ அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் வகை ரு-க்கு வெண்பா விருத்தம் பலெருடையாசிரியம் அகவற்பா எடுடரு ’ எனப்

புறத்திரட்டுச் சுருக்கத்தின் இறுதியிற் காணும் குறிப்பால் நன்கறிய லாகும்.

புறத்திரட்டுச் சுருக்கம்

புறத்திரட்டுச் சுருக்கத்தைப்பற்றி மேலே கூறினேன். இச்சுருக்கம் இரண்டு விஷயங்களை நமக்குப் புலப்படுத்துகின்றது. முதலாவது, புறத்திரட்டு என்ற தொகைநூல் தமிழ் அறிஞர்களது வேண்டற்பா டொன்றிற்குப் பயன்படுவதாய் அவர் களுக்குத் திருப்தியளித்தது என்பதாம். திருக்குறள் என்ற பெருநூல் தமிழ்மாணவரனைவராலும் ஓதியுணரப்பட்டு மிகவும் போற்றப்பட்டதாம். இதனளவு பிறநூல்கள் ஓதப்பட்டனவென்று எண்ணுதல் ஏலாது. இப் பிறநூல்களினின்றும் சொல்நயத்தாலும் கருத்து நயத்தாலும் இன்பந்தரவல்ல செய்யுட்கள் தொகுக்கப்பெற்ற நூலொன்றைப் பெறவேண்டுமென்று பலரும் அவாக்கொள்ளுதல் இயல்பே. இவ் அவாவினைப் பூர்த்தி செய்தற்கே 'புறத்திரட்டு' என்ற தொகைநூல் எழுந்ததென்னலாம்.

இத்தொகைநூல் பலவிடங்களிலும் பிரசார மெய்தலாயிற்று. பலரும் இதனை விரும்பிக் கற்கத் தொடங்கினர். இங்ஙனம் இது தமிழ் நாடெங்கும் பரவியுள்ள செய்தியே புறத்திரட்டுச் சுருக்கத்தால் நாம் இரண்டாவதாக உணர்வது. பலரும் விரும்பிக் கற்றுவந்த நிலையில் சில குறைகள் புலப்பட்டன. புறத்திரட்டு அடிநிமிர்ந்து சென்ற செய்யுட்கள் பலவற்றையுடைய பெருநூலாய் முடிந்தது. திருக்குறளிலிருந்து ஒரு செய்யுளேனும் இத்திரட்டின்கண் காணப்பெறவில்லை. பல நூல்களைக் கற்க விரும்பாதவர்க்கு இவைகள் பெருங்குறைகளாகவே தோன்றின. எனவே, இதற்கொரு சுருக்கம் வேண்டுவது இன்றியமையா தாயிற்று. இங்ஙன மெழுந்த புறத்திரட்டுச் சுருக்கமொன்று சென்னை அரசாங்க நூல்நிலயத்தின்கண் உள்ளது. இதன்கண் அறத்துப்பாலில் 195 செய்யுட்களும் பொருட்பாலில் 418 செய்யுட்களும் உள்ளன ; மொத்தச் செய்யுள் 613. இப்பிரதியிலே காமத்துப்பால் என்ற பகுதி இல்லை.

இப்பிரதியைத் தவிர வேறொருவகையான புறத்திரட்டுச் சுருக்கப் பிரதியும் உள்ளது. இதன்கண் மேலைச் சுருக்கத்திலுள்ள செய்யுட்க ளோடு திருக்குறட் செய்யுட்களும் திருமலை வெண்பாச் செய்யுட்களும் காணப்படுகின்றன. ஓர் ஏட்டுப்பிரதியின் இறுதியில் 'அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் வகை ௩-க்கு வெண்பா விருத்தம் பஃறொடை ஆசிரியம் அகவற்பா ௭௱௰௩ புறத்திரட்டுச் சுருக்கம் முற்றும். உ. சிவகடாட்சம் உண்டாகுக. உ ௲ச௰௮௵ ஸ்ரீமுக௵ சித்திரை௴ உகஉ திருநெல்வேலியில் எழுதிமுடிந்தது உ' என்று காணப்படுகின்றது. இப்பிரதி திருநெல்வேலியில் எழுதப்பட்டுள்ள

மையால் 'திருமலை வெண்பா' என்றநூல் அந்தப்பிரதேசத்தில் எழுதப் பெற்றதாயிருத்தல் வேண்டும். காவை வடமலையப்ப பிள்ளையனவர்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பெற்ற வடமலை வெண்பா, நெல்லைப் பிரதேசத்தில் மிகவும் பிரசித்தமானதே. அப் பிள்ளையனவர்களின் புதல்வரும் திருநெல்வேலிச் சீமையை கி. பி. 1663 முதல் 1682 வரையில் நிர்வகித்து வந்தவருமாகிய திருமலைக்கொழுந்துப் பிள்ளையனவர்கள் மீது இத்திருமலைவெண்பா இயற்றப்பெற்றிருத்தல் வேண்டும். பாட்டுடைத் தலைவர் எத்துணைச் சிறந்தவராயிருப்பினும் அவர்மீது இயற்றப்பட்ட திருமலைவெண்பாவை அத்துணைச் சிறந்த நூலாகக் கொள்ளுதற்கு இடமின்று. அதினின்றும் எடுத்த ஒரு செய்யுளை நோக்கி இவ் வுண்மையைத் தெரிந்துகொள்ளலாம் :

தூசு துரோபதைபாற் சோர்வுகண்டும் பாண்டவர்கோன்
மாசினம்விட் டான்றிரும லைக்கொழுந்தே—தேசுபெற
உள்ளிய வெல்லா முடனெய்து முள்ளத்தா
னுள்ளான் வெகுளி யெனின்.

இவ்விருவகைச் சுருக்கநூற் பிரதிகட்கும் பேற்புறமாகத் தற்காலத்துள்ளார்கள் எழுதிவைத்துள்ள பெயரானது இந்நூற் பிரதி எவ்வாறு தமிழ்மக்களுக்குப் பயன்பட்டு வந்ததென்பதை நன்றாக உணர்த்துகின்றது. இப்பெயர் 'பிரசங்காபரணம்' என்பது. பிரசங்கம் புரிவதற்கு உதவும்படியாகத் தொகுத்த செய்யுட்களைக் கொண்டது இத்திரட்டு என்பது இப்பெயரை வழங்கத் தொடங்கியவர் கருத்தாதல் வேண்டும். சாமானிய மக்களுக்குப் புறத்திரட்டுச் சுருக்கம் என்ற பெயராற் பொருள் விளங்காமையினாலே மேற்சுட்டிய பெயரையே நூலுக்கு இட்டு வழங்கலாயினர். இன்றும் பிரசங்காபரணம் என்பதுதான் உண்மைப் பெயரென்று மயங்குவாரும் உளர். இப்பெயரின் பொருளையும் அறிந்துகொள்ள பாட்டாது பிரசங்கபுராணம் என்று எழுதி வைத்தோரும் உளர்.

புறத்திரட்டுச் சுருக்கம் பிரசங்காபரணம் என வழங்கியது

இந்நூலின் காலத்தைக் குறித்துத் திட்டமாக யாதுங் கூறமுடியவில்லை. என்னிடமுள்ள ஏட்டுப்பிரதிகள் இரண்டும் மிகப்பழையபிரதிகளே. கால முதலியவற்றைத் தெரிவிக்குங் குறிப்பு அவற்றில் யாதுங் காணப்படவில்லை யெனினும், அவை உத்தேசமாக 200 ஆண்டுகட்கு முன்பு எழுதப்பட்டனவாகலாமென அவற்றின் நிலைமைநோக்கிக் கூறுதல் ஒருவாறு இயலும். மேற்கூறிய இருவகைப் புறத்திரட்டுச்சுருக்கங்களுள் ஒன்று 17-ம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தோன்றியிருக்க வேண்டுமென்பது திருமலைக்கொழுந்துப் பிள்ளையனவர்களைப் பற்றியுள்ள செய்யுட்கள்

புறத்திரட்டின் காலம்

அதன்கண் கோக்கப்பெற்றிருத்தலால் அறியலாம். பிறிதொருவகைச் சுருக்கம் மேற்குறித்த சுருக்கத்திற்குச் சிலகாலமேனும் முந்தியதாதல் வேண்டும். எனவே, அது 17-ம் நூற்றூண்டின் தொடக்கத்தில் தோன்றியதாகக் கொள்ளலாம். ஆதலால் உத்தேசம் கி. பி. 1600-ல் புறத்திரட்டு நன்கு அறியப்பட்ட வேரர் நூலாக விளங்கியிருத்தல் வேண்டும். ஒருநூல் நீண்டகாலமாகப் பிரசாரத்திலிருந்து அதன் பயன் பலராலும் நன்குணரப்பட்ட பின்னரே, அதற்கொரு சுருக்கந் தோன்றுதல் இயல்பாகும். இத்துணிபு பொருந்துவதே யென்பதற்குப் பிறிதொரு செய்தியும் உள்ளது. மதுரைத் தமிழ்ச் சங்கத்திலுள்ள புறத்திரட்டுப் பிரதியொன்றிற் கடவுள் வாழ்த்தில் குருகைமான்மியச் செய்யுட்கள் இரண்டு காணப்படுகின்றன. இவைகள் புறத்திரட்டிற் பிற்படச் சேர்க்கப் பட்டுள்ளனவென்று கொள்ளுதற்குத் தக்க நியாயம் உளது. குருகை மான்மியம் கொல்லம் 723-ல் (கி. பி. 1548) இயற்றப்பெற்றதென அதன் பதிகச் செய்யுளால் அறிகின்றோம். எனவே 16-ம் நூற்றூண்டின் முற் பகுதிக்குமுன்னரே புறத்திரட்டு என்றதொகைநூல் பிரசாரத்திலிருந்த தெனல் விளங்குகின்றது. புறத்திரட்டிலே வந்துள்ள நூல்களிற் காலத்தாற் பிற்பட்டது கம்பராமாயணமாகும். நளவெண்பாவிலிருந்து ஒரேயொருசெய்யுள் (550) காணப்படுகின்றது ; ஆனல் இதனைப் பாரதச் செய்யுளெனப் புறத்திரட்டுப் பிரதிகள் சில குறிக்கின்றன; பாரதச் செய்யுளைப் புகழேந்தியார் தமதுநூலகத்து எடுத்தாண்டு போற்றி யிருத்தலும் கூடும் ; இரும்பல் காஞ்சிச் செய்யுளொன்று (5) நளவெண்பா விற் காணப்படுவதும் ஈண்டு நோக்கத் தக்கது ; ஆகவே நளவெண்பாவி லிருந்து இச்செய்யுள் எடுக்கப்பட்டதென ஒருதலையாகத் துணிதல் பொருந்தாது. கம்பர் தமது அரும்பெரும் காப்பியத்தை 12-ம் நூற்றூண் டின் பிற்பகுதியில் இயற்றினரென அறுதியிடப்படுகின்றது. எனவே நாம் ஆராய்ந்துவரும் இத்தொகைநூல் 13-ம் நூற்றூண்டிற்கும் 16-ம் நூற்றூண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் அதாவது சுமார் 500 ஆண்டு களுக்கு முன்பு தொகுக்கப்பெற்றிருக்கலாமெனக் கொள்ளுதல் தகும்.

இங்கே குறிப்பிட்ட காலம் வேறு சில காரணங்களாலும் வலியுறு கின்றது. இப்போது இறந்துபட்டனவாகக் கருதப்படும் குண்டலகேசி, வளையாபதி, முத்தொள்ளாயிரம், தகடூர் யாத்திரை முதலிய நூல்களி னின்றும் பல செய்யுட்கள் இந்நூலின்கண் காணப்படுகின்றன. ஆதலால் அவை வழக்கிலிருந்த காலத்தில் இது தொகுக்கப்பெற்றதாகல் வேண்டும். மேலும் சூளாமணி, சிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி, சாந்திபுராணம், மேருமந்தர புராணம் முதலியனவும் பல செய்யுட்களை இந்நூலிற்கு உதவியிருக்கின்றன. ஆதலால் பௌத்த நூல்களும் ஜைன நூல்களும் பயின்றுவந்த காலத்தில் இந்நூல் தொகுக்கப்பெற்றதெனக்

கொள்ளுதல் வேண்டும். இவ்விரண்டு செய்திகளையும் நோக்குமிடத்தும் மேலைமுடிவு பொருத்தமுடையதாகவே தோன்றுகிறது.

புறத்திரட்டின் பின்னர் எழுந்த தொகை நூல்கள்

கி. பி. 15-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் புறத்திரட்டு இயற்றப் பெற்றிருக்கலாமென்று மேலே கூறினேன். இக் காலத்திற்குப் பின்னர்த் தோன்றிய தொகை நூல் களைக் குறித்து ஒரு சிறிது நோக்குவோம். தொகை நூல்கள் இருவகையுள் தனிப்பாடல்களின் தொகுதியா யுள்ளனவற்றில் தமிழ் நாவலர் சரிதையை யாவரும் அறிவர். இதன்கண் புலவர்களொரு சிலர் சமயோசிதமாகப் பாடிய செய்யுட்கள் சந்தர்ப்ப விளக்கத்துடன் தரப்பட்டுள்ளன. இந்நூல் தோன்றியது ஏறக்குறைய 300 வருடங்கட்கு முன்பாகலாம். தமிழ் நாவலர் சரிதையைப்போன்ற பிறிதொரு நூல் அருந்தமிழ்த் திரட்டு என்பது. இது தஞ்சை சரஸ்வதி மஹால் நூல் நிலயத்துப் புத்தகப்பட்டிகை முதற்றொகுதியில் 272-ம் பக்கத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. இதில் காளமேகம், ஒட்டக்கூத்தர் முதலிய பல புலவர்கள் பல சமயங்களில் பாடிய தனிப்பாடல்கள் இருக்கின்றன. தஞ்சை நூல் நிலயத்தில் 'தனிப்பாடற்றிரட்டு' என்ற பெயருடன் எட்டு வெவ்வேறு நூல்களும் குறிக்கப்பட்டுள்ளன. இவையாவும் அருந் தமிழ்த்திரட்டுப் போன்றனவே. இவை தோன்றிய காலமுதலிய விவரங்கள் இப்போது அறிதற்கில்லை. தமிழ்ப்புலவர்களது சரித்திர ஆராய்ச்சிக்கு இந்நூல்கள் மிக இன்றியமையாதனவாகும். இவ்வகை நூலின் அருமையை யுணர்ந்து ஸ்ரீமான் பொன்னுசாமித் தேவரவர்கள் 'தனிப்பாடற்றிரட்டு' என்று வழங்கும் அழகிய தொகை நூலினைத் தொகுப்பித்தார்கள்.

பலநூல்களினின்றும் தொகுத்த திரட்டுக்களும் பல தோன்றலாயின. பன்னூற்றிரட்டு என்னும் பெயர் கொண்ட நூலொன்று தஞ்சை சரஸ் வதி மஹால் நூல் நிலயத்தில் உள்ளது. 'இதில் கம்பராமாயணம், பாரதம், புறநானூறு, சிலப்பதிகாரம், சிந்தாமணி, குறள், பழமொழி, நாலடியார், பட்டினத்தார் பாடல், நைடதம் முதலிய பல நூல்களினின்றும் தேர்ந் தெடுத்துத் திரட்டப்பட்ட செய்யுட்கள் இருக்கின்றன; சிதிலமா யிருக்கிறது' என்று இந்நூல் நிலயத்துத் தமிழ்ப்பட்டிகை முதற் றொகுதியில் 278-ம் பக்கத்தில் விவரிக்கப்பட்டுளது. இப்பிரதியை யானே நேரிற்சென்று நோக்கியபொழுது பல நூல்கட்குரிய ஒற்றை யேடுகளை யொன்றாகச் சேர்த்துப் 'பன்னூற்றிரட்டு' எனப் பெயரிட்டு வைக்கப்பட்டுள்ளதெனத் தெரிந்தேன். பன்னூற்பா, சின்னூற்றிரட்டு என்ற இரண்டுநூல்கள் சென்னை அரசாங்க நூல்நிலயத்தின்கண்ணே உள்ளன. நம்முன்னோரது அறிவுரைக்களஞ்சியமாக விளங்கும் இவ்

வகை நூல்களின் அருமையை யுணர்ந்து ஸ்ரீமான் பாண்டித்துரைத் தேவரவர்கள் 'பன்னூற்றிரட்டு' என்ற பெயரால் நூலொன்று வெளியிட்டிருக்கிறார்கள்.

மேற்குறித்தனவேயன்றி வேறுவகையான தொகைநூல்களும் பிற்காலத்துத் தோன்றின. பலர்பேரிற் பல புலவர்கள் பாடிய வண்ணங்களைத் தொகுத்து 'வண்ணத்திரட்டு' எனப் பெயரிட்ட நூல்கள் சில வுள்ளன. பல கோவைப் பிரபந்தங்களினின்றும் செய்யுட்களைத் தொகுத்து, 'கோவைக்கொத்து' முதலியனவாகப் பெயரிட்ட நூல்கள் ஒருசில வுள்ளன. பலநூல்களிலுமுள்ள தோத்திரங்களைத் தொகுத்து, 'சிவபுராணுதி தோத்திர மஞ்சரி' முதலியவாகப் பெயரிட்ட ஒருசில நூல்கள் உள்ளன. சில சிற்றரசர்களையும் ஸம்ஸ்தானங்களையும் பற்றியனவாய் 'ஊற்றுமலைத் தனிப்பாடற்றிரட்டு' முதலியவாகப் பெயர் கொண்டெழுந்த ஒருசில நூல்களும் உள்ளன. கடவுள் வாழ்த்தியல், அறவியல்; பொருளியல் எனப் பகுத்து, தமிழ்நாவலர் சரிதை முறையையும் தனிப்பாடற்றிரட்டு முறையையும் பின்பற்றி, இலக்கியசரித முதலியவற்றிற்குப் பயன்படவேண்டுமென்ற நோக்கத்துடன் அமைத்த 'பெருந்தொகை' என்னும் அரியதொகை நூலொன்றும் சென்னை லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ மு. இராகவையங்காரவர்களால் 1936-ல் வெளியிடப்பட்டுள்ளது.

நமது மொழியிலுள்ள தொகைநூல்கள் அனைத்தையும் இவ்வளவென இங்கே கணக்கிட்டு முடித்துக்கூறியதாக எண்ணுதல் தவறு. தஞ்சை சரஸ்வதி மஹால் நூல்நிலயத்தும், சென்னை அரசாங்க நூல்நிலயத்தும் உள்ள நூற்பட்டிகைகளையும் அச்சில் வெளிவந்துள்ள நூல்களையும் முக்கியமான ஆதாரமாகக் கொண்டே மேலே வரலாறு எழுதப்பெற்றுளது. மதுரைத் தமிழ்ச் சங்க நூல்நிலயத்துள்ள நூற்பட்டிகை அச்சில் உள்ளதேனும், அது தமிழாராய்ச்சியாளர்க்குப் பயன்படும்படி பிரசுரமாகவில்லை. பிற இடங்களிலுள்ள நூல்கள் இன்னவென அறிதற்கு எவ்வகையான வழியும் இருப்பதாகத் தோன்றவில்லை. தமிழ்நூற் பிரதிகளை நிலயங்களில் தொகுத்து வைப்பதற்கும் அவற்றின் உள்ளுறை முதலியன அடங்கிய நூற்பட்டிகைகள் வெளியிடுவதற்கும் அரசாங்கத்தார் முயற்சி செய்தல் அவசியமாகும். தமிழ்நூல்களைத் தொகுத்து வைத்திருப்போரும், அவற்றைத் தமிழறிஞர்கள் பிரதிசெய்து கொள்ளுதற்கு வசதியளிப்பாராயின் பல நூல்களும் அச்சில் வெளிவருதல் கூடும். தமிழ்ப்பணி ஆற்றுதலில் இதுவும் ஓர் சிறந்த முறையாகும்.

III

தொகைநூல்களின் வகைகளைக் குறித்தும், புறத்திரட்டிற்கு முற்படத் தோன்றிய தொகைநூல்களைக் குறித்தும், புறத்திரட்டின் அமைப்பினைக் குறித்தும், அதற்குப் பிற்பட வெழுந்த தொகைநூல்களைக் குறித்தும் இதுகாறும் ஆராய்ந்தோம். இனி, புறத்திரட்டினால் தமிழிலக்கியம் எவ்வாறு வளமடைந்துள்ளது என்பதனை ஆராய்தல்வேண்டும்.

புறத்திரட்டினால் விளைந்த தமிழ் வளம்

முதலாவது பெயர்போலும் வேறுவழியாகக் கேள்வியுற்றிராத ஒரு சில நூல்களைப்பற்றிப் புறத்திரட்டினால் அறிகின்றோம். ஆசிரியமாலை என்பது இவற்றுளொன்று. இந்நூலின்கணுள்ள 'குடிப்பிறப் புடுத்துப் பனுவல் சூடி' (புறத்திரட்டு, 827) என்ற செய்யுள் தொல்காப்பியத்துப் புறத்திணையிய லுரையிலே (சூ. 17) 'எட்டுவகை நுதலிய அவையகத்தானும்' என்றதனை விளக்குமிடத்து இளம்பூரணரால் எடுத்தாளப்பட்டுள்ளது. இம்மேற்கோளினை மனத்துட்கொண்டே தொல்காப்பியனார் சூத்திரம் இயற்றியிருத்தலுங் கூடும். ஆகவே இச்செய்யுள் மிகப் பழமையானது என்பதில் ஐயமில்லை. கீழ்வருஞ் செய்யுளை நோக்குக:

ஆசிரியமாலை

அரையது துகிலே மார்பின தாரம்
முடியது முருகுநாறுந் தொடையல் புடையன
பால்வெண் கவரியின்கற்றை மேலது
மாலை தாழ்ந்த மணிக்காற் றனிக்குடை
முன்னது முரசுமுழங்கு தானை யிந்நிலை
இனைய செல்வத் தீங்கிவர் யாரே
தேவ ரல்ல ரிமைப்பதுஞ் செய்தனர்
மாந்த ரேயென மயக்கம் நீங்கக்
களிற்றுமிசை வந்தனர் நெருந லின்றிவர்
பசிப்பிணி காய்தலி னுணங்கித் துணியுடுத்து
மாசுமீப் போர்த்த யாக்கையொடு
தாமே யொருசிறை யிருந்தனர் மன்னே. (புறத். 357)

இது 'யானை யெருத்தம் பொலியக் குடைநிழற்கீழ்ச்-சேனைத்தலைவராய்ச் சென்றோரும் - ஏனை - வினையுலப்ப வேறாகி வீழ்வர்' என்ற நாலடிச் செய்யுட் கருத்தைப் பின்பற்றியதாதல் காணலாம். ஆகவே, இதனை 'குடிப் பிறப் புடுத்துப் பனுவல் சூடி' என்றதன் பிற்காலத்தெழுந்த செய்யுளாகக் கொள்ளுதற் கிடமுண்டு. ஆசிரியமாலையில் வருஞ் செய்யுளொன்று

மாவண் சோணாட் டேர்தொறும்
ஏரோர் களவழி வாழிய நெடிதே (புறத். 846)

எனச் சோணாட்டினைச் சிறப்பித்துக் கூறுகின்றது. பிறிதொரு செய்யுள்

> ... ... பாண்டியர்
> பாடுதமிழ் வளர்த்த கூடலின் வடாஅது
> பல்குடி துவன்றிய கள்ளியம் பெரும்பதிச்
> சால்புமேந் தோன்றிய தாழி (புறத். 1492)

எனப் பாண்டிநாட்டுப் பதியொன்றையும் அங்கே வாழ்ந்துவந்த தாழி யென்னும் வள்ளலையும் புகழ்கின்றது. இராமசரிதம் பற்றி நான்கு செய்யுட்களும் (1332, 1333, 1343, 1368), நிரைகோடல்பற்றி ஒரு செய்யுளும் (1242), கொடுங்கோன்மைபற்றி ஒரு செய்யுளும் (679), நிலையாமைபற்றி நான்கு செய்யுட்களும் (357, 369, 392, 402), தவம் பற்றி ஒரு செய்யுளும் (283), அறன் வலியுறுத்தல் பற்றி ஒரு செய்யுளும் (49) ஆசிரிய மாலையினின்றும் புறத்திரட்டில் தரப்படுகின்றன. இங்ஙனமாக, காலத்தாலும் இடத்தாலும் நூற் பொருளாலும் ஒன்றோடொன்று ஒவ்வாது பல திறப்பட்டனவாக மேற் குறித்த செய்யுட்கள் இருத்தலின், ஆசிரியமாலை என்பது புறத் திரட்டிற்குமுன் வழங்கிய ஒரு தொகைநூலாதல் வேண்டுமெனக் கருதல் தகும். '.குடிப்பிறப்புடுத்து' என்றதனை மேற்கோள் காட்டிய வுரை காரருள் ஒருவரேனும் அதனை இன்னநூற்குரிய செய்யுளெனக் கூறா மையும் இக்கருத்தினையே ஒருவாறு ஆதரிக்கின்றது. ஆசிரியமாலை என்னும் பெயரினின்றும் இத்தொகைநூல் அகவற்பாக்களால் தொகுக்கப் பெற்றதென்பது புலனாம்.

வேறொரு வகையான அனுமானத்திற்கும் இடமுண்டு. இப்பெயர் 'வெண்பாமாலை' என்னும் பெயர் போலவே அமைந்துள்ளது காணலாம். 'வெண்பா மாலை' யென்பது ஐயனாரிதனாரது புறப்பொருள் வெண்பா மாலையினையே யாண்டுஞ் சுட்டுவதாகும். சூத்திரமும் சொளுவுமாக இயற்றப்பட்ட இந்நூலினது உதாரணங்களனைத்தும் வெண்பாக்களாக இருத்தலின், வெண்பாமாலையென இது வழங்கப்பெறலாயிற்று; புறத் திரட்டும் இதனை இப்பெயரானேயே யாண்டுங் குறிக்கின்றது. இந் நூலினைப்போலவே, ஆசிரியமாலையும் அகவற்பாக்களானியன்ற உதாரணச் செய்யுட்களையுடையதோர் புறப்பொருள் நூலாக இருத்தலுங் கூடும். இங்ஙனமாயின், இவ்வுதாரணங்கள் பல நூல்களினின்றுந் திரட்டப்பட்டன வாதல் வேண்டும்.

ஆசிரியமாலையின் இயல்பு எவ்வாறாயினும் அஃது ஓர் சிறந்த நூலாதல் வேண்டுமென்பது அதினின்று தொகுக்கப்பட்டுள்ள செய்யுட் களால் இனிது விளங்கும். அதுபோன்று சிறந்த பிறிதொரு நூல்

இரும்பல்காஞ்சி யென்பது. 'நீல நெடுங்கொண்மூ' என்று தொடங்கும் செய்யுளொன்று நளவெண்பாப் பிரதிகளிற் காணப் படுகின்றது. இஃது இரும்பல்காஞ்சியைச் சார்ந்த தெனப் புறத்திரட்டினால் (5) தெரிகின்றோம். இது தவிர வேறு இரண்டு செய்யுட்களும் இந்நூலைச் சார்ந்தனவாகப் புறத் திரட்டில் தரப்பட்டுள்ளன. இரண்டும் புறம்பற்றியனவே. ஒன்று (601) வலியறிதல் கூறுவது; மற்றொன்று (1475) தொண்டையர்கோனைப் புகழ்வது.

இரும்பல் காஞ்சி

இந்நூலினின்று இரண்டு செய்யுட்பகுதிகள் தக்கயாகப்பரணி யுரையாற் பெறுகின்றோம். அவை வருமாறு :

எய்கணை விழுந்துளை யன்றே செவித்துளை
மையறு கேள்வி கேளா தோர்க்கே. (தாழிசை 189, உரை)

பருதிக் கருவின் முட்டைக் கதிர்விடும்
பெருங்குறை வாங்கி வலங்கையிற்
பூமுத லிருந்த நான்முகத் தனிச்சுடர்
வேதம் பாடிய மேதகப் படைத்தன
எண்பெரு வேழம். (தாழிசை 276, உரை)

'காஞ்சி' என்பதற்கு 'உட்கா தெதிரூன்றல்' என இலக்கணம் கூறப்பட்டுளது. இவ்வகையான புறப்பொருள் பற்றியதே இரும்பல் காஞ்சியென்று எண்ணுதல் தகும். முத்தொள்ளாயிரம் போன்று தமிழ் நில மன்னர் அனைவரது வீரச் செயல்களையும் இந்நூல் புகழ்ந்து கூறுவது போலும். இரும் பல் என்ற அடைகளால் இது மிக விரிந்ததோர் நூலாதலும் ஊகித்தல் கூடும். வேறு யாதொன்றும் இந்நூலைக் குறித்து அறிதற்குக் கூடவில்லை.

புறத்திரட்டினால் அறியப்படும் பிறிதொரு நூல் 'சாந்தி புராணம்' என்பது. இப்புராணத்தினின்றும் 9 செய்யுட்கள் தொகுக்கப்பட் டுள்ளன. அவற்றுள் இரண்டு செய்யுட்கள் (173, 448) மேருமந்தர புராணத்திலும் காணப்படுகின்றன. ஏனைய 7 செய்யுட்கள், புணர்ச்சிவிழையாமை (292), கள்ளாமை (306, 307), மெய்யுணர்தல் (442), அமைச்சு (742), பொது மகளிர் (1057, 1058) என்ற பொருள்கள் பற்றியன.

சாந்தி புராணம்

ஜைன நூலாகிய மேருமந்தர புராணத்தோடு இயைபுடைமையால் சாந்திபுராணமும் ஜைனநூ லென்பது போதரும். பெயர் நோக்கிய அளவிலே, 16-வது தீர்த்தங்கரராகிய சாந்திதேவரது சரித்திரத்தை இந்நூல் விருத்தயாப்பால் விரித்துணர்த்துவதென்று துணியலாம்.

கன்னட மொழியிலே இத்தீர்த்தங்கரரது வரலாறு கூறும் *சாந்திபுராண மொன்று உண்மையும் மேலே முடிபினையே வற்புறுத்துகின்றது.

நாரத சரிதை என்ற பெயருடைய ஓர் நூலினின்றும் 8 செய்யுட்கள் புறத்திரட்டில் வந்துள்ளன. இந்நூலும் சாந்தி புராணம் போன்று ஓர் சரித்திரம் பற்றியதே யாகல் வேண்டும். இதன்கட் கூறப்பட்டுள்ள சரித்திரம் யாது? எச்சமயத்தை இது சார்ந்தது? இக்கேள்விகள் போன்றன தீரா வினுக்களாகவே என்றும் இருந்து விடுமோ வென்ற ஐயம் தமிழன்பர்களுக்கு எழுதல் இயல்பே. புறத்திரட்டிற் காணுஞ் செய்யுட்களால் ஒரு சில உய்த்துணரத் தக்கன.

நாரத சரிதை

வல்லென்ற சொல்லும் புகழ்வாய்மை வழீஇய சொல்லும்
இல்லென்ற சொல்லு மிலனுகலின் யாவர் மாட்டும்
சொல்லுங் குறையின் மையிற்சோரரு மின்மை யாலே
கொல்லென்ற சொல்லு முரைகற்றிலன் கொற்ற வேலான்.

(புறத். 496)

இச்செய்யுளால் நாரதசரிதை அரசனொருவனது சரித்திரம் கூறுவதற் கமைந்ததென்பது தெளிவாம். இஃதுஉண்மையாயின், அரசனது நாடு, நகர், அரண்மனை முதலியவற்றைப் புகழ்ந்துரைக்கும் செய்யுட்கள் இந் நூலின்கண் உளவாதல் வேண்டும். இவ்வனுமானத்திற் கேற்பவே,

மன்னன்மேவு கோயில்மேரு மானமற்றிம் மண்ணெலா
மென்னலாய வூரிடத் திலங்குமாளி கைக்குலம்
பொன்னின்மேரு வின்புறப் பொருப்புநேர வப்புறந்
துன்னுநேமி வெற்பையென்பர் சூழ்மதிற் பரப்பையே

(புறத். 861)

என்ற செய்யுள் காணப்படுகின்றது. தொடர்ச்சியாகச் சில செய்யுட்களேனும் கிடையாத நிலைமையில் அரசனது சரித்திரம் இன்னநெறியிற் செல்வது என அறிவதற்கு இயலவில்லை. எனினும் புறத்திரட்டி லுள்ளன வற்றில் இரண்டு செய்யுட்கள் (425, 426) துறவினை வற்புறுத்துகின்றன; மற்றைச் செய்யுட்கள் (304, 1060, 356, 414) உலகவின்பம் இழிவாதலையும் நிலையற்றனவாதலையும் உணர்த்துகின்றன. இவற்றை நோக்கும்போது கதாநாயகனுகிய அரசன் உலகவின்பத்தை இறுதியில்

* இந்நூல் 'பொன்ன' என்ற பெயருடைய பெரும்புலவரால் பத்தாம் நூற்றுண்டின் இடைப்பகுதியில் இயற்றப்பெற்றது. சென்னை சர்வகலாசாலையில் கன்னடத்துறைத் தலைவர் ஸ்ரீ A. வெங்கட்ட ராவ் அவர்களாலும் ஜூனியர் லெக்சரராக விருக்கும் ஸ்ரீ H. சேஷையங்காரவர்களாலும் இந்நூல் வெளியிடப் பெற்றுள்ளது.

நீத்துத் துறவு பூண்டனன் என்பது பெறப்படலாம். இத்துணையே இந்நாற் சரிதத்தில் நம்மால் அறியக் கிடப்பது.

ஆனால் இச்சிறு முடிபினின்றும் ஒரு முக்கியமான செய்தி விளங்குகின்றது. ஜைன சரிதங்கள் பலவும் இறுதியிற் கதாநாயகன் துறவுபூண்டு முத்தியெய்துகின்றதனோடு முடிகின்றன. உதாரணமாக சீவகசிந்தாமணி, சூளாமணி முதலியவற்றைக் காண்க. நாரதசரிதையும் இவ்வாறு முடிவதெனக் கொள்ளத்தக்கதா யிருத்தலாலே, இதுவும் ஒரு ஜைன சரிதமாகவே இருக்கலாமெனத் தோற்றுகின்றது. ஸ்ரீபுராணத்தில் நாரதன், பர்வதன் என்னும் இருவர்களது சரித்திரம் கூறப்பட்டுளது.[1] இச்சரித்திரம் பற்றிய நூலாகவே நாரத சரிதை அமைந்ததாதலும் கூடும். இதன்கணுள்ள 'ஆசை யல்குற் பெரியாரை' (1060) என்னுஞ் செய்யுள் யாப்பருங் கலவிருத்தியுரையில் (பக். 365) மிகையெண்ணிரணிறைக்கு உதாரணமாகத் தரப்பட்டுள்ளது. ஆகவே விருத்தியுரையின் காலமாகிய 11-ம் நூற்றாண்டிற்கு முற்பட்டது இந் நாரதசரிதையென்பது விளங்கும்.

புறத்திரட்டினாலன்றிப் பிறவாறு அறியலாகாத நூல்களுள் கடைசியாகக் கூறநிற்பது பெரும்பொருள்விளக்கமாம். இந்நூலினின்றும் 41 செய்யுட்கள் தொகுக்கப்பட்டுள்ளன. ஈகை (228), அறிவுடைமை (542), குடிமரபு (1159-1161), நிரைகோடல் (1236-1240), நிரைமீட்சி (1245-1250), பகைவயிற் சேறல் (1255-1256), பாசறை (1271-1273), எயில்கோடல் (1325-1330), எயில் காத்தல் (1336-1340), அமர் (1347-1349), தானைமறம் (1362), யானைமறம் (1398-1400), களம் (1429), வாழ்த்து (1500) என்பன இச்செய்யுட்களால் உணர்த்தப்படும் பொருள்கள்.

பெரும்பொருள் விளக்கம்

இவையனைத்தும் புறப்பொருள் பற்றியன வாதலின் இந்நூல் புறப்பொருளை உதாரணங்களால் விளக்கும் ஓர் நூலாதல் வேண்டும். நச்சினார்க்கினியர் சிந்தாமணியுரையில் (187) 'பின்னர் நான்கும் பெருந்திணை பெறுமே யென்பதனான், ஒப்பும் பெருந்திணைப்பாற்படுங் கந்தருவமாமாறு *பெரும்பொருளா னுணர்க' என்று கூறியுள்ளார். இவ்வாக்கியத்தை நோக்கிய அளவில், பெரும்பொருள் என்பது ஓர் பொருளிலக்கண நூலாக இருத்தல் கூடுமென ஊகிக்கலாம். இவ்வூகம் பொருத்தமுடைத்தாயின், இவ்விலக்கண நூலினை மேற்கோளுடன் விளக்கிய வொரு நூலாகப் பெரும்பொருள் விளக்கம் இயற்றப் பெற்றதாகலாம். பெரும்

[1] இதனைத் தெரிவித்தவர் தமிழாராய்ச்சித் துறையில் ஜூனியர் லெக்சரராக விருக்கும் ஸ்ரீ வேங்கடராயலு ரெட்டியாரவர்கள்.

*'பெரும்பொருள், பெரும்பொருள் விளக்க மென்னும் நூலாக இருத்தல் கூடுமோ வென்பது ஊகிக்கப்படுகின்றது.' (சிந்தாமணி, 187 விசேடக்குறிப்பு.)

பொருள் விளக்கச் செய்யுட்கள் ஒருசில நச்சினார்க்கினியரால் புறத்திணை யுரையில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இது தோன்றிய கால முதலியன வொன்றும் இப்போது அறிதற்கில்லை.

இனி, பழையவுரைகளிலே பெயரான் எடுத்துக் கூறப்படும் நூல்கள் ஒரு சிலவற்றினின்றும் பல செய்யுட்கள் புறத்திரட்டினுல் தெரியவருகின்றன. தகடூர் யாத்திரை என்னும் நூல் தொல்காப்பியப் பொருளதிகார வுரையிலே ஒருசில விடங்களில் (சூ. 63, 67, 68, 72, 79, உரை) குறிக்கப்பட்டுளது.

தகடூர் யாத்திரை

இந்நூல் அதியமானுக்குரிய தகடூர்மீது சேரமான் படையெடுத்துச்சென்ற வரலாற்றினைக் கூறுவது. யாத்திரை என்னும் வடசொல் படையெடுத்துச் செலவு என்னும் பொருட்டாகும். அரசருக்குரிய ஸந்தி, விக்ரஹம், யாநம், ஆஸநம், த்வைதீபாவம், ஸம்ச்ரயம் என்னும் [1] அறுவகைக் குணங்களுள் யாநம் என்று கூறப்படுவதே யாத்திரையாகும். இஃது ஓர் சரித்திர நிகழ்ச்சி பற்றிய நூலாயினும் அந்நிகழ்ச்சி நடைபெற்ற காலத்துத் தானே இயற்றப் பெற்றதன்று; மிகப் பிற்பட்ட காலத்திலே இது தோன்றியதெனக் கொள்ளுதல் வேண்டும். ஏனெனின், இதனைப் பழையவாகிய கதை பொருளாகச் செய்யப்படுகின்றதொன்மை யென்பதற்கு இலக்கியமாகப் [2]பேராசிரியர் காட்டுகின்றனர். அன்றியும் இஃது உரைவிரவி யியற்றப்பட்ட தென்பதும் தொன்மைக்குரிய இலக்கணத்தாற் பெறுகின்றோம். புறத்திரட்டுப் பிரதிகளில் ஒருசில விடங்களில் 'தகடூர் மாலை' எனவும் இந்நூல் குறிக்கப்பட்டுளது.

'பாட்டிடை வைத்த குறிப்பினானும்' என்ற சூத்திரத்தின் (தொல். பொருள். 485) உரையில் 'பாட்டு வருவது சிறுபான்மை யாகலின்: அவை தகடூர்யாத்திரை போல்வன' என்று பேராசிரியர் எழுதியுள்ளார். எனவே இந்நூல் பெரும்பான்மை உரைநடையாலும் சிறுபான்மை செய்யுளாலும் இயன்றுள்ளமை தெளிவாகின்றது. செய்யுள் வெண்பாவும் ஆசிரியமு மாம். இச்சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் எழுதிய வுரையால், தகடூர்யாத்திரையிற் 'பிறபாடை தழுவிவந்த' பகுதிகளுமுள்ளனவென்று தெரிகின்றது.

புறத்திரட்டில் வருஞ்செய்யு ளொன்றால் சேரமானுக்கு அதியமான் தம்பி முறையினனென்பது பெறப்படுகின்றது :

கால வெகுளிப் பொறையகேள் நும்பியைச்
சாலுந் துணையுங் கழறிச் சிறியதோர்
கோல்கொண்டு மேற்சேறல் வேண்டா வதுகண்டாய்
நூல்கண்டார் கண்ட நெறி. (புறத். 776)

---

1. குறள் 485, உரை : நட்பாக்கல், பகையாக்கல், மேற்சேறல், இருத்தல் பிரித்தல், கூட்டல். 2. தொல். பொருள். 485, 549, உரை.

எனவே, தகடூர் யாத்திரைச் சரித்திரம் பாரதம் போன்று தாயத்தாரிடை நிகழ்ந்த போரின் வரலாற்றினை விளங்கக் கூறுவதாம். உற்று நோக்கு வோர்க்குப் பாரத சரித்திரத்திற்கும் இந்நூற் சரித்திரக்குறிப்புக்களுக்கும் ஒற்றுமை பல காணப்படும்.

இந்நூலினின்றும் 44 செய்யுட்கள் புறத்திரட்டிலே தொகுக்கப் பட்டுள்ளன. அவை அவையடக்கம் (புறத். 10), நீத்தார் பெருமை (19), ஈகை (227), செங்கோன்மை (666, 667), சொல்வன்மை (756), தூது (776, 785, 786), நாடு (844), புல்லறிவாண்மை (995), நிரை கோடல் (1241), நிரைமீட்சி (1251), பகைவயிற்சேறல் (1257, 1258), பாசறை (1274), வஞ்சினம் (1301, 1304), படைச்செருக்கு (1314-1321), எயில்காத்தல் (1341, 1342), தானைமறம் (1369-1377), குதிரைமறம் (1381), மூதில்மறம் (1403-1406), இரங்கல் (1437, 1453) என்னும் பொருள்கள் பற்றியன.

மேற்குறித்த செய்யுட்களேயன்றிப் பிறிதொரு செய்யுள் தகடூர் யாத்திரைக் குரியதாகத் தக்கயாகப்பரணி யுரையால் அறிகின்றோம். அச்செய்யுள் வருமாறு :

கனவே போலவு நனவே போலவு
முன்னிய தன்றியென் னுள்ளக நடுக்குறக்
கருநிறக் காக்கையும் வெண்ணிறக் கூகையும்
இருவகை யுயர்திணைக் கேந்திய கொடியொடும்
வெருவந்த தோற்றத்தா ருருவின பலகூளிக்
கணங்கள் குருதி மண்டைசுமந் தாடவும்
பறையன்ன விழித்தகண்ணாள் பிறையன்ன பேரெயிற்றாள்
குவடன்ன பெருமுலையா ளிடைகரந்த பெருமோட்டாள்
இடியன்ன பெருங்குரலாள் தடிவாயாற் றசைப்புறத்தாள்
கடலன்ன பெருமேனியாள் காண்பின்னுக் கமழ்கோதையாள்
சிலையன்ன புருவத்தாள் சென்றேந்திய வகலல்குலாள்
மழையு மஞ்சும் வளியும் போலுஞ்
செலவின ளொருபெண்டாட்டி
தலைவிரித்துத் தடக்கைநாற்றி
மறனெறிந்து மாறுகொண்டறியா
வறிவுக்கும் முறைநா ளிவ்வள வன்றே
பூவிரல் காட்டி நீறுபொங் கத்தன்
கைகளா னிலனடித் தூரை யிடஞ்செய்து
காடு புகுதக் கண்டே னென்னுங்
கவலை நேசமோ டவல நீந்தினள்
அன்றது மன்றவ் வதிகமான் றுய்க்கு. (தாழிசை 641, உரை)

இதுவேயன்றி, தொல்காப்பியப் புறத்திணையியல் நச்சினார்க்கினியருரை யிலே புறத்திரட்டிற்காணப்பெறாத மூன்று தகடூர் யாத்திரைச் செய்யுட்

கள் உள்ளன. அவை 'மெய்ம்மலி மனத்தி,' 'மறனுடைமறவர்க்', 'கலையெனப் பாய்ந்த' என்று தொடங்குஞ் செய்யுட்களாம்.

முத்தொள்ளாயிரம் என்னும் சிறந்த நூலைக் குறித்தும் உரைகள் மூலமாக நாம் அறிந்திருக்கின்றோம். இந்நூற் செய்யுட்களின் இனிமையை நன்குணர்ந்து, கிடைக்கக்கூடியவரை அவற்றைத் தொகுத்து முதன்முதல் வெளியிட்டவர்கள் ஸ்ரீ ரா. இராகவையங்காரவர்கள். தொல்காப்பியச் செய்யுளியலுரையில் (சூ. 239) 'புதிதாகத் தாம்வேண்டியவாற்றாற் பல செய்யுளுந் தொடர்ந்து வரச் செய்வ' தாகிய விருந்து என்பதற்கு முத்தொள்ளாயிரத்தைப் பேராசிரியர் உதாரணங் காட்டினர். ஆதலால் இவ் வருஞ்சுவைப் பெருநூலினை ஆசிரியர் தமது புலமை நுண்ணுணர்வினாலே அழகுபெறப் புதுவதாகப் புனைந்து இயற்றினாரென்று அறியப்படும்.

முத்தொள்ளாயிரம்

> நெடுவெண் பாட்டே முந்நான் கடித்தே
> குறுவெண் பாட்டி னளவெழு சீரே

என்ற செய்யுளியற் சூத்திரத்தின் (118) உரையில் நச்சினார்க்கினியர் 'இக்கருத்தானே கீழ்க்கணக்கினுள் நான்கடியும் ஈரடியுமே மிக வந்தவாறும் முத்தொள்ளாயிரத்து நான்கடியே மிக வந்தவாறுங் காண்க' என்று எழுதிச் செல்கின்றார். எனவே முத்தொள்ளாயிரத்துள் பெரும்பான்மையால் நான்கடி வெண்பாக்களே இருந்தன வென்பது அறியப்படும். சிறுபான்மை ஐந்தடிச் செய்யுட்களும் ஆறடிச் செய்யுட்களும் காணப்பட்டனவென்பது மேலைச் சூத்திரவுரையிற் பேராசிரியர் 'பதினெண் கீழ்க் கணக்கினுள்ளும் முத்தொள்ளாயிரத்தும் ஆறடியி னேறுமற் செய்யுள் செய்தார் பிறசான்றோரும்' எனக் கூறுதலால் உணரப்படும்.

இனி, இந்நூல் குறிக்கும் பொருள்களை நோக்குவோம். கடவுள் வாழ்த்துப் பற்றி ஒரு செய்யுளும் (புறத். 1), நாடுபற்றி 3 செய்யுட்களும் (829, 830, 831), நகர்பற்றி 3 செய்யுட்களும் (862, 863, 864), பகைப் புலம் பழித்தல் பற்றி 5 செய்யுட்களும் (1278-1282), திறைபற்றி 4 செய்யுட்களும் (1285-1288), எயில்கோடல்பற்றி ஒரு செய்யுளும் (1331), குதிரைமறம் பற்றி ஒரு செய்யுளும் (1380), யானைமறம்பற்றி 10 செய்யுட்களும் (1388-1397), களம்பற்றி 4 செய்யுட்களும் (1430-1433), வென்றிபற்றி 2 செய்யுட்களும் (1456, 1457), புகழ்பற்றி 10 செய்யுட்களும் (1464-1473), கைக்கிளைபற்றி 65 செய்யுட்களும் (1506-1570) ஆக மொத்தம் 109 செய்யுட்கள் புறத்திரட்டில் வந்துள்ளன. இவற்றில் கைக்கிளைச் செய்யுட்கள் மிகுதியாயுள்ளமை காணலாம். மூல நூலிலும் இங்ஙனமே கைக்கிளைச் செய்யுட்கள் மிக்கிருந்தனவென்பது

அங்கத்ப் பாட்டவற் றளவோ டொக்கும்

என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தி னுரையிற் பேராசிரியர் 'கைக்கிளைச் செய்யுள் முத்தொள்ளாயிரத்துட் பலவாயினும்' என்று எழுதியிருத்தலால் அறியலாகும்.

இச்செய்யுட்களில் சேர சோழ பாண்டியர் மூவரும் பாட்டுடைத் தலைவராய் விளங்குகின்றார்கள். முத்தொள்ளாயிரம் என்னும் நூற் பெயரை நோக்கும்போது முடியுடை மூவேந்தருள் ஒவ்வொருவரைக் குறித்தும் 900 செய்யுட்கள் பாடி, 2700 செய்யுட்களில் ஆசிரியர் நூலையியற்றி முடித்துள்ளாரென்று கருதுதல் உண்மையாகலாமெனத் தோன்றுகிறது. இந்நூலின் ஆசிரியரைக் குறித்து இரண்டொரு குறிப்புக்களே கிடைக்கின்றன. 'மன்னிய நாண்மீன்' என்னும் கடவுள் வாழ்த்தினாலும் 'புகழ்' என்ற அதிகாரத்துள் வரும் 'மடங்கா மயிலூர்தி' 'செங்கணெடியான்மேல்' என்று தொடங்கும் செய்யுட்களாலும் இவர் சைவசமயத்தினராதல்வேண்டும். பேராசிரியர் இவரைப் பிற சான்றோருள் வைத்து எண்ணுகின்றமையால் சங்கத்துச் சான்றோர்கட்குப் பிற்பட்ட காலத்தில் வாழ்ந்தவரென்பதும் புலனும்.

புறத்திரட்டிற் சேர்க்கப் பெறாத முத்தொள்ளாயிரச் செய்யுளொன்று இளம்பூரணரது உரையால் தெரியவருகின்றது. அது வருமாறு :—

> எற்றூர்தி யானு மிகல்வெம்போர் வானவனும்
> ஆற்றலு மாள்வினையு மொத்தொன்றி னெவ்வாரே
> கூற்றக் கணிச்சியான் கண்மூன் றிரண்டேயாம்
> ஆற்றல்சால் வானவன் கண்.

இச்செய்யுள் 'புகழ்' என்ற பகுப்பிலே சேர்தற்பாலது. புறத்திரட்டில் 'யானைமறம்' என்ற பகுப்பில் வரும் செய்யுளொன்று (1397) பொருள் காண வியலாதபடி பிழைபட்டுள்ளது. அது வருமாறு :

> இருங்களி ... ன்ற மடப்பிடி சார
> விருங்கருவி நீராற் றெளி...—நலங்கிளர்வேற்
> றுன்னரும்போர்க் கோதை துடா செருக்கின
> மன்னர் மதிலாய வென்று.

குண்டலகேசி

குண்டலகேசி என்ற நூல் பஞ்சகாவியங்களி லொன்றென்று கருதப்பட்டு வருகின்றது. இதற்கேற்ப வீரசோழிய வுரைகாரர் இக் காவியத்தினை 'அகலக்கவி' எனக் குறிப்பிக்கின்றனர். 'குண்டலகேசியும் உதயணன்கதையு முதலாக வுடையவற்றிற் றெரியாத சொல்லும் பொருளும் வந்தனவா லெனின், அகலக்கவி செய்வானுக்கு அப்படி யல்லது ஆகாது' (வீரசோ. அலங். 4,

உரை) என்பதனையும், 'இனிப் பாவிகமாவது அகலக்கவிப் புலவன் கருத்து. அஃது குண்டலகேசி, உதயணன் கதை முதலாயினவற்றுட் கண்டுகொள்க' (வீரசோ. அலங். 13, உரை) என்பதனையும் காண்க. இப்பெருநூலுக்குக் 'குண்டலகேசி விருத்தம்' என்ற பெயருண்மையும் இதன்கண்ணே கலித்துறைகள் வந்துள்ளமையும் வீரசோழிய வுரையினாலேயே (யாப்பு, 21, உரை) விளங்குகின்றன. யாப்பருங்கல வுரையினும் இந்நூல் கேட்கப்படுகின்றது. அங்கே 'சிந்தாமணி, சூளாமணி, குண்டலகேசி, நீலகேசி, அமிர்தபதி என்றிவற்றின் முதற்பாட்டு வண்ணத்தான் வருவன' என்று கூறப்பட்டிருத்தலோடு 'முன்றான் பெருமைக்க ணின்றான்' என்று வருங் கடவுள் வாழ்த்துச் செய்யுளும் உதாரணமாக எடுத்துக்காட்டப்பட்டுளது. ஆகவே இந்நூல் 'முன்றான் பெருமைக்க ணின்றான்' என்ற செய்யுளோடு தொடங்குகின்றது. நூற்செய்யுளொவ்வொன்றும் 'காதை' என்னும் பெயரால் வழங்கப்பட்டதென்பது 'இதனால் முன்றான் பெருமைக்க ணின்றான் என்னும் காதையை அநுவதித்தவாறு' என்பது முதலாகவரும் நீலகேசியுரையால் (176, உரை) அறியலாகும்.

இது பௌத்தசமயச் சார்பான நூல். இதன்கட் கூறப்பட்டுள்ள சரித்திரம்* வருமாறு:

'குண்டலகேசி யென்பாள் ஒரு வைசிய கன்னிகை. இவள் ஒருநாள் பிராஸாத ஸ்தலத்து விளையாடுகின்றாளாக, ஒரு கிதவ வைசியபுத்ரன் காளனென்பான் இவன் பௌத்ததர்சனங்கொண்டு பலவழியுஞ் சோர விருத்தி பண்ணிச் செல்வானை அரசன் வதிக்க வென்றேவச் சிறைப்பட்டுப் போகின்றானை, முன் சொன்ன குண்டலகேசி கண்டு காமபரவசையாக, அதனையறிந்து அவளுடைய பிதா, ராஜாவைக் கண்டு யாதானுமோருபாயத்தால் மீட்டு, இவனுக்குக் குண்டலகேசி யென்னும் கன்னிகையினை விவாஹ விதியாற் கொடுத்து இனிது செல்கின்ற காலத்து, ஒருநாள் ப்ரணய கலஹத்து நர்மோக்தி முகத்தால் நீ கள்வனன்றோ வென்று குண்டலகேசி சொல்ல, காளனுந் தன்னுள்ளத்தே சினங்கொண்டு பின்பொருநாள் வித்யாஸாதனவ்யாஜத்தால் இவளைத் தனிக்கொண்டு ஒரு பர்வதத்தேறி, நீ என்னை இவ்வாறு சொல்லுதலில் யான் உன்னைக் கொல்லத் துணிந்தேனென்ன, குண்டலகேசியும் 'தற்கொல்லியை முற்கொல்லிய' வென்பதன்றே, இவனை யான் கொல்வேனென நினைந்து யான் சாகின்றேனாகில் உம்மை வலங்கொண்டு சாவலென, அதற்கிசைந்த காளனை வலங்கொள்கின்றாள் வரையினின்றும் வீழ நூக்கினள். நூக்கக் காளனும் புத்த ஸ்மரணத்தினால் மோக்ஷித்தனன். குண்டலகேசியும் பர்த்ரு விரஹ துக்கிதையாகித் துறப்பனென நினைந்து பரசமயங்களெல்லாம் நாவல்நட்டு ஜயித்து பௌத்ததர்சனங்கொண்டு முத்தி பெற்றனள்.' (நீலகேசி, 286, உரை.)

* இச்சரித்திர முதலியன முதன் முதலில் செந்தமிழில் (தொகுதி 1, 3) வெளியிடப்பட்டன.

இச்சரித்திரம் பௌத்த நூலாகிய தேரிகாதையிலும் கூறப்பட்டிருக்கிறது. குண்டலகேசி யென்பது புனைபெய ரென்பதும் பத்திரை யென்பதுதான் உண்மைப் பெயரென்பதும், இவள் முதலாவதாக நிகண்டவாதியா யிருந்தாளென்பதும், அங்கே இவள் தலைமயிர் பறிக்கப் பட்டுச் சேர்க்கப் பெற்றாளென்பதும், பின்னர் தலைமயிர் வளர்ந்தபொழுது அடர்ந்து சுருண்டிருந்தமையால் 'குண்டலகேசி' எனப் பெயர் வழங்கப் பட்டாளென்பதும், இவளாற் கொல்லப்பட்ட இவளது நாயகனாகிய காளன் 'ஸத்துகன்' என்று வழங்கப்பட்டானென்பதும் பிறவும் இத் தேரிகாதை (46-ஆம் காதை)யால் விளங்குகின்றன.

இந்நூலிலே நிறுவப்பட்டுள்ள பௌத்தக் கொள்கைகளைத் தருக்கித்து மறுத்தற் பொருட்டே நீலகேசி என்ற ஜைனசமய நூல் தோன்றியதாகும். குண்டலகேசியிற் பௌத்தக் கொள்கைகள் பற்றிய செய்யுளொவ்வொன்றையும் எடுத்து நீலகேசி வியவகரிக்கின்றமை சமயதிவாகரரியற்றிய நீலகேசியுரையால் விளங்கும். ஆகவே தங்கள் சமயக் கோட்பாடு நிலையுறுதற்பொருட்டுக் குண்டலகேசியை ஜைனசமயத்தவர்கள் கற்றுவந்தனரென்பது புலனாம். இதனை 'அகலக்கவி' யென வீரசோழியம் கூறுதலானே பிற சமயங்களைச் சார்ந்த தமிழ்மக்களும் இந்நூலைப் பெருங்காப்பியங்களுளொன்று என்ற நிலையிற் கற்றுப போற்றி வந்தனராவர். எனினும் இந்நூலிலிருந்து கடவுள் வாழ்த்துச் செய்யுளொன்றே நமக்குக் கிடைப்பதாயிருந்தது. நீலகேசியுரையாற் குண்டலகேசிச் செய்யுட்கள் பலவற்றின் முதற்குறிப்புக்கள் மட்டுமே தெரிய வந்தன. புறத்திரட்டினுல் இப்போது 19 செய்யுட்கள் அகப்படுகின்றன. இவை கடவுள் வாழ்த்து (புறத். 7), அவையடக்கம் (13), தீவினையச்சம் (205), கூடாவொழுக்கம் (288), புணர்ச்சி விழையாமை (302, 303), யாக்கை நிலையாமை (388-391), தாய்தன்மை (410-413), இறைமாட்சி (494, 495), குற்றங்கடிதல் (551), இடுக்கணழியாமை (723, 724) என்னும் பொருள்கள்பற்றி வந்துள்ளன.

ஐம்பெருங் காப்பியங்களுள், உட்பொதிந்த சரித்திரம்போலும் அறிதற்கியலாதபடி மறைந்துவிட்ட வொருநூல் வளையாபதி*யாகும்.

வளையாபதி

'இது தமிழிலுள்ள பழைய காப்பியமைந்தனுளொன்று; இதன் பாடல்களுட் சில முன்னோருரைகளில் ஆங்காங்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளனவேயன்றி நூலின் முதனடுவிறுதி காணப்படாமையின் இந்நூல் இன்ன சரித்திரத்தை யுடையதென்றும், நூலாசிரியர் இன்னரென்றும் புலப்படவில்லை' என்று

* இந்நூற் செய்யுட்கள் பெரும்பாலன (செந்தமிழில் தொகுதி 1, 4) வெளியிடப்பட்டுள்ளன.

டாக்டர் சாமிநாதையரவர்கள் சிலப்பதிகாரப் பதிப்பிலுள்ள அரும்பத முதலியவற்றின் அகராதியில் எழுதியிருக்கிறார்கள்.

சிலப்பதிகார வுரையிலே

தூக்கந் துடைக்குந் துகளறு காட்சிய
நிக்கந்த வேடத் திருடி கணங்களை
யொக்க வடிவீழ்ந் துலகியல் செய்தபின்
அக்கதை யாழ்கொண் டமைவரப் பண்ணி (9 கனாத்திற. 13, உரை)

என்ற செய்யுளொன்று வளையாபதியினின்றுந் தரப்பட்டுளது. இச் செய்யுளினின்றும் இஃது ஓர் ஜைனசமய நூலென்று துணிதற்கிடமுண்டு. யாப்பருங்கலவுரையினும் (சூ. 37), தொல்காப்பியச் செய்யுளியல் இளம்பூரணருரையிலும் (சூ. 98) இரண்டடி யெதுகைக்கு உதாரணமாகத் தரப்பட்டுள்ள

உலக மூன்று மொருங்குட னேத்துமாண்
டிலக மாய திறலறி வன்னடி
வழுவி னெஞ்சொடு வாலிதி னூற்றவுந்
தொழுவ ரூல்வினை நீங்குகவென்றியான்.

என்னுஞ் செய்யுள் 'தாவின்றாகித் தாழிசை பெற்றும்' என்ற சூத்திரத்திற்கு (தொல். செய்யுளியல், 148) நச்சினார்க்கினிய ரெழுதிய வுரையால் வளையாபதிச் செய்யுளென விளங்குகின்றது. இதுவும் இந்நூல் ஜைன காப்பியமென்னும் முடிபினையே வற்புறுத்துகின்றது. இளம்பூரண ருரை முதலியவற்றில் எடுத்தாளப்படுகின்றமையால், இந்நூல் 11-ம் நூற்றாண்டிற்கு முற்பட்டதாதல் வேண்டும்.

தக்கயாகப்பரணி யுரையிலே (425) 'இவர் (நூலாசிரியர்) வளையாபதியை நினைத்தார் கவியழகுவேண்டி' என வந்துள்ளது. இதனால் வளையாபதி கவியழகு நிரம்பிய காவியமென்பது புலனாம். சிறப்பு மிக்க இந்நூலினின்று ஒரு சில செய்யுட்களே நமக்கு இப்போது அகப்படுவன. சிலப்பதிகார வுரையினின்றும் ஒரு செய்யுள் மேலே காட்டப்பட்டது. அவ்வுரையே வேறிரண்டு செய்யுட்களையும் தருகின்றது :

பண்ணாற் றிறத்திற் பழுதின்றி மேம்பட்ட
தொண்ணூற் றறுவகைக் கோவையும் வல்லவன்
விண்ணா றியங்கும் விறலவ ராயினும்
கண்ணுறி நோக்கிக் கடுநகை செய்வான். (9 கனாத்திற. 15, உரை)

அன்றைப் பகற்கழிந் தாளின் றிராப்பகற்
கன்றின் குரலுங் கறவை மணிகறங்கக்
கொன்றைப் பழக்குழற் கோவல ராம்பலு
மொன்றல் சுரும்பு நரம்பென வார்ப்பவும். (17 ஆய்ச்சியர். உரை)

இவையே யன்றிப் புறத்திரட்டினின்றும் 66 செய்யுட்கள் கிடைக்கின்றன. அவை பெறுதற்கருமை (புறத். 25, 26), கற்புடை மகளிர் (78), கற்பின் மகளிர் (88-91), புதல்வரைப் பெறுதல் (98), அடக்கமுடைமை (130), பிறர்மனை நயவாமை (155, 156), தீவினையச்சம் (198, 199), தானம் (215), அருளுடைமை (256, 257), புலான் மறுத்தல் (264-266), தவம் (277, 278), புணர்ச்சி விழையாமை (293-297), கள்ளாமை (309), பொய்யாமை (312, 313), யாக்கை நிலையாமை (337), செல்வ நிலையாமை (351-355), இளமை நிலையாமை (367), பல்வகை நிலையாமை (396), துறவு (422-424), மெய்யுணர்தல் (438), பழவினை (473), நாடு (837), பொருள் செயல்வகை (897), நட்பு (925), பேதைமை (980, 981), புல்லறிவாண்மை (996), பொதுமகளிர் (1044-1056), பண்புடைமை (1134), நல்குரவு (1170-1173) என்ற பொருள்கள்பற்றி வந்துள்ளன. யாப்பருங்கல விருத்தியில் (சூ. 93 உரை) மேற்கோளாகக் கீழ்வருஞ் செய்யுட்கள் காட்டப்பட்டுள்ளன :

நீல நிறத்தனவாய் நெய்கனிந்து போதவிழ்ந்து
கோலங் குயின்ற குழல்வாழி நெஞ்சே
கோலங் குயின்ற குழலுங் கொழுஞ்சிகையும்
காலக் கனலெரியின் வேம்வாழி நெஞ்சே
காலக் கனலெரியின் வேவன கண்டாலும்
சால மயங்குவ தென்வாழி நெஞ்சே.

வித்தகர் செய்த விளங்கு முடிகவித்தார்
மத்தக மாண்பழிதல் காண்வாழி நெஞ்சே
மத்தக மாண்பழிதல் கண்டால் மயங்காதே
யுத்தம நன்னெறிக்க ணில்வாழி நெஞ்சே
யுத்தம நன்னெறிக்க ணின்றாக்கஞ் செய்தியேற்
சித்தி படர்தல் தெளிவாழி நெஞ்சே.

இவை வளையாபதிச் செய்யுட்களின் அழகை பொருவாறு புலப்படுத்துகின்றன.

IV

இதுகாறும், இக்காலத்தில் நமக்கு அகப்படாது மறைந்துபோன சில நூல்களைக் குறித்தும், அந்நூல்களுக் குரியவாகப் புறத்திரட்டினால் தெரியவந்த சில செய்யுட்களைக் குறித்தும் ஆராய்ந்தோம். இனி, ஒருசில செய்யுட்களைத் தவிர்த்து முழுதும் அகப்பட்டு, வெளியிடப்பெற்ற நூலொன்றினைக் குறித்தும், ஒருசில பகுதியே இப்போது அகப்படுவனவாய் வெளியிடப்பெற்ற சில நூல்களைக் குறித்தும் ஆராய்வோம்.

அறைகுறையாய் அகப்பட்டுள்ள நூல்கள்

ஒருசில செய்யுட்களைத் தவிர்த்து முழுவதும் அகப்பட்டுள்ள நூலென்று இங்கே கூறியது பதினெண்கீழ்க்கணக்கினைச் சார்ந்த சிறுபஞ்சமூலம்[1] என்னும் நூலினையேயாகும். அச்சான் பதிப்புக்களிலும் ஏட்டுப்பிரதிகளிலும் 86 முதல் 91 முடியவுள்ள 6 செய்யுட்கள் காணப்பெறவில்லை. இவற்றுள் மூன்று செய்யுட்கள் இப்பொழுது புறத்திரட்டினால் வெளியாகின்றன. அவை வருமாறு :

சிறுபஞ்சமூலம்

அச்சமே யாயுங்கால் நன்மை யறத்தொடு
கச்சமில் கைம்மா றருளைந்தால்—மெச்சிய
தோகை மயிலன்ன சாயலாய் தூற்றுங்கால்
ஈகை வகையி னியல்பு. (புறத். 206)

கைம்மாறு மச்சமுங் காணிற் பயமின்மை
பொய்மாறு நன்மை சிறுபய—மெய்ம்மா
றருள்கூடி யாரறத்தோ டைந்தியைந் தீயிற்
பொருள்கோடி யெய்தல் புகன்று. (,, 207)

இம்மை நலனழிக்கு மெச்சங் குறைபடுக்கும்
அம்மை யருநரகத் தாழ்விக்கும்—மெய்ம்மை
அறந்தேயும் பின்னு மலர்மகளை நீக்கும்
மறந்தேயும் பொய்யுரைக்கும் வாய். (,, 311)

ஒருசில பகுதியே அகப்படுகின்ற நூல்களுள் முதலாவதாகக் கூறத் தக்கது பதிற்றுப்பத்து. இவ்வரிய நூலின் முதற்பத்தும் இறுதிப் பத்தும் இதுவரை கிடைத்தில. இனிக் கிடைக்கலாமென்ற நம்பிக் கையும் பெரும்பாலும் இல்லையென்றே சொல்லலாம். அகப்படாத பத்துக்களினின்றும் இரண்டு செய்யுட்கள் (புறத். 1260, 1275) புறத்திரட்டினால் தெரிய வந்தன. இவ்விரு செய்யுட்களையும் டாக்டர் உ. வே. சாமிநாதைய ரவர்கள் அரிதிற் பதிப்பித்துள்ள பதிற்றுப்பத்தின் முன்னுரையிற் காணலாம். இவற்றுள் ஒரு செய்யுள் முழுமையும் (1260) தொல்காப் பியப் புறத்திணையியலுரையில் இளம்பூரணர் உதாரணமாகக் காட்டி யிருக்கின்றனர்; ஆனால் பதிற்றுப்பத்தைச் சார்ந்ததெனக் குறிப்பித்திலர். நச்சினார்க்கினியர் தமதுரையில் (தொல். புறத். 8) இச்செய்யுளின் முதல் மூன்றடிகளை மாத்திரமே எடுத்துக்காட்டினர்; ஆனால் பதிற்றுப்பத் தெனக் குறிப்பித்தனர். புறத்திரட்டோவெனின், செய்யுள் முழு மையுந் தந்து பதிற்றுப்பத்தென இடத்தையும் தெளிவாக விளக்குகிறது. பிறிதொரு செய்யுள் (1275) புறத்திரட்டினால் மாத்திரம் தெரியவந்த தாகும்.

பதிற்றுப்பத்து

1. செந்தமிழ், 14, பக். 31 பார்க்க.

பரிபாடலென்னும் தொகை யினின்றும் ஒரு சிறு பகுதியே நமக்குக் கிடைத்துள்ளது. இந்நூலில் உள்ள 70 செய்யுட்களுள் 24 முழுப் பாடல்களே இப்பொழுது அகப்படுவன. அகப்படாத பாடல்களைச் சார்ந்த ஆறு உறுப்புக்கள் (புறத். 866, 874, 875, 876, 877, 878) புறத்திரட்டினால் தெரியவந்தனவாம். இவையாறும் மதுரைக்குரியன. இவற்றையெல்லாம் பரிபாடற்பதிப்பில் விவரமாகக் காணலாம். தொல்காப்பிய மெய்ப் பாட்டியலுக்கு இளம்பூரணவடிகள் வகுத்தவுரையில்

பரிபாடல்

வையை வருபுன லாட லினிதுகொல்
செவ்வேற்கோ குன்ற நுகர்த லினிதுகொல்
கைவே லுதியன்ன கண்ணார் துணையாக
எவ்வாறு செய்வாங்கொல் யாமென நாளும்
வழிமயக் குற்று மருடல் நெடியான்
நெடுமாடக் கூடற் கியல்பு. (சூ. 11, உரை)

என்ற செய்யுள் காணப்படுகின்றது. இதன் செய்யுளமைப்பினையும் இதன் கண் வந்துள்ள பொருளமைப்பினையும் நோக்கினால், இது பரிபாடலுறுப் பாகலாமெனத் தோன்றுகிறது. இவ்வூகம் உண்மையொடு பட்டதாயின், இவ்வுறுப்பும் மதுரைக்குரியனவற்றுள் ஒன்றுதல்வேண்டும்.

பரிபாடலைப் போன்றே பெருந்தேவனார் பாரதத்தினின்றும் ஒரு சிறு பகுதியே இப்போது நமக்கு அகப்படுகின்றது. உத்தியோகபர்வமும், யுத்தபர்வத்திற் பதின்மூன்றுநாட் போர்களுக்குரிய பகுதியுமே ஸ்ரீ அ. கோபாலையரவர்கள் பதிப்பிட்ட நூலில் உள்ளன. இப்பதிப்பிற் காணப் படுவன 830 செய்யுட்கள் மாத்திரமே. நூல் முழு மையும் எத்தனை செய்யுட்களால் இயன்றது என் பது இப்போது நாம் அறிதற்கில்லை. ஆனால் இது மிக விரிந்ததோர் நூலாதல் வேண்டுமென்று ஊகித்தல் தகும்.

பெருந்தேவனார் பாரதம்

இப்பாரதத்திற் குரியனவாகப் புறத்திரட்டிற் பல செய்யுட்கள் உள்ளன. இவற்றைத் திரட்டிப் பதிப்பாளர் தமது பதிப்பில் தந்திருக் கின்றனர். அவர் தந்துள்ள 32 செய்யுட்களுள், 4 செய்யுட்கள் புறப் பொருள் வெண்பாமாலைக் குரியன. பதிப்பாளரும் இங்ஙனமே குறித் துள்ளார். அச்செய்யுட்கள் வருமாறு:

உறுசுடர் வாளோ டொருங்கா விலங்கிற்
சிறுசுடர்முற் பேரிருளாங் கண்டா—யெரிசுடர்வேற்
றேங்குலாம் பூந்தெரியற் றேர்வேந்தே நின்னோடு
பாங்கலா மன்னர் படை. (வெண்பா. 134)

துன்னருந் துப்பிற் றொடுகழலார் சூழ்ந்திருப்பத்
தன்னருளான் வாளொன்கைத் தந்தானம்—மன்னற்கு
மண்ணகமோ வைகின்று மாலை நெடுங்குடைக்கீழ்
விண்ணகமும் வேண்டுங்கொல் வேந்து. (வெண்பா. 65)

இன்ன ரெனவேண்டா வென்றோ டெதிர்சீறி
முன்னர் வருக முரணகல—முன்னர்ப்
பருந்தார் படையமருட் பல்லார் புகழ
விருந்தா யடைகுறுவார் விண். (,, 47)

கான்படு தீயிற் கலவார்தன் மேல்வரினுந்
தான்படை தீண்டாத் தறுகண்ணன்—வான்படர்தல்
கண்ணிய பின்னர்க் கறுத்தார் மறந்தொலைதல்
எண்ணியபி னேக்குமோ வெஃகு. (,, 55)

ஒருசெய்யுள் எனக்குக்கிடைத்த புறத்திரட்டுப் பிரதிகள் பலவற்றி லும் காணப்பெறவில்லை. அது வருமாறு:

கொன்றான் கொலச்சொன்னான் கூசவறுத் தானட்டான்
தின்றான் விலக்கிடான் சென்றென்று—கொன்றவனைக்
குட்டவன்க ணிட்டெரிக்க வெந்துகொடு வெந்நரகிற்
பட்டழுன்று வீழ்வார் பதைத்து.

இதனைப் பதிப்பாளர்க்குக் கிடைத்த புறத்திரட்டுப் பிரதியில் அதிகப் படியாகவுள்ள செய்யுளெனக் கொள்ளினும், எனக்குக் கிடைத்துள்ள புறத்திரட்டுப் பிரதிகளில் அவர்கள் கொடுத்துள்ள 28 செய்யுட்களினு மேலாக ஐந்து செய்யுட்கள் காணப்படுகின்றன. அவற்றுள், 'உருவழிக்கு முண்மைத் திருவழிக்கும்' (புறத். 1072) என்பது நளவெண்பாவினுள் ளும் வந்துள்ளது. ஏனைய 4 செய்யுட்களும் வருமாறு:

உற்ற நலத்தா னொழுகாது நாளும்
பெற்றவ னேவியசொற் பேணாது—மற்றவன்முன்
திண்ணுருவங் கொண்டு சிலைக்கு மவளன்றே
பெண்ணுருவங் கொண்டதோர் பேய். (புறத். 84)

வான்சேரிற் புள்ளஞ்சா வல்லரில் சுற்றிய
கான்சேரின் மானின் கணமஞ்சா—வான்சேர்
சிகர வரைசேரிற் றேனஞ்சா வஞ்சா
மிகுநீர்க் கயஞ்சேரின் மீன். (,, 613)

யாவர் வரினு மெதிரேற்குந் தெய்வமடப்
பாவை யகத்திருந்தும் பாழன்றே—மேவினரைத்
தண்ணார் கரதலத்தாற் றன்னாவாய்த் தாமுமொரு
கண்ணாகி நிற்கின்ற கண். (,, 689)

கலிவர லூழியின் வாழ்க்கை கடிந்து
மலிபுகழ் வேண்டு மனத்தர்—ஒலிகடல்சூழ்
மண்ணகலம் வேண்டாது வான்வேண்டி யீண்டினார்
புண்ணியமாம் போர்க்களத்துப் போந்து. (புறத். 1346)

பதிப்பாளர் 'பழைய பாரதப்பாட்டுக்கள்' என்பதன்கீழ்க் கொடுத்துள்ளவற்றில் 41-வது செய்யுள் புறத்திரட்டுப் பிரதிகளிற் சிதைந்து காணப்படுவதாகக் குறித்திருக்கின்றார்கள். அப்பாடல் வருமாறு:

நல்வா னவர்காண நம்மை யமரகத்து
வெல்வான் விரும்பிய வேல்வேந்தைக்—கொல்வா
னுனக்கே யுரிமை யுளதெனினு மிப்போ
ரெனக்கே தருவா னிறை. (புறத். 1311)

இனி, முழுவதும் அகப்பட்டு வெளியிடப்பெற்றுள்ள நூல்களுள் ஒரு சிலவற்றிற்கும் புறத்திரட்டு உதவுகின்றது. நூல்கள் சிறந்தனவாயின், பலரும் கற்றுப் போற்றுதற்குரிய தகுதியும் பொருள் விளக்கமு முடையவாயின், அந்நூற்பிரதிகள் தமிழ் நாட்டில் மிகப் பலவாய்க் கிடைப்பனவாம். பிரதிகள் மிகுந்தோறும் பாடபேதங்களும் மிகைச்செய்யுட்களும் பெருகக் காணப்படும். நாளடைவில் உண்மையான பாடங்களை வரையறுப்பதும் நூற்குரிய செய்யுட்டொகை இனைத்தெனத் துணிவதும் எளிதில் இயலாதவாய் முடியும். பிழைகளும் மிகுதியாகப் பல்குதற்கு இடமுண்டு. செய்யுட்டொகை வரையறை, பாட நிச்சயம், பிழைதிருத்த மாகிய இம்மூன்றற்கும் புறத்திரட்டுப் பெரிதும் பயன்படுகின்றது. செய்யுட்டொகையை நிச்சயித்தலின்கண் மிகையாகவுள்ள செய்யுட்களை நோக்குதல் இன்றியமையாததாகும்.

முழுவதும் அகப்பட்டுள்ள நூல்கள்

களவழிநாற்பது என்னுங் கீழ்க்கணக்கு நூலை யெடுத்துக்கொள்க. இதன்கணின்றும் 10 செய்யுட்கள் புறத்திரட்டிற் சேர்க்கப்பெற்றுள்ளன (1418-1427). இவற்றுள் இறுதிச் செய்யுள் வருமாறு:

களவழி

படைப்பொலிதார் மன்னர் பரூஉக்குடர் மாந்திக்
குடைப்புறத்துத் துஞ்சு மிகலன்—இடைப்பொலிந்த
திங்களிற் றோன்று முயல்போலுஞ் செம்பியன்
செங்கண் சிவந்த களத்து. (புறத். 1427)

இது கிடைத்த களவழிப் பிரதிகளிற் காணப்பெறவில்லை. காலஞ்சென்ற ஸ்ரீ இ. வை. அனந்தராமையரவர்கள் பதிப்பில் 41 செய்யுட்கள் உள்ளன. புறத்திரட்டிற்கண்ட மிகைச் செய்யுளும் இறுதியிற் பாடவேற்றுமையுடன் குறிக்கப்பட்டிருக்கின்றது. களவழி நாற்பது எனத் தொகை

வரையறை செய்திருந்தபோதினும் ஆசிரியர் இரண்டொரு செய்யுட்களை அதிகமாக இயற்றியிருத்தலும் கூடும்.

பழமொழி கீழ்க்கணக்கு நூல்களுள் முன்றுறையரையனாரது பழமொழியி னின்றும் 319 செய்யுட்கள் புறத்திரட்டில் தொகுக்கப்பட்டுள்ளன. இங்ஙனந் தொகுக்கப்பட்டவற்றுள்,

அறியாமை யோடிளமை யாவதா மாங்கே
செறியப் படுவதாஞ் செல்வம்—சிறிய
பிறைபெற்ற வாணுதலாய் தானேயா மேபேய்
பறைபெற்ற லாடாதோ பாய்ந்து. (புறத். 1139)

என்ற செய்யுள் கிடைத்த பழமொழிப் பிரதிகளிற் காணப்படவில்லை யென்று அந்நூலைப் பதிப்பித்த ஸ்ரீ செல்வக்கேசவராய முதலியாரவர்கள் எழுதியிருக்கின்றார்கள். பிறிதொரு செய்யுளும் பழமொழிப் பதிப்பிற் காணப்படவில்லை. அது வருமாறு :

அமையப் பொருளில்லா ராற்றுதா ரென்ப
திமையத் தனையார்க ணில்லை—சிமைய
நகையே ரிலங்கருவி நல்வரை நாட
நகையேதா னாற்றி விடும். (புறத். 1107)

இங்ஙனமே யுள்ளது 'அருளுடைமை' (புறத். 146) என்ற செய்யுளும். ஆனால் இவை பழமொழியைச் சார்ந்தனதாமோ வென்று ஐயுறுதற்குத் தக்க காரணம் உளது.

சிந்தாமணி சிந்தாமணியினின்றும் 142 செய்யுட்கள் புறத்திரட்டில் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் 2 செய்யுட்கள் சிந்தாமணிப் பதிப்பிற் காணப்பெறவில்லை. அவை வருமாறு :

மலங்கிமதி யின்றியயர் வெய்திமயல் கூர
நலங்கியறி யாதுதுய ரெய்திநனி வாடும்
விலங்குறு கடுந்துயர் விலங்குதல் விரும்பிற்
புலன்கொள்வழி பொய்யுரை புறத்திடுமி னென்றான். (புறத். 315)

உள்ளமொழி செய்கைகளி னொன்றியுல கேத்துந்
தள்ளரிய தன்மைவழி நிற்றலுறு நல்லீர்
எள்ளுநர்கள் தன்மையிது நிற்கவிடர் செய்யுங்
கள்ளுமுணல் குற்றங் கடைப்பிடிமி னென்றான். (,, 1064)

இந்நூலின் உரைகாரராகிய நச்சினார்க்கினியர் தாமே சில செய்யுட்களின் முதற் குறிப்புக்களைத் தந்து 'அவை பயில வழங்கா' (442-ஆம் செய்யுளின் பின்) என்று எழுதினர். உரையோடு கூடிய செய்யுட்கள் சில பிரதிகளிற் காணப்படாமையும் பதிப்பாசிரியரவர்களாற் காட்டப் பெற்றுளது. இவையே யன்றிப் பல செய்யுட்கள் உரையின்றிக்

காணப்படுவனவாகவுங் குறிக்கப்பட்டுள்ளன (சிந்தா. மூன்றும் பதிப்பு, பக். 138, 187, 191, 211, 298, 424, 548, 584). இங்ஙனம் மிகையாகப் பிரதிகளிலுள்ள செய்யுட்களென மேற்காட்டிய இரண்டனையும் கொள்ளுதல் கூடும். ஆனால் பதிப்பாசிரியரவர்கள் மூன்றும் பதிப்பின் முகவுரையில்,

'ஏட்டுப் புத்தகங்களைச் சோதித்த பொழுது இரண்டு பழம் பிரதிகளில் 'தெருளிற் பொருள்வானுலகு' (2872) என்ற செய்யுளின் உரைக்குப் பின் மூன்று செய்யுட்களின் உரைகள் மட்டும் மிகப் பிழைபட்ட உருவத்துடன் எழுதப்பட்டிருந்தன. ஒரு பிரதியில் தனித்தனியே செய்யுட்களுக்கு இடம் விட்டும் மற்றொன்றில் இடம் விடாமலும் அவ்வுரைகள் இருந்தன. அவ்வுரைகளுக்குரிய 3 பாடல்களும் வேறு எந்தப் பிரதியிலும் கிடைக்கவில்லை. திருத்தமாக அவைகளும் பாடல்களும் கிடைத்தபின் வெளியிடப்படும்'

என்று எழுதியுள்ளார்கள். இம்மூன்று பாடல்களுள் மேற்காட்டிய 'மலங்கிமதி' (புறத். 315), 'உள்ளமொழி' (புறத். 1064) என்ற இரண்டு செய்யுட்களும் அகப்பட்டனவென்று கோடல் பொருந்துவதாகலாம். ஒருகால் 'மலங்கிமதி' என்ற செய்யுட்கருத்து 'மெய்யுரை விளங்குமணி' (சிந்தா. 2869) என்றதன்கண் ணுள்ளதென அதனை யொதுக்கினும், 'உள்ளமொழி' என்ற செய்யுள் மேற்குறித்த மூன்றனுள் ஒரு செய்யுளாக இருத்தல் வேண்டுமெனத் தோன்றுகிறது. முன் பின்னுள்ள செய்யுட்களின் சந்த வொற்றுமையும் பொருளியையும் இக் கருத்திற்குரிய பெருஞ்சான்றுகளாம்.

மேலே குறித்த மூன்று செய்யுட்களின் உரைகளும் பதிப்பாசிரியரவர்களது அன்பினாற் கிடைத்தன. அவை வருமாறு:

1. '. . . பெருமற்[1] கள்ளுண்டார் தம்முள்ளே மறைக்கும் பொருளையும் ஈதென்று வெளியாக்குவர்; அவர்க்குத் தம்மா லெள்ளப்படுவாருந் தம்மை யெள்ள நவையு முண்டாம்; அதனை நுகரவேண்டில், உயிர்க் கொலையும் வேண்டும்; ஆதலால் உணர்வழிக்குங் கள்ளுண்டலும் நமக்கு வேண்டா; அதனை யிகழ்ந்து தவிர்க' என்று கூறினா னென்றா னென்க.

2. தான ... ...
... ...
... ...
... ...

'தான ... ... மிடைந்த வூனிற் சீர் - என்பை நிரைத்து நரம்பாற் பின்னின வுடம்பின் கனம்; என்றது பிண[2] செய்யை. உருண்ட ஈக்கள் பரந்து, மாம்பூவின் மதுவையுஞ் சீரையும் ஒரு நிகராக[3] ஈட்டி, அவையிற்றினின்று நுகராதே பறந்துபோன பின்பு, கண்டு ஆய்வார் கொணர்ந்[4] தோம்பிவைத்த

1. பெருமா. 2. பிண. 3. ஒரு சிறைக. 4. கண்டாராவாரகுணாந.

தேனை யுண்டலும் வேண்டா ; அதன் தீங்கைத் தெரிந்தறியின்' என்று கூறினு னென்ருனென்க.

இழித ஈட்டியவை-இருல் இழித்ததல்...

3. அழுந்திளேயர் - ஆடவர் ; அழுத்திளேயரென விகாரம் ; என்றது ஊனே நுகர்தற்கு அழுந்தும் உணர்வில்லாதாரை. சார்தற்கு - நுகர்தற்கு. அரி காயர் - ஐய வுடம்பினர் ; என்றது மகளிரை. புல்லுதல் - சமைத்தல் ; 'வெங்கருனே புல்லுதற்கு' (சீவகசிந். 2781) என்ருற் போல.

'அழுத்திளேயர் அரிகாயராகிய வவரை நோக்கி, இழிக்குந் தகையவாகி ஈ மொய்த்துப் புழுப்பயிலுதலே யுடைத்தாகிய புண்ணுகிய பிணத்தை யாம் நுகர்தற்கு இணையில்லாவா யுவக்கும்படி கறியாகச் சமையென்று கூற ... ...பட்ட ஊனே யுண்டலே உணர்ந்தவர்கள் தவிர்வீராக' என்று கூறினு னென்ருனென்க.

இனி 'வழுத்திளேயர்' என்று பாடமோதி, 'தம்மை யெப்பொழுதும் வழுத்து மடவார் நுகர்தற்குத் தசையை அரிகின்ற வுடம்பினே யுடையர்' என்று மகளிர்க்குப் பெயராக்கலு மொன்று. 'என்ருன்' என்பதனே முன்னர்க் கவிகட்குங் கூட்டுக.

இவற்றுள்ளே, முதலிற் காணப்படுவது மேலே காட்டிய 'உள்ளமொழி' என்ற செய்யுளின் உரையென்பதிற் சிறிது ஐயுறவு கொள்ளுதற் கிடமுண்டு.

சூளாமணி

சிந்தாமணியினுஞ் சிறந்ததாக மதிக்கப்படுஞ் சூளாமணி யென்ற அரும்பெறற் காவியத்தினின்றும் 79 செய்யுட்கள் புறத்திரட்டிற் கோக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மூன்று செய்யுட்கள் ஸ்ரீ சி. வை. தாமோதரம் பிள்ளேயவர்களது சூளாமணிப் பதிப்பிற் காணப்படவில்லே. அவை வருமாறு :

களவி ஞகிய காரறி வுள்ளன்மின்
விளேவில் வெவ்வினே வீவில் கதிகளுள்
உளேய வுள்ளழித் தொன்றல வேதனே
வளேய வாங்கி வருத்த முறுக்குமே. (புறத். 308)

கொன்றுயிர் நடுங்கச் சென்று கொலேத்தொழிற் கருவி யேந்தி
நின்றெரி நுடங்கு கண்ணுற் பாவமே நினேந்து செத்தார்
சென்றெரி நரகில் வீழ்வர் செவ்வனே துன்ப மஞ்சி
நன்றியில் கொலேயி னீங்கி நற்றவம் புரிமி னென்ருன். (,, 338)

கொலேயி னீங்குமின் கொண்மி னுலகினுள்
தலேவ னல்லறந் தக்க தெனவுவந்
தலேயி னீங்கிய வவ்வுல கெய்துதல்
முனேவர் சொன்ன முடிவிது வாகுமே. (,, 339)

பிள்ளையவர்கள் பதிப்பித்த சூளாமணி நூற்பிரதிகளும் இப்போது கிடைத்தற்கு அரியவாய் விட்டன. அவர்கள் ஒருசில பிரதிகளைக் கொண்டே பதிப்பித்திருக்கிறார்கள். பல பிரதிகள் கிடைக்குமெனத் தெரிகின்றபடியால் திருந்திய பதிப்பொன்று வெளிவருதல் நலமாகும்.

இராமாவதாரம்

லோகோத்தமமான மகாகாவியங்களுள் ஒன்றாகிய இராமாவதாரத்தினின்றும் 27 செய்யுட்கள் புறத்திரட்டிற் சேர்க்கப் பட்டுள்ளன. அவற்றுள்ளே இரண்டு செய்யுட்கள் இப்போதுள்ள இராமாயணப் பதிப்புக்களில் இல்லை. அவை வருமாறு:

கொன்றவன் குறைத்தவன் கொணர்ந்து விற்றவன்
ஒன்றிய பொருள்கொடுத் துவந்து கொண்டவன்
நன்றிது வென்றவன் நாவிற் பெய்தவன்
என்றிவ ரறுவரு நரக மெய்துவார். (புறத். 332)

எய்த வின்னல் வந்த போழ்தில் யாவ ரேனும் யாவையுஞ்
செய்ய வல்ல ரென்று கொள்க சேணெ றிக்க ணேகிட
மைய கண்ணி செய்ய பாதம் வல்ல வாய மற்றிவன்
கைக ளின்று பன்ன சாலை கட்ட வல்ல வாயவே. (,, 725)

இவ்விரண்டாவது செய்யுள் வெகு காலத்திற்கு முன்னரே செந்தமிழ்ப் பத்திரிகையில் (தொகுதி, 1) வெளியிடப்பட்டது.

சென்ற ஒரு நூற்றாண்டிற்கு மேலாக இராமாயணம் பதிப்பிடுதலிற் பலரும் முயன்று வந்திருக்கிறார்கள். ஆனால் இதுவரை நூல் முழுதும் சுத்தமான பதிப்பாக வெளிவந்ததில்லை. நல்லபதிப்பு வெளிவரவேண்டுவது தமிழ்க் காவிய வுணர்ச்சிக்கு மிக இன்றியமையாததாகும்.

V

இனி, பாடநிச்சயம் முதலியவற்றிற்குப் புறத்திரட்டு உதவுகின்றமையை நோக்குவோம். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களிற் பெரும்பாலன நாம் இளமை தொடங்கிக் கற்றுவரும் நூல்கள். மாணவர்களுடைய பாட புத்தகங்களில் இந்நூல்களின் செய்யுட்கள் பலவாய்க்

புறத்திரட்டினூற் பிழைகள் திருந்துதல்

காணப்படும். இவையனைத்திற்கும் பழைய உரைகளும் உள்ளன. எனினும் இவைகள் இன்றுகாறும் திருத்தமாகப் பதிப்பிக்கப்பெறவில்லை. ஒரு சிலவற்றிற்கு இக்காலத்து அறிஞரிற் சிலர் தாமாகச் சொந்த உரை இயற்றி வெளியிட்டுள்ளார்களென்பது உண்மை. ஆனால் இவ்வுரைகள் பழைய உரையை நோக்காதபடியும் ஏட்டுப் பிரதிகள்பெற்று மூலபாடத்

தைப் பரிசோதியாதபடியும் எழுதப் பெற்றுள்ளனவாதலின், அவை கொள்ளுதற்குரியனவல்லவெனத் தோன்றுகிறது. பதினெண் கீழ்க் கணக்கு நூல்களிலிருந்து பல செய்யுட்கள் புறத்திரட்டில் தொகுக்கப்பட்டிருத்தலின், அச்செய்யுட் பாடங்கள் திருந்துதற்குப் புறத்திரட்டு மிகவும் பயன்படுகின்றது. உதாரணமாக, பழமொழி நூலினின்றும் ஒரு செய்யுள் தருகின்றேன்.

இந்நூலின் 320-ஆவது செய்யுள் பின்வருமாறு பதிப்பிக்கப் பட்டுள்ளது :

காப்பிகந் தோடிக் கழிபெருஞ் செல்வத்தைக்
கோப்பெரியான் கொள்ளக் கொடுத்திரா தென்செய்வார்
நீத்த பெரியார்க்கே யாயினும் மிக்கவை
மேவிற் பரிகார மில்.

இதன் பழையவுரை வருமாறு :

'(தான்காக்கும்) காவலைக் கடந்து (கொடுங்கோல் நெறியிலே) ஓடி, (ஒருவன் மாட்டுள்ள) மிக்க பெரிய செல்வத்தை அரசனானவன் (மனம்) வருந்தானாய் வாங்கினால், (அவன் கீழ்வாழ்வார்) கொடுத்து (உயிர் பிழைத்து) இராமல் என்ன (பரிகாரம்) செய்வார்? (பிறர்க்குப் பயன்பட் டியல்பாகவே ஆகக்கடவ நிலம் முதலாயின தாம்) பயந்த பொருள்களை (த்தாமே) விரும்பி நுகரின், (அதற்குச் செய்யும்)பரிகாரம் இல்லை,(எல்லாப் பொருளையும்) நீத்தேயிருந்த துறந்தார்க்கே யாயினும்: (அதுபோல்)'

இவ்வுரையில் மூலத்திலில்லாது வருவித்துரைத்தன இருதலைப் பிறையுள் அமைக்கப்பட்டுள்ளன. 'பெரியான்' என மூலங் கொடுக்கப் பட்டிருக்க, உரை 'வருந்தானாய்' என்று உள்ளது. உரைக்கேற்ற மூலம் 'பரியான்' என்பது எளிதில் உணரத்தகும். 'மிக்கவை' என்று மூலம் கொடுக்கப்பட்டிருக்க, உரை 'பயந்த பொருள்களை' என்று உள்ளது. உரைக்கேற்ற மூலம் 'ஈத்தவை' யென்பது தெளிவு. இப்பாடங்களே புறத்திரட்டிற் காணப்படுகின்றமை கீழ்வரும் செய்யுளால் உணரலாம் :

காப்பிறந் தோடிக் கழிபெருஞ் செல்வத்தைக்
கோப்பரியான் கொள்ளக் கொடுத்திரா தென்செய்வார்
நீத்த பெரியார்க்கே யாயினு மீத்தவை
மேவிற் பரிகார மில். (புறத். 680)

இதுபோன்று பழமொழிச் செய்யுட்கள் பலவற்றிற் பிழைகள் திருந்தப்பெற்று உண்மைப் பாடங்கள் துலங்குகின்றன.

ஒப்பு நோக்குதற்குச் சுத்தப் பிரதிகளின்றி ஒருவாறு பரிசோதித்து வெளியிடப்பெற்ற பழமொழி முதலிய நூல்கள் ஒருபுறம் இருப்ப,

புறத்திரட்டினுற் பாடங்கள் சிறந்து விளங்குதல்

கிடைத்த பிரதிகளைக் கொண்டு நன்கு ஆராய்ந்து மிகச் செம்மையாகப் பரிசோதித்து வெளியிடப் பெற்ற நூல்களிலும் ஒருசில விடங்களிற் சிறந்த பாடங்களைப் புறத்திரட்டு உதவுகின்றது.

உதாரணமாக, சூளாமணியிலே மந்திரசாலைச் சருக்கத்தில் 12-ஆவது செய்யுள் பின்வருமாறு உள்ளது :

ஆற்றலென் றோதப் பட்ட வரசர்கட் கவற்றின் மிக்க
ஆற்றலுன் சூழ்ச்சி யென்ப தாதலா லதனை யாயும்
ஆற்றலா ரமைச்ச ராக வமைச்சரோ டமர்ந்து செல்லும்
ஆற்றலா னரச னாகி னரியதொன் றில்லை யன்றே.

இதன்கணுள்ள முதலிரண்டு சீர்களுக்குப் பதிலாக 'ஆற்றன்மூன றோதப்' என்ற பாடம் புறத்திரட்டிற் (482) காணப்படுகின்றது. வடமொழி நீதிநூல்களிற் ப்ரபாவசக்தி, உத்ஸாக சக்தி, மந்த்ரசக்தி யென்பன சக்தித்ரயம் என்றும், இவற்றுள்ளே மந்த்ரசக்தி மேம்பட்டதாமென்றும் கூறப்படுதல் பலரும் அறிந்ததே. காமந்தகத்தில் 'ப்ரபாவோத்ஸாக சக்திப்யாம் மந்த்ரசக்தி: ப்ரசஸ்யதே'[1] என்று கூறப்பட்டுள்ளது. சக்தி த்ரயத்தை மூவகையாற்றலென்பர் தமிழாசிரியர்கள். பரிமேலழகர் 'ஆற்றலென்பது பெருமை, அறிவு, முயற்சி யென்னும் மூன்றன்மேலும் நிற்றலிற் சாதியொருமை' என்றனர்[2].

காமந்தகத்தில் வந்துள்ள இக்கருத்தே இச்செய்யுளின் முதலிரண்டடிகளிலும் கூறப்பட்டது. ஆகவே 'ஆற்றன்மூன் றோதப்பட்ட' என்ற பாடமே சிறப்புடையதாதல் காணலாம்.

இங்ஙனம் பிழைகள் திருந்துதற்கும் பாடங்கள் சிறத்தற்கும் உதவுவதோடு புறத்திரட்டின் பெருமை அமைந்துவிடவில்லை. கம்பராமாயணம்

கம்ப ராமாயணத்திற் குரிய பெயர் புறத்திரட்டினுல் தெரிந்தமை

என்ற பிரசித்தகாவியம் இராமாவதாரம்[3] என்ற பெயரால் வழங்கி வந்தமை இக்காலத்தில் யாவரும் அறிவர். ஆனல் புறத்திரட்டின் மூலமாகத்தான் இவ்வுண்மை முதன்முதலில் வெளியிடப்பட்டது. இதன் பின்னரே 'இராமாவ தாரப்பேர்த் தொடை

1. 16-ஆவது ப்ரகாணம், ச்லோகம் 7.
2. குறள், 891. உரை.
3. காஷ்மீரி மொழியில் 'ராமாவதாரம்' என்ற பெயரினுல் இராமசரிதம் வழங்கப்படுவதும் ஈண்டு அறிந்து இன்புறத்தக்கது.

நிரம்பிய தோமறு மாக்கதை' என்று கம்பர் அருளிய வாக்கின் பொருள் நன்கு விளங்குவதாயிற்று. புறத்திரட்டுச் சுருக்கங்களில் 'இராமகாதை' என்ற பெயர் காணப்படுதலினால் இப்பெயரானும் பிற்காலத்து இப்பெருங் காப்பியம் வழங்கப்பெற்றதாதல் வேண்டும். இவ்விரண்டு பெயர்களும் இக்காலத்து வழக்கொழிந்துவிட்டன. முதனூலாசிரியர் இட்ட 'இராமாயணம்' என்ற பெயரே கம்பரது அரும்பெருநூலுக்கும் பெயராக இப்பொழுது வழங்குகின்றது. கம்பர் இட்டபெயரை நாம் தெரிந்து கொள்ளுதற்குக் கருவியாய் முடிந்தது புறத்திரட்டேயாகும்.

இதுகாறும், பெயர்போலும் வேறு வழியாகக் கேள்வியுற்றிராத நூல்கள் ஒரு சிலவும், பெயரறிந்த நூல்களினின்று பாடல்கள் ஒரு சிலவும், அறைகுறையாய் அகப்பட்டுள்ள ஒரு சில நூல்களினின்று பாடல்கள் ஒருசிலவும், முழுவதும் அகப்பட்டுள்ள சில நூல்களுக்குரிய மிகைச்செய்யுட்கள் சிலவும், திருந்திய பாடங்கள் சிலவும், சிறந்த பாடங்கள் சிலவும், புறத்திரட்டினால் தெரியவருகின்றமை விரிவாகக் கூறப்பட்டது. இராமாவதாரம் என்ற பெயர்வழக்காறு இத்தொகை நூலால் விளங்கினமையும் காட்டப்பட்டது.

இனி இதன் பெருமையைப்பற்றிச் சொல்லவேண்டுவதாக எஞ்சி நிற்பது ஓரேயொரு விஷயமாகும். சிறந்த தமிழ் நூல்களைப் பல பிரதிகள் கொண்டு பன்முறை ஆராய்ந்து நன்கு பரிசோதித்துப் பதிப்பிடுதலில் தலைசிறந்து விளங்குபவர்கள் தாக்ஷிணாத்ய கலாநிதி மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே சாமிநாதையரவர்களேயாவர். அவர்கள் மிக அரிதின் முயன்று பதிப்பித்துள்ள பதிற்றுப்பத்து, பரிபாடல், புறநானூறு என்னும் அரும்பெறற் றமிழ்ச்செல்வ நிலயங்களிற் புறத்திரட்டின் புகழ் கமழ்கின்றது. புறநானூற்றின் பதிப்புரையிலே 'புறத்திரட்டென்னுந் தொகை நூலாலும் இந்நூல் மூலமும் உரை முதலியனவும் அடைந்த திருத்தங்கள் பல' என்று ஸ்ரீ. ஐயரவர்கள் எழுதியுள்ளார்கள். ஒருமுறை, அவர்களிடத்து இத்தொகை நூலைக் குறித்து யான் பேசிக்கொண்டிருந்த பொழுது, 'எனக்கு இது கண்ணைக் கொடுத்த நூல்' என்ற அழகிய சொற்களை அன்பினால் உளங்குழைந்து கூறினார்கள். ஐயரவர்களால் இங்ஙனம் மதிப்பிடப்பட்டமை புறத்திரட்டின் பெருமையை நன்கு அறிவுறுத்துகின்றது.

சங்கநூற்பதிப்புக்களுக்குப் புறத்திரட்டு உதவியமை

இத்தொகைநூலிலே தமிழ்மொழிக்கு இயல்பாக உரிய சுவை யாண்டும் புலனாகின்றது. நல்ல தமிழ் அருகி வருகின்ற இக்காலத்தே

புறத்திரட்டி லுள்ள தமிழ்ச் சுவையும் கவிச் சுவையும்

இந்நூற் பயிற்சி மிகுதியும் வேண்டற்பாலதாகும். இந்நூற்பயிற்சி யினால் சொல்லுவனவற்றிலும் எழுதுவனவற்றிலும் சுவை மிகுவதாகும். கவிதைச் சுவையும் பல விடங்களில் நயம்பெற அமைந்துள்ளது. உதாரணமாக முத்தொள்ளாயிரச் செய்யுட்களைக் கூறுதல் தகும். கவிச்சுவையை அறிந்து இன்புறுதற்கும் இந்நூல் பெரிதும் உதவுவதாகும்.

ஆனால் இத்தொகைநூல் கவிதைச் சுவையைத் தலைமையாகக் கொண்டு தொகுக்கப்பெற்றதன்று; நல்லறிவு ஊட்டுதலையே தனது பெருநோக்கமாகக் கொண்டுள்ளது. இதற்கேற்பவே பால் அதிகாரங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

இனித் திரட்டப் பெறவேண்டும் தொகைநூலின் இயல்பு

இம்முறையை விடுத்துக் கவிச்சுவையைத் தலைநோக்கமாகக் கொண்டு தொகை நூலொன்று திரட்டப் படுதல் மிக அவசியமாகும். கவித்வத்தின் இயல்பு இன்னதென்று பரந்துபட்ட ஆராய்ச்சியினால் நுணுகி விசாரித்தல் வேண்டும். கவித்வத்தின் கதியை இலக்கியக் கண்கொண்டு நோக்குதல் வேண்டும். கவித்வம் உரு வெடுக்கும் முறையை ஊன்றியுணர்தல் வேண்டும். சுருங்கக் கூறின், கவித்வம் பற்றிய பல திறப்பட்ட ஆராய்ச்சிகளையும் செவ்வனே நிகழ்த்துதல் வேண்டும். இவ்வகையாராய்ச்சியினால் கவித்வ உணர்ச்சி நிரம்பப் பெற்று, செவிநுகர் கனிகளைத் தேர்ந்து தேர்ந்து, இனியவற்றுளெல்லாம் இனியவற்றைத் தொகுத்தல் வேண்டும். இங்ஙனம் திரட்டப்பெற்ற ஓர் தொகைநூலே உண்மைக் கவிதைக்கு உரையாணியாக வல்லது; செஞ்சொற் கவியின்பத்துள் நம்மைத் திளைக்கும்படி செய்யவல்லது.

கவிநயம் பலவும் பொருந்தும் இத்தகைய தொகை நூலொன்றினைத் திரட்டுதலில் நம்மவர்கள் இனி முயலுதல்வேண்டும். இம்முயற்சி நூலாகப் பரிணமிக்கும்வரை, புறத்திரட்டு விளைக்கும் தமிழ்ச் சுவையை நுகர்ந்து இன்புறுவோமாக!

KAMBAN

BY

S. VAIYAPURI PILLAI, B.A., B.L.,

Kamban is far and away the greatest of the Tamil poets. Yet it is curious that the Chola King of the time, a great patron of art and learning, did not give him the recognition that his merit deserved. His elder contemporary, Oṭṭakkūttar was the Kavichakravartti, or poet laureate, of the Chola court and was the recipient of all its honours. According to tradition, he jealously guarded his position and influence and he kept down young aspirants to fame, Kamban included. Neither with the king did Kamban find favour, for he was a Vaishnavaite, and Saivaism was the state religion; and those were not days of toleration. Not that Kamban was a fanatic. His humanity was too deep, his culture too wide, and his learning too profound to be disturbed by little religious differences. He preferred to live a quiet, simple life, which he did in the company of a kindred spirit Saḍaiyappa Vaḷḷal, a noble of the time. It need not surprise us therefore that he did not seek the limelight and the pomp of the king's court. But there seems to have been another and a deeper cause for the neglect by the Chola king. Kamban was not a blind follower of tradition; he was a daring genius and an iconoclast. In his days, the current ideal of poetry scorned simplicity and naturalness and exalted sonorous artificiality. The prevalent taste was morbid, and had a weakness for mere tricks of verse, elaborate alliterations and frequent internal rhymes. They were all abhorrent to him. He made ever new experiments in metre and verse, and produced a harmony never achieved before. He set up in fact a new tradition, which began to find followers. Thus he exercised an adverse influence against the current notions of poetry. The poets of his age looked down upon this heresy, and taunted him with his humble birth.

We know very little about his early life. He belonged to the Uvaccha caste and was a native of Tiruvaḻundoor, in Tanjore District. His father was one Ādittan. Tradition weaves round him

Talk from the Madras Radio Station on 7-12-1938. By courtesy of the A.I.R. Madras.

a good many stories and has given him a son called Ambikāpati. But these accounts are of very doubtful authenticity. We need not enter into further details, for we are concerned here more with his work as a poet than anything else.

In spite of the unfavourable circumstances noted above, his genius seems to have been recognised by even his contemporaries. In the commentary of Vīracōḻiyam, for instance, we find it stated : கம்பனாரிடைப் பெருமை யுளது 'In Kamban indeed is greatness.' The king's indifference and the animosity of his poet laureate could do nothing and Kamban's fame was an established fact as soon as his work was published.

Heterodox scholars like the commentator on Vīracōḻiyam, and the great gatherings of people who had the rare privilege of listening to his poem, spread his reputation. The king had to take notice and our poet seems to have been invited to the court where he stayed for some time. But he was an exotic in his new surroundings and came back to the people and his old friends. His poem became increasingly popular ; and everywhere he was hailed as a divinely inspired poet. The public conferred on him the title that the king denied. So he became Kavi-chakravartti, the Emperor of Poets and, to this day, he alone of all the Tamil poets, is known by that glorious title. And the more we study his poem, the more we realise how just the popular verdict is.

The subject that the poet chose was one of the causes of the popularity of his great poem. The story of Rama is as old as our motherland. We cannot say when or where it had its origin. It is not the simple and original composition of one poet, Vālmīki. Vālmīki himself tells us that it was Nārada who first narrated the story to him. So, it belongs to that type of ancient story which forms the basis of authentic epic or epic of growth. It must have existed as 'epic material' long, long prior to Vālmīki's days and was, perhaps, 'fragmentary, scattered, loosely related, sometimes contradictory, each piece of comparatively small size, with no intention beyond hearty narrative.' It was a national heritage and the genius of Vālmīki converted it into an epic.

Even in the earliest times, this national story had spread throughout the length and breadth of our country. In Puṟanāṉūṟu, Ahanāṉūṟu and Paripāḍal, which belong to the earliest strata of extant Tamil literature and which may be ascribed to the early centuries of the Christian era, we find references to the Ramayana story. Further, there seems to have been a complete version of

the Ramayana even in those days. It was in veṇbā metre and a few verses of it have come down to us. Thus we see that the story of Rama had been exercising a potent influence in the Tamil land from the earliest times. Local legends too were absorbed into the main story. The mythological element in the original developed in course of time into a religious element and the hero of the story was conceived as an avatar. The Āḻvārs had sung of the hero in their soul-stirring hymns. The pietistic school, which flourished in the eleventh century and later, embellished the story and expounded it in a vivid, conversational style.

At the beginning of the twelfth century, the Chola power was at its height; and an imperial state was realised for the first time in the history of the Tamils. It looked as though Kamban appeared just then to give artistic expression to this sovereign power.

It was through the great story of Rama, which had been developing through the ages to mighty proportions, that he sought this poetic expression. The danger he was courting would have dismayed a lesser poet. On the one side, there was Vālmīki's epic grand, majestic, melodious and simple. On the other, there was the great populace who were familiar with the theme in all its details, and who would constantly sit in judgment, and condemn him forthwith, if his poem failed in emotion or flagged in narration. And they were clearly the supreme judges, for epics in our country were primarily intended for recitation.

Whoever the judges, Kamban was all eager and dared the great task. How his poetic genius unfolded itself through the long panorama of incidents must be a matter of study for years. Kamban was no mere imitator of Vālmīki. The plot is conceived anew in the light of changed ideals. The characters in the story are drawn with a power and inwardness rarely equalled. His poetic vision is so powerful that he seizes the very soul of a situation and makes his characters live through action and dialogue. Owing to this rare dramatic power, his poem has been called Kamba Nāṭakam. Every incident passes through his iridescent imagination and is portrayed in a manner which grips our soul. He is a master of every kind of sentiment, and equally at home in depicting love and war. There are altogether fourteen pitched battles described in the poem and each action stands out clearly individualised.

He was a close observer of life and we get glimpses of it all over his great work. He describes the court of two kings, viz.,

Dasaratha and Rāvaṇa. He portrays an ideal state in describing Dasaratha's rule. He says Dasaratha ruled his kingdom with that amount of care and attention that a poor cultivator would bestow upon his one little piece of land.

எய்யென எழுபகை யெங்கும் இன்மையால்
மொய்பொரு தினவுறு முழவுத் தோளினான்
வய்யக முழுவதும் வறிஞன் ஓம்பும் ஓர்
செய்யெனக் காத்து இனிது அரசு செய்கின்றான்.

And in describing Rāvaṇa's durbar, he gives us more than one picture of a tyrannous king's court where fear dwelt in all hearts. He says:

Not knowing when their master's glance will fall on them, the Vidyādharas that surround his court hold up their hands in a fixt salute over their diademed heads.

இன்னபோது இவ்வழி நோக்கும் என்பதை
உன்னலர் கரதலம் சுமந்த உச்சியர்
மின்னவிர் மணிமுடி விஞ்சை வேந்தர்கள்
துன்னினர் முறைமுறை துறையிற் சுற்றவே.

Even if he speaks to his handmaidens, the mighty Siddhas, gathered there, think that he is addressing them. •Their heads bow down, their hands clasp each other and their hearts, shrink with fear.

மங்கையர் திறத்தொரு மாற்றங் கூறினும்
தங்களை யாமெனத் தாழும் சென்னியர்
அங்கையும் உள்ளமும் குவிந்த ஆக்கையர்
சிங்கவேறு எனத்திறற் சித்தர் சேரவே.

Kamban's sense of humour is keen. He laughs at the very gods. And he makes Hanumān laugh at Rāvaṇa himself, who was far mightier than all the gods put together. Rāvaṇa makes inquiries of Hanumān concerning Vāli, and receives the answer. " Have no fear ! Vāli has gone to heaven and will return no more ; yes, he and his tail are gone for ever !"

வன்துணை யாய வாலி வலியன்கொல் அரசின் வாழ்க்கை
நன்றுகொல் என்ன லோடும் நாயகன் தூதன் நக்கான்

அஞ்சலை யரக்க பார்விட்டு அந்தரம் அடைந்தான் அன்றே
வெஞ்சின வாலி மீளான் வாலும்போய் விளிந்தது அன்றே.

He has handled a vast variety of metrical forms with extraordinary skill, changing them to suit the themes. For rapid narration, he chooses metres which carry us on their wings quickly

and pleasantly, as in Āṟṟuppaḍalam. Sūrpaṇakha becomes Kāmavalli and her mincing walk is thus described in lilting verse :

பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்கச்
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடிய ளாகி
அஞ்சொலிள மஞ்ஞையென அன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்.

Her pride and her thirst for vengeance speak through her laments when she was disgraced.

நிலையெடுத்து நெடுநிலத்து நீயிருக்கத் தாபதர்கள்
சிலையெடுத்துத் திரியுமிது சிறிதன்றோ தேவரெதிர்
தலையெடுத்து விழியாமை சமைப்பதே தழலெடுத்தான்
மலையெடுத்த தனிமலையே யிவைகாண வாராயோ.

Mandōdari laments thus on the death of Indrajit :

கலையினால் திங்க ளென்ன வளர்கின்ற காலத் தேயுன்
சிலையினால் அரியை வெல்லக் காண்பதோர் தவமும் செய்தேன்
தலையிலா ஆக்கை காண எத்தவஞ் செய்தேன் அந்தோ
நிலையிலா வாழ்வை இன்னும் நினைவனோ நினைவி லாதேன்.

Rāvaṇa's furious temper comes out thus sharply :

உற்ற கலாமுன்
கற்ற குரங்கைப்
பற்றுமி னென்றான்
முற்று முனிந்தான்.

Kamban's instinct for the right word, his suggestive and concentrated style and the technique of his poetry are unique. He has a remarkable gift of phrasing, for example :

கல்லும் புல்லுங் கண்டுருகப் பெண் கனி நின்றாள்...
அறம் வளர்க்குங் கண்ணாளன்...
அல்லையாண் டமைந்த மேனி யழகன்...
கருணையங் கோயிலு ளிருந்த கண்ணனை...
இருட் கனியும் போல்பவன்...

I have done no more than indicate lines of approach to a study of Kamban's poetry. Judged by any standard, he is assuredly one of the world-poets ; and his Ramayana remains a monumental wonder for all ages.

TAMIL—LITERARY AND COLLOQUIAL

B. GRAMMATICAL.

BY

R. P. SETHU PILLAI,

a. Nouns.

1. Appellative nouns are generally[1] formed in the literary language by the addition of the masculine and feminine formative suffixes[2] to abstract or neuter nouns. In the colloquial language the words *kāraṉ* and *kāri* are commonly employed as masculine and feminine terminations respectively of appellatives.[3]

	Lit.	Col.
Mas.	vambaṉ	vambu-k-kāraṉ[1]
Fem.	vambi	vambu-k-kāri
Mas.	koḍiyaṉ	koḍumai-k-kāraṉ
Fem.	koḍiyaḷ	koḍumai-k-kāri
Mas.	aḍiyāṉ	aḍimai-k-kāraṉ
Fem.	aḍiyāḷ	aḍimai-k-kāri.

1. *Kāraṉ* is occasionally employed as an appellative termination in the literary usage. The words kañca-kārar (braziers), tuṉṉa-kārar (tailors) occur in Cilappatikāram (Ch. V. 28, 32).

2. The suffixes *āḷaṉ* and *āḷi* are also used as singular terminations of appellative nouns in the literary language. In such cases the colloquial language employs the suffix *kāraṉ*.

Literary.	Colloquial.
kāval-āḷaṉ or kāval-āḷi	kaval-k-kāraṉ
kolai-y-āḷāṉ or kolai-y-āḷi	kolai-kāraṉ.

3. The word suffixes *kāraṉ* and *kāri* are sometimes attached in the colloquial language to the popular equivalents of literary terms.

Literary.	Colloquial.
Mas. Celvaṉ	Paṇa-k-kāraṉ
Fem. Celvi	Paṇa-k-kāri
Mas. Piṇi-y-aṉ or piṇi-y-āḷaṉ	Cīkku-k-kāraṉ
Mas. Ciṉattaṉ	Kōpa-k-kāraṉ.

Kāri is sometimes used as an epicene suffix, e.g., pāva-kāri.

4. The following revenue terms are in common use in the Tamil country.

viṇṇappa-k-kāraṉ (P.T.L.)	paṇṇai-k-kāraṉ (P.T.L.)
maṇiya-k-kāraṉ (P.T.L.)	taṇḍal-k-kāraṉ (P.T.L.)

(P.T.L.—Papers relating to the Tamil Language—by A. Robertson).

2. In the speech of the northen districts of the Tamil country, *kāraṉ* and *kāri* are commonly attached to nouns fitted with regular masculine and feminine terminations.

	Lit.	Col.
Mas.	puruṣaṉ	puruṣaṉ-kāraṉ
Fem.	peṇḍāṭṭi	peṇḍāṭṭi-k-kāri
Mas.	aṇṇaṉ	aṇṇaṉ-kāraṉ
Fem.	attai	attai-k-kāri

3. Abstract nouns of quality which are formed in the literary language by the addition of the sufix *mai* are commonly formed in the colloquial language by affixing the termination *tanam.*[5]

Lit.	Col.
kuḍi-mai	kuḍi-t-taṉam
maḍa-mai	maḍa-t-taṉam
piḷḷai-mai	piḷḷai-t-taṉam
ciṟu-mai	ciṉṉa-t-taṉam
peru-mai	periya-taṉam

4. The suffix *dār* Persian < dhāra (Skt)[6] which is a common termination of several Urdu terms current in the colloquial language is sometimes attached to indigeneous substantives or Sanskrit derivatives as a suffix indicative of right or possession.

5(a). The termination *taṉam* is sometimes attached to appellative nouns in the colloquial language, e.g. —

vīṇaṉ-taṉam	vīṇa-t-taṉam
muṭṭāḷ-taṉam	muṭṭāḷ-t-taṉam
pōkkiri-taṉam	pōkkiri-t-taṉam
pāittiya-k-kāran-taṉam	paittiya-k-kārat-t-tanam

Such a formation is occasionally found in the literary language, e.g., vaḷ-ḷaṟṟaṉam (vaḷḷal-t-taṉam)—Kambarāmāyaṇam, Ayōdyakaṇḍam, nagarnīṅgu, 92.

(b) taṉam is sometimes affixed to abstract or verbal nouns in colloquial usage, e.g. :—

aḍimai-taṉam	aḍimai-t-taṉam
ciṟumai-tanam	ciṟumai-t-taṉam; ciṉṉa-t-taṉam
kuṟumbu-taṉam	kuṟumbu-t-taṉam

6. The suffix *dāran* is also used for the same purpose, e.g.
kuttagai-dāran (Lessee) C.G. 14.
viṇṇappa-dāran (Petitioner) C.G. 62.
lēṇi-dāran (Creditor) C.G. 69.
vārsu-dāran (Heir) C.G. 61.
Hak > akku-dāran (Holder of a right) C.G. 63.
(C.G.—Classified glossary by Sivaramaiya.)

Urdu		Sanskrit	Tamil.
(Arabic)	Mirās-dār	anubōga-dār	aḍaimāna-dār
(Arabic)	Tāsil-dār	kiraya-dār	oṟṟi>otti-dār.
(Arabic)	Ḥaqq-dār		maṉu-dār
(Arabic)	Inām-dār		
(Arabic)	Candā-dār		

5. Colloquialisms are sometimes formed on the anology of literary terms.

Lit.	naṉmai-tīmai	Col.	nō-k-kāḍu[9]
Col.	naṉmai-tiṉmai[7]	Col.	vē-k-kāḍu
Lit.	kuṟṟa-vāḷi	Col.	pō-k-kāḍu
Col.	cutta-vāḷi[8]	Col.	vilu-k-kādu

4. The word *mānam*[10] is largely used as a nominal suffix in the colloquial language in cases where the literary language employs a suffix of the verbal noun.

Lit	Col.
tīrppu	tīr-mānam
cērkkai	cēr-mānam
aḍaku (aḍaiku)	aḍai-mānam
aḻivu	aḻi-mānam
varåvu	varu-mānam

5. In the colloquial language the principal noun in a sentence is repeated with initial variation probably for the sake of effect. In such cases the first syllable of the second word is *ki* or *kī* according as the initial syllable of the original word is short or long.

ki	kī
kaṟai-kiṟai	kādu-kīḍu
calli-killi	cāḍi-kīḍi
taḍi-kiḍi	tāḍi-kīḍi
paṉai-kiṉai	pāṉai-kīṉai
maram-kiram	māḍi-kīḍi

7. *Tiṉmai* is occasionally used in Tamil poetry. Refer Taniyan, Kambaramayanam.

8. *Cuttavāḷi* is commonly used in criminal courts of justice as the opposite of *Kuṟṟavāḷi* (guilty person).

9. These four words are formed by suffixing *kāḍu* to the verbal roots probably after the manner of *cākkāḍu* used in the literary language (Tirukkuṟaḷ, 339.)

10. *Mānam* is sometimes affixed to substantive nouns, e.g.
vēlai-māṉam kaṭṭu-māṉam
vāṉam, a variant of *māṉam*, is used as a suffix in cil-vāṉam.

6. In the literary language numeral appellative nouns of plurality are formed by affixing the epicine plural suffix to the numeral adjective.[10a] The colloquial language generally expresses plurality of persons by suitable post-positions to the neuter nouns of number.

Lit.	Col.
iru-v-ar	irandu-pēr (or āḷ)
aṟu-v-ar	āṟu-pēr
eṇ-mar	eṭṭu-p-pēr
nūṟṟu-v-ar	nūṟu-pēr
āyira-v-ar	āyiram-pēr

b. Pronouns.

1. In the colloquial language *nān*[11] in the first person singular and *nāṅgaḷ* in the first person plural are commonly used. *Nām*[12] is occasionally used in the first person singular by the dignitaries of the Church and the State.

In the second person, *nī*, *nīr*, and *nīṅgaḷ* are employed to denote different degrees of respectability. *Nī* is generally used with reference to inferiors, *nīr* with reference to equals and *nīṅgaḷ* with reference to superiors. Sometimes the reflexive plural *tāṅgaḷ* is used in the second person singular when the highest respect is meant to be expressed.

Similarly the demonstrative pronouns, *avaṉ*, *avar*, *avargaḷ* are used in the singular with reference to persons occupying inferior, equal and superior positions respectively. It must be said, however, that usage has not evolved a uniform standard of respectability applicable to the Tamil country as a whole, and hence there

10-a. The epicene plural suffix *ar*, (*ār*) is used as an honorific singular suffix, particularly in the colloquial usage of the south.

Sing.	Hon. Sing.
Aiyan	Aiyar
Rāvuttan	Rāvuttar
Mudali	Mudali-y-ār
Ceṭṭi	Ceṭṭi-y-ār.

11. *Yān* in the first person singular and *yām* in the first person plural are preferred to nān and nām in elegant literary usage.

12. In the colloquial language *Nām* is used in the plural as an inclusive pronoun but the inflectional base of this plural pronoun is commonly used as a polite or courteous singular. In the expressions Nam-paiyaṉ or namma paiyaṉ; nam vīḍu or namma vīḍu, the inflectional base which has the genetive force is really a polite singular, though plural in form.

are differences in the application of these honorific pronouns. For instance, *nīr* and *avar* which are regarded as terms of respect in the northern districts of the Tamil country are not considered to be sufficiently respectable in the southern districts. *Avargaḷ* corrupted into *avāḷ* is commonly attached in the colloquial language of the south to the name of the community to which a person belongs.

e.g. Aiyar-avāḷ Piḷḷai-avāḷ Mudaliyār-avāḷ.

Demonstrative singular pronouns are pluralised in the literary language by replacing the singular suffixes by plural particles but in the colloquial language they are generally pluralised by suffixing the neuter particle of pluralisation,[13] and the corresponding verbs are pluralised likewise.

	Mas. Sing.	Fem. Sing.	Mas. Plu.	Fem. Plu.	Neu. Sing.	Neu. Plu.
Lit.	avan̲	avaḷ	avar	avar	atu	avai
Col.	avan̲	avaḷ	avaṅgaḷ,	avaḷgaḷ	atu	atugaḷ

	Mas.-Fem.	Neu.
Lit.	avar vandār	avai vandan̲a
Col.	avaṅgaḷ vandāṅgaḷ avaḷgal vandāḷgaḷ	atugaḷ vandatugaḷ

2. Demonstrative and Interrogative relative participles are used in the colloquial language in cases where the literary language employs demonstrative and interrogative prefixes.

Lit.	Col.
It may be suggested that since Yoga is primarily attributed to Hiraṇyagarbha, Abhinava thought that the Yogasūtras were revealed by Hiraṇyagarbha, and the Bhāṣya was written by Patañjali. In the Śānta-rasa-discussion in the Abhinavabhāratī, the Yogasūtras are cited thrice, pp. 335, 338 and 340, and it is only in the case of the first of these quotations that Abhinava says anything regarding the author. This first quotation on p. 335 forms the sentence previous to the quotation which Abhinava explicitly ascribes to Bhujaṅgavibhu ; while he is so explicit in mentioning the author *of the* Bhāṣya-passage as Bhujaṅgavibhu, he says regarding the quotation of a Sūtra of Patañjali himself: "तत्रभवद्भिरप्युक्तम्–'तत्परं पुरुषख्यातेः गुणवैतृष्ण्यम्' इति ।" But if we examine the following sentence and understand the full force of 'Eva' in 'Bhujaṅgavibhu*naiva*', we can see that Abhinava means by his preceding 'Tatrabhavān' only Bhujaṅgavibhu. In his Mālinīvijayavārttika, p. 19, (Kasmir Series of Text and Studies) Abhinava quotes Patañjali as author of the Yogasūtra, III. 33. On pp. 190 and 240 of the Parātrimśikā (Kasmir Series), there are two references to one and the same

Yogasūtra, namely III. 17, on p. 190 as said by 'Śeṣamuni' and on p. 240 as Yogasūtra. All these prove that Abhinava took both the Sūtrakāra and the Bhāṣyakāra of Yoga as Patañjali.

There is yet one more quotation by Abhinava bearing on this question. In his Īśvarapratyabhijñāvimarśinī, Kasmir Series, XXII, pp. 200-201, Abhinava quotes चितिशक्तिरपरिणामिनी" and ends the observation with the words 'दर्शितं गुरुणा अनन्तेन'. This passage 'Citiśaktiḥ apariṇāminī' ascribed to Guru Ananta again reinforces the view that Abhinava considered the Bhāṣya also as the work of Patañjali, for this passage occurs in the Bhāṣya on I. 2, p. 6, Ānandāśrama edn.

In his gloss on the Vijñānabhairava, Kasmir Series, VIII, p. 112, Śivopādhyāya cites the second quotation from the Yogabhāṣya appearing in Abhinava's Gītārthasaṁgraha (उभयाधीनश्चित्तवृत्तिनिरोधः) and says on it: "इति पतञ्जलिनोक्ता". On pp. 55 and 66, Śivopādhyāya quotes from Patañjali, but in both cases here from the Sūtras (Sūtras III, 26-27 and II, 49-50).

At one stage of my investigation, I thought that, as in the case of the Gītā, so also in the case of the Yogasūtras and the Bhāṣya thereon, there must be some Kasmirian peculiarity. But an examination of practically all the Pratyabhijñā texts published in the Kasmir Series and elsewhere (TSS. for instance), has shown that no such peculiarity is there like Patañjali's common authorship of both the Sūtras and the Bhāṣya. If we examine the works of Kṣemarāja, Abhinava's own pupil and prolific writer of the system, we see that in Vol. VI of his commentary, the Uddyota, on the Svaccandatantra (Kasmir Series, 56), p. 51, Kṣemarāja quotes the Yogasūtra I-3 and I-24 and in his comments on the latter Sūtra says इत्येतत्सूत्रभाष्ये भगवता व्यासमुनिना etc. If Abhinava represented any tradition contradicting Vyāsa's authorship of the Bhāṣya and holding Patañjali, the Sūtrakāra himself, as the Bhāṣyakāra also, it is not possible that Abhinava's own pupil, Kṣemarāja, knew nothing of this tradition.

But how to explain Abhinava's ascription of Bhāṣya-passages, again and again, to Patañjali ? This can be answered only by another question. In his Locana on the Dhvanyāloka of Ānanda, Abhinava has three remarks which contradict our knowledge.

1. On p. 63, N. S. edn., Ānanda quotes from Vālmīki the verse 'रविसङ्क्रान्तसौभाग्यः etc.' as an example of Atyanta tiraskṛta vācya

dhvani, resting on the expression, 'Niśśvāsāndhaḥ'.* In the South Indian recensions this verse occurs in the Rāmāyaṇa in the Āraṇyakāṇḍa, Canto 16. The verse occurs in a description of Hemanta season by Lakṣmaṇa. But what does Abhinava says on this verse? He says that this is a verse spoken by Rāma: हेमन्तवर्णने पञ्चवट्यां रामस्य उक्तिरियम् । In the edition of Gaspare Gorresio, this verse occurs in Āraṇya, 22, as śloka 13, with slightly different readings, but here again Lakṣmaṇa is the speaker, and not Rāma. In the North-Western recension edited by Messrs. Bhagavaddatta and Viśvabandhu śāstri, this verse occurs in Āraṇya, 22, as śl. 13, and here again as spoken by Lakṣmaṇa.

2. On p. 142, N. S. edn., Abhinava ascribes the Kādambarīkathāsāra, which we know as a work of Abhinanda, to Abhinanda's father, Bhaṭṭa Jayanta.

3. On p. 151, Abhinava gives an analysis of the Tāpasavatsarāja, the play of Anaṅgaharṣa Māyurāja, drawing attention to the poet's skill in keeping up the background of Vāsavadattā-Vipralambha continuously through every one of the six acts. Here Abhinava names each act and cites a verse from each and in these citations, the verse cited as one from act IV actually occurs in act V, thus making two citations from act V, and none from act IV.

Regarding the second of the above three mistakes, Mm. Prof. S. Kuppuswami Sastriar explains that when Abhinava speaks of the Kādambarīkathāsāra as a work of Bhaṭṭa Jayanta*ka*, we have to take that the diminutive 'ka' in the end signifies Jayanta's son. But we have to take that the first and third instances in his Locana are slight mistakes natural in an encyclopaedic writer like Abhinava. Abhinava's citation of Vyāsabhāṣya as Patañjali's has to be placed on a par with the above instances from his Dhvanyālokalocana. For, with due deference to Prof. Kane, it is evident that none can attach greater weight on this question to the testimony of Abhinava than to that of Vācaspatimiśra.

On p. 331, Vol. I, of Mm. Anantakrishna Sastri's edition of the Brahmasūtras with nine commentaries, (Cal. Skt. Series I), Sahaja Sarvajña Viṣṇu Bhaṭṭopādhyāya says in his Ṛjuvivaraṇa—

"तदुक्तं पतञ्जलिना–'अपरिणामिनी हि भोक्तृशक्तिः अप्रतिसंक्रमा च[2] परिणामिन्यर्थे प्रतिसंक्रान्तेव तद्वृत्तिमनुपतति,–। "

2. The edition reads चापरिणामिन्यर्थे which is wrong.

This passage cited by Viṣṇubhaṭṭa occurs in the Bhāṣya as a quotation, with the introductory words "*Tathā coktam*" and Vācaspati identifies this as a quotation from Pañcaśikha, whom, according to Vācaspati, the Bhāṣya quotes rather often. This mistake is again like Abhinava's, and must be ignored.

In the Pātañjala section of the Sarvadarśanasaṁgraha, the author simply reproduces this quotation as made by Viṣṇubhaṭṭa, with Patañjali's name on p. 125 (Ānandāśrama edn.)[3] though the author knows on p. 127, *ibid.*, that the Bhāṣya was written by Vyāsa : 'तदभाषि व्यासभाष्ये योगसूत्रविवरणपरे, अथेत्ययमधिकारार्थः

Abhinava, Śeṣa or Patañjali and Nānyadeva.

In the reference extracted by us from the gloss of Abhinava on the Īśvarapratyobhijñā of Utpala, we saw Abhinava referring to the Yoga-author Patañjali, the Great Serpent, Śeṣa or Ananta, as '*Guru*'. What does this mean ? This refers to the Śeṣa āryās, the work which Abhinava made into his Paramārthasārasaṁgraha. Abhinava refers to Śeṣa's Āryās as Ādhārakārikās and quotes from them in his Gītārthasaṁgraha and Tantrāloka. Śeṣa is considered as Śeṣa Bhaṭṭāraka, a Guru of Abhinava's Pratyabhijñā school. Hence the reference to him as Guru.

It is said by Dr. K. C. Pandey, in his book on Abhinavagupta, that Abhinava quotes in his Gītārthasaṁgraha from Śeṣa's Āryās "*as from a Śruti*", pp. 58-59. This is wrong, for the word 'Śruti' in the phrase प्रमाणभूतश्रुतिविरोधात्' refers to Vedic passages like 'ब्रह्म वेद ब्रह्मैव भवति'; and with "अस्ति हि 'तीर्थे etc.'" we have the next sentence giving additional authority. Equally to be ignored is Dr. Pandey's paragraph on p. 9 of his thesis on Abhinavagupta as an incarnation of Śeṣa, which he says is the tradition in dance-circles in South India. Neither our being natives of South India nor our touch with dance-circles bear out this tradition, which distance has vouchsafed to Dr. Pandey. This is a bit of research on a par with another bit of research done by Dr. Pandey on pp. 121-125, where the doctor imagines Nānyadeva to have been quoted by Abhinava in his commentary on the Nāṭyaśāstra, on p. 255, Vol. I, Gaek. edn. If Dr. Pandey had carefully seen p. 253, it must have been plain to him that the text on pp. 253 to 261 form not Abhinava's commentary, but the commentary written and supplied by Mr. M. R. Kavi to fill a gap in the Mss. of the Abhinavabhāratī. This the editor

3. Again on p. 130, the same reference is repeated.

Mr. Kavi says in a footnote on p. 253 ; further, Abhinava's colophon appears on p. 253. In the portion in which Dr. Pandey takes Abhinava to have cited Nānyadeva, Abhinava cites King Raghunātha of Tanjore of the 17th century ! (See p. 255 itself). On p. 124 of his thesis, Dr. Pandey says : " For, we have ascertained from Mr. Ramakrishna Kavi that the passage quoted by Abhinava from Nānyadeva's commentary, given above, is actually found in the seventh chapter, called Rāgādhyāya, of the Ms. of Nānya's commentary." This is impossible ; Mr. Kavi must have said that the passage cited occurred in the Rāgādhyāya, and not also that the passage was quoted by Abhinava. So Dr. Pandey need take no more trouble to reconsider Nānyadeva's date

I 'இன்னான் ஏது ஈங்கு'

ஆசிரியர் தொல்காப்பியனார், சொல்லதிகாரத்தில் வேற்றுமை யியற்கண் 10-ஆந் சூத்திரம்முதல் 21-ஆந் சூத்திரம்முடிய 12 சூத்திரங்களில், இரண்டாம் வேற்றுமைமுதல் ஏழாம் வேற்றுமைவரை ஆறு வேற்றுமைகளைக்குறித்துக் கூறியுள்ளார். அவ்வாறு கூறுமிடத்து, ஒவ்வொரு வேற்றுமையின் உருபினையும், அதன் முக்கியமான பொருளையும் முதற் சூத்திரத்திலும், அப்பொருளின் வகையினை [1]இரண்டாஞ் சூத்திரத்திலும் உரைத்திருக்கின்றார். அம்முறையில், மூன்றாம் வேற்றுமையின் உருபினையும் அதன் முக்கியமான பொருளினையும்

> 'மூன்றாகுவதே
> ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
> வினைமுதல் கருவி அனைமுதற் றதுவே'

என்னும் முதற் சூத்திரத்திற் கூறி, பொருளின் வகையினை,

> 'அதனி னியறல்......... அதன்பால என்மனார்'

என்னும் இரண்டாஞ் சூத்திரத்தில் விளக்கினார். அச்சூத்திரத்தில்,

> 'இன்னான் ஏது ஈங்கென வரூஉம்'

என்னும் அடியின் பொருளில், உரையாளர் மாறுபடுகின்றனர். ஆகலின், அதனை ஈண்டு நோக்குதும்:

இளம்பூரண அடிகள், 'இன்னான் என்பதூஉம் [2]ஏதுவின்கண்ணும் வரும் மூன்றாம் வேற்றுமை' என்று பொருள் கூறி,

> 'இன்னான் என்பது—கண்ணாற் கொத்தை, காலான் முடவன் என்பன
> ஏது என்பது—முயற்சியாற் பிறத்தலான் சொல்லு நிலையாது என்பது'

என்று உதாரணங் கொடுத்தார்.

சேனாவரையர், 'இன்னான் ஏது என்பது—முயற்சியிற் பிறத்தலான் ஒலி நிலையாது என்பது. "அதனின் ஆதல்" எனக் காரகவேது முற் கூறப்பட்டமையான் இது ஞாபகவேதுவாம். இப்பொருள் ஆனுருபிற்கும், இன்னுருபிற்கும் உரித்து என்பது விளக்கிய, "ஏது" என்னாது, "இன்னான் ஏது" என்றார். "இன்னான்" என்பது உம்மைத்தொகை. அவற்றது ஏதுப்பொருண்மை என்றவாறு' என்று உரைத்தார்.

ஆசிரியர் நச்சினார்க்கினியர், சேனாவரையருரையைப் பின்பற்றி, 'இன்னான் ஏது—இன்னும் ஆனும் ஆகிய ஏதுப்பொருண்மை' என்று பொருள் கூறி, 'முயற்சியிற் பிறத்தலான் ஒலி நிலையாது. இதனுள், முயற்சியின் என்பது காரகவேது; பிறத்தலான் ஒலி நிலையாது என்பது ஞாபகவேது' என்று உதாரணங் கொடுத்து விளக்கினார்.

கல்லாடர், 'இத்தன்மையான் என்னும் பொருண்மை, ஏதுப் பொருண்மை' என்று பொருள் கூறி,

---

1. சிறுபான்மையாய் வரும் பொருளும் கூறப்பட்டுளது.
2. 'ஏதுவினைக்கண்ணும்' என்று பதிப்பித்திருப்பது தவறு என்பது **சொல்லதிகாரக் குறிப்பினால்** அறியலாகும்.

'இன்னான் என்பது—இத்தன்மையான் என ஒருவன்பெற்றி கூறல்.
அது கண்ணாற் கொத்தை, காலான் முடவன் என்பன
ஏது—முயற்சியிற் பிறத்தலான் இசை நிலையாது என்பது'

என்று உதாரணங் கொடுத்து, 'முன்னும் ஏதுவின் பாகுபாடு ஓதி வைத்துப் பின்னும் "ஏது" என ஓதியது அவ்வாறொழிய வருவனவற்றைக் கருதிப்போலும். அவ்வேது—காரகவேதுவும் ஞாபகவேதுவும் என இருவகைத்து. முயற்சியிற் பிறத்தல் காரகம்; பிறத்தலான் இசை நிலையாது என்பது ஞாபகம். அஞ்ஞாபகத்தைப்போலும் ஈண்டு ஏது என ஓதியது' என்று விளக்கமும் எழுதினார்.

தெய்வச் சிலையார், 'இன் என்பது—இன் என்னுஞ் சொல். ஆன் என்பது ஆன் என்னுஞ் சொல். ஏது என்பது ஏது என்னுஞ் சொல்' என்று பொருள் கூறி, 'புகை உண்மையின் நெருப்புண்மை அறிக; புகை உண்மையான் நெருப்புண்மை அறிக; புகை ஏதுவாக நெருப்புண்மை அறிக' என்று உதாரணங் கொடுத்தார். இன்னும் அவர், 'அன்ன பிறவாவன—காரணம், நிமித்தம், துணை, மாறு என்பன' என்று கூறி, அவற்றிற்கும் உதாரணம் கொடுத்துள்ளார். நிற்க,

'இன்னா னேது ஈங்கென வரூஉம்'

என்னும் அடியில், ஈங்கு என்பதனைக்குறித்து, [1]உரையாசிரியரும், கல்லாடரும் தெய்வச்சிலையாரும் ஒன்றுமே கூறிற்றிலர். சேனாவரையர், 'என என்பதனை மாற்றி ஏது என்பதன்பின் கொடுத்து, "ஈங்கு வரூஉம் அன்ன பிறவும்" என இயைக்க' என்றார். நச்சினார்க்கினியர், 'என வரூஉம்; ஈங்கு வரூஉம் அன்ன பிறவும்' என்று, 'வரூஉம்' என்பதனை இரண்டிடத்துக் கூட்டிப் பொருளுரைத்தார். அவர், 'ஈங்கு' என்பதற்கு, 'வினைமுதலும் கருவியும் ஆகிய பொருளிடத்து' என்று எழுதியுள்ளார்.

ஆசிரியர், 'அதனி னியறல்' என்னுஞ் சூத்திரத்தில் மூன்றாம் வேற்றுமைப் பொருளின் வகையினைக் கூறுகின்றாராகலின், அதிற் கூறியனவெல்லாம் அவ்வேற்றுமையின் பொருள்வேறுபாடே யாகும். ஆகலின், சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் 'இன்னான்' என்பதை இன், ஆன் என்று பிரித்து உருபாகக் கொண்டதூஉம், தெய்வச்சிலையார் இன், ஆன், ஏது என்னுஞ் சொற்களே வரும் என்றதூஉம் அமைவன வல்ல என்பது எளிதிற் புலனாகும்.

இனி 'இன்னான் ஏது ஈங்கென வரூஉம்' என்னும் அடியின் அமைவுடைப்பொருள் யாது என்று நோக்குதும்:

மூன்றாம் வேற்றுமைச் சூத்திரத்தில்,

'வினைமுதல் கருவி அனைமுதற் றதுவே'

என்று கூறப்பட்டுள்ள வினைமுதல் கருவிப்பொருள்களே,

'கர்த்ரு கரணயோ: த்ருதீயா' (2. 3 : 18)

என்னும் பாணினீய சூத்திரத்திலும் கூறப்பட்டுள்ளன.

1. 'இன்னான் ஏது' என்பவற்றிற்கு அமைவுடைய பொருள் கூறியவர் 'ஈங்கு' அல்லது 'ஈங்கனம்' என்பதற்கும் பொருள் கூறாது விடுவாரல்லர் எனவும் அது விடுபட்டிருத்தல் வேண்டும் எனவும் ஐயம் உண்டாகின்றது.

அச்சூத்திரத்திரத்தை யடுத்து,

[1] 'ஸஹயுக்தே அப்ரதானே' (2. 3 : 19)

என்னுஞ் சூத்திரமும்,

அதனையடுத்து,

'யேநாங்க விகார:' (2. 3 : 20)

'இத்தம் பூதலக்ஷணே' (2. 3 : 21)

என்னுஞ் சூத்திரங்களும், பின்னர்,

'ஹேதௌ' (2. 3 : 23)

என்னுஞ் சூத்திரமும் உள்ளன. இவற்றுள், 'யேநாங்க விகார:' என்பது முதலிய மூன்று சூத்திரங்களின் பொருளும்

'இன்னான் ஏது ஈங்கு'

என்பவற்றின் பொருளும் தம்முள் ஒத்தன வரும்.

இன்னான் என்பது—இன்னவன் என்பதாம். அஃதாவது, நெடு மூக்கன், குறுங்கழுத்தன் என்பனபோல உறுப்புக்களைப்பற்றி வருவது. இது வழக்கினுள்ளும் பெரும்பாலும் அறியலாகும். அதனானே, இளம் பூரண அடிகள்,

'இன்னான் என்பது—கண்ணாற் கொத்தை, காலான் முடவன் என்பன'

என் றெழுதினார். 'யேநாங்க விகார:' என்னுஞ் சூத்திரத்திற்கும் இப்பொருள் படுகின்ற—

'அக்ஷ்ணா காண:' (கண்ணாற் குருடன்)

என்பதனையே வடமொழியில் உதாரணமாகக் காட்டியிருத்தல் அறியத் தக்கது. இதனால், 'யேநாங்க விகார:' என்னுஞ் சூத்திரத்தின் பொரு ளும் 'இன்னான்' என்பதனாற் குறித்த பொருளும் ஒன்றே என்பது போதரும்.

'ஏது' என்பதும்,

'ஹேதௌ'

என்னுஞ் சூத்திரத்தின் பொருளும் ஒன்றேயாதல் கூறுமலே விளங்கும். ஏதுவிற்கும் கரணத்திற்கும் (கருவிக்கும்) உள்ள [2] வேறுபாடு அறியத் தக்கது.

இனி, 'ஈங்கு' என்பதனை நோக்குதும்: 'ஈங்கு' என்பதற்கு 'ஈங்கனம்' என்னும் பாடம் உண்டென்பது [3] சேனாவரையத்தால் அறியப்படுகின்றது. அதுவே பழைய பாடமா யிருக்கலாம் எனத் தோன்றுகின்றது. ஈங்கனம் என்பது இத்தன்மை, இப்படி என்னும் பொருளது. இனி, 'ஈங்கு' என்பதற்கும் இப்பொருள் உளது.

'முழவுத்தோளான் முறுவலித் தீங்கே இருநீயென்று'

(சீவக. 1593)

---

1. இச்சூத்திரப் பொருளோடு தொடர்புடையது 'ஒருவினை ஒடுச்சொல் உயர்பின் வழித்தே' (வேற். மயங்.) என்பது.

2. ஒரு தொழிலை நிறைவேற்றுதற்கு நேரே சாதகமா யிருப்பது காரணம்; பிறகாரணமெல்லாம் ஏது. ஏது—பொருள் குணம் தொழில் இம் மூன்றற்கும் காரணமாகும்.

3. 'ஈங்ஙனம்(ஈங்கனம்) என்று பாடம் ஓதுவாரும் உளர்' என்பது சேனாவரையம்.

என்னும் அடியில், 'ஈங்கே' என்பதற்கு 'இப்படியே' என்று ஆசிரியர் நச்சினார்க்கினியர் பொருள் கூறியிருக்கின்றார். [1] நற்றிணையிலும் ஈங்கு என்பது இப்படி என்னும் பொருளில் வந்துளது. ஆங்கு என்னுஞ் சொல் அத்தன்மை, அப்படி என்னும் பொருளிலும், யாங்கு என்பது எப்படி, எத்தன்மை என்னும் பொருளிலும் பயின்றுவருதல் ஈண்டைக்குக் கருதத்தகும்.

இவற்றால், 'ஈங்கு' (ஈங்கனம்) என்பது,

'இத்தம் பூதலக்ஷணே'

என்னுஞ் சூத்திரத்தின் பொருளோடொத்ததாகும் எனத் தோன்றுகின்றது. 'இத்தம்' என்பது 'இப்பிரகாரம், இப்படி' என்னும் பொருளது; 'பூத' என்பது 'அடைந்தது' என்பதாகும்.

'ஜடைகளால் தாபஸன்'

என்பது இச் சூத்திரத்திற்குக் காட்டப்பட்டுள்ள உதாரணம். இது போல்வதே 'ஈங்கு' (ஈங்கனம்) என்பதற்கு உதாரணமாகும். 'இன்னோன்' என்பதற்கு இத்தன்மையான் என்று கல்லாடர் கூறியது ஈண்டைக்கு அமைதல் இன்று.

ஆசிரியர், 'ஈங்கென வரூஉம்' என்னும் தொடரில், 'என', என்னுஞ் சொல்லை 'ஈங்கு' என்பதன்பின்னர் வைத்திருத்தலின், 'ஈங்கு' என்பது மூன்றாம் வேற்றுமைப்பொருள்களுள் ஒன்றேயாகும். ஆகலின், சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் 'என' என்பதனை மாற்றிப் பொருள் கூறியது அமையாமை எளிதின் அறியப்படும். 'இன்னோன் ஏது ஈங்கு' என்பனை ஒருங்கு கூறப்பட்டிருத்தலும், 'யோகாங்க விகார:' என்னுந் தொடக்கத்துச் சூத்திரங்கள் ஒருங்கே அமைந்திருத்தலும் உளங்கொளற் பாலன.

'இன்னோன்' என்பதற்கு இளம்பூரண அடிகள் காட்டிய உதாரணம் பொருந்தாதென்று, வடநூற்புலமை வாய்ந்த சேனாவரையர் மறுத்துக்கூறியது வியப்பினைத் தருகின்றது. சொல்லதிகாரக் குறிப்பின் ஆசிரியர் டாக்டர் ஸ்ரீ சுப்ரமணிய சாஸ்த்ரியாரவர்கள், '"அன்ன பிறவும்" என்பதனால், "கண்ணாற் கொத்தை" முதலியவற்றை அடக்கிய சேனாவரையர், சூத்திரத்தினுள் "இன்னோன்" என்பதற்கு அவற்றை உதாரணமாகக் காட்டிய உரையாசிரியர்கொள்கையை மறுத்தது பொருந்துமா' என்று எழுதியிருப்பது ஈண்டு அறியத்தக்கது.

'இன்னோனேது ஈங்கென வரூஉம்' என்னும் அடியில், 'இன்னோன் ஏது என்பவற்றோடு ஒருங்கு கூறப்பட்டிருத்தலின், 'ஈங்கு' என்பது மூன்றாம்வேற்றுமைப் பொருளதே யாதல்வேண்டும் என்பதூஉம், உரையாசிரியரும் கல்லாடரும் தெய்வச்சிலையாரும் அதனைப்பற்றி ஒன்றுமே கூறாது விடுத்ததும் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் அதற்கு மூன்றாம்வேற்றுமைக் குரிய பொருள் கூறாது மாற்றிக்கூட்டி யுரைத்ததும் அமைவல்ல என்பதூஉம், அஃது 'இத்தம் பூதலக்ஷணே' என்னுஞ் சூத்திரத்தின் பொருளோடொத்ததாகக் காண்கின்றது என்பதூஉம் அடியேன்கருத்து. அறிஞர் ஆராய்வாராக.

1. 'பேதை நெஞ்சம் கவலை கவற்ற, ஈங்கா கின்றால்.' நற். 144.

II தமிழிலக்கணமும் ஏனைத் திராவிட மொழிகளும்

நமது தேசத்தில் வழங்குந் திராவிட மொழிகள் பலவற்றுள்ளும் தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம் இந் நான்கு மொழிகளே இலக்கிய இலக்கண வளம் பெற்றுள்ளவை. இவற்றுள் தமிழ்மொழியே மிக்க தொன்மையவாகிய இலக்கிய இலக்கணம் உடையது. தமிழி லுள்ள நூல்களெல்லாவற்றுள்ளும் தொல்காப்பியமே முற்பட்டது என்பது அறிஞர் பல்லோர்கருத்து.

தொல்காப்பியத்திற் கூறப்பட்டுள்ள இலக்கணங்களெல்லாம் மிக்க பழமைய — அவற்றுட் சில, சங்கச்செய்யுட்களிலும் அமைந்திருக்க வில்லை. அவற்றிற்கு மாறுனவை பலப்பல, பிற்காலத்துச் செய்யுட் களில் காண்கின்றன. ஆயின், தொல்காப்பியம் கூறும் இலக்கண வழக் குக்கள் பலவும் சங்கச்செய்யுட்களிற் காணும் அமைதிகள் (பிற்காலத் துச் செய்யுட்களிற் காணப்படாதவை) சிலவும் கன்னடம், தெலுங்கு, மலையாளம் இம் மொழிகளிற் காண்கின்றன. அவற்றுள்ளும் கன்னட மொழியில்தான் தமிழ்வழக்குக்கள் பலப்பல உள்ளன.

தமிழில் சுருங்கக் கூறியிருப்பவை கன்னடத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. உதாரணமாக—உடம்படு மெய்யின் இலக்கணம் தொல்காப்பியத்திலும் நன்னூலிலும் ஒவ்வொரு சூத்திரத்திற் கூறப் பட்டுளது. கன்னடத்தில் இவ்விவ் வீறுகளுக்குமுன் இன்ன உடம் படுமெய் வரும் என்பது [1]மூன்று சூத்திரத்திலும், இவ்விவ் விடங் களில் உடம்படுமெய் வரலாகாது என்பது [2]மூன்று சூத்திரத்திலும் கூறப்பட்டுள்ளன. இவைபோன்ற இலக்கண வொப்புமைகளை இக் கட்டுரையில் எழுதுகின்றிலேன்; தொல்காப்பியத்திலும் பண்டைச் செய்யுட்களிலும் காணும் இலக்கண வழக்குக்களுள் பிற்காலச் செய்யுட்களில் அருகியவையும் வழக்கிழந்தனவுமான வழக்குக்கள்— கன்னடம், தெலுங்கு, மலையாள மொழிகளில் நிலைபேறுடை யவை—சிலவற்றைமட்டும் ஈண்டு எழுதுகின்றேன். இவற்றால், தமிழ் மொழிக்கும், கன்னடம் முதலிய மொழிகட்கும் உள்ள ஒற்றுமை

1. சப்தமணி தர்ப்பணம். சூ. 63—65.
2. ,, ,, 66—68.

அறியப்படுதலேயன்றி, பழைய வழக்குக்களைக் கன்னடம் முதலிய மொழிகள் விடாமல் மேற்கொண்டுள்ள ஊற்றமும் அறியப்படும்.

1. முன்னிலை யொருமைப்பெயர் :

நீ என்னும் முன்னிலை யொருமைப்பெயர் இரண்டாம் வேற்றுமை முதலியவற்றின் உருபுகளை ஏற்குமிடத்து நின் என்றாகும் என்று ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியுள்ளார். அவ்விதிப்படி, நின்னை நின்னொடு நினக்கு நின்னின் நினது நின்கண் என்று வரும். இவ்வாறே பண்டைச் செய்யுட்களில் வந்துளது. ஆயின், பிற்காலத்தில், நின் என்பது நுன் எனத் திரிந்து, வேற்றுமையுருபேற்றவழி நுன்னை நுன்னொடு நுனக்கு முதலிய வடிவில் வழங்கியது. அதுவும் பின்னர், உன் எனத் திரிந்து, உன்னை உன்னொடு உனக்கு என்னுந் தொடக்கத்தவாய் வழங்குவதாயிற்று. இதுவே இக்காலத்தில் வழங்குகின்றது. நீ என்னும் பெயர்க்கும், உன் என்னும் வடிவிற்கும் யாதொரு தொடர்பும் இல்லையன்றோ?

தமிழில் இவ்வாறு திரிந்துபோயினும் மலையாளத்தில் நின்னெ, நின்னொடு, நினக்கு, நின்னினின்னு நின்னெக்காள், நின்றெ (நின்னுடெ), நின்கல் (நின்கண்) என நின் என்னும் வடிவமே இன்றும் இருவழக்கிலும் வழங்குகின்றது. புதுக்கன்னடத்திலும் 'நின்னன்னு, நின்னிந்த, நினகெ, நின்னதெஸெயிந்த, நின்ன, நின்னல்லி என்று நின் என்னும் வடிவமே உளது. தெலுங்கில் இரண்டாம் வேற்றுமையில் நின் என்பதுவும், மற்ற வேற்றுமைகளில் நீ என்பதுவும் உள. இலக்கியவளம் இல்லாத மொழிகளாகிய துளு, துத, கோத, குயி, ஒராஒன், ராஜமஹால் மொழிகளிலும் நின் என்னும் வடிவம் நிலைபெற்றிருக்கின்றது.

2. சாரியை - அத்து :

நிலா, மழை, வெயில், இருள் இச் சொற்களுக்கு அத்துச் சாரியை வரும் என்று ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியுள்ளார்[1]. ஆயின், இச் சொற்கள் அத்துச் சாரியை பெற்றுவருதல் காணப்படவில்லை. (இவற்றுட் சில[2] ஒரோவழி அத்துச் சாரியை பெற்று வந்திருக்கலாம்.) ஆயின், மலையாளத்தில், நிலா மழை வெயில் என்னுஞ் சொற்கள் அத்துச் சாரியை பெற்றே வருகின்றன. இருள் என்னும் பொருளில் இருட்டு என்னுஞ் சொல் வழங்குதலின் அச்சொல் அத்துச் சாரியை பெற்று வருகின்றது. ஆகவே, நிலா முதலிய நான்கு சொற்களும் அத்துச் சாரியை பெற்று வருதல் அறியலாகும்.

---

1. எழுத்ததி. 228, 287, 377, 402.
2. 'இருளத் திதுவென் இதுவென் இதுவென்னோ'. பெரிய திருமொழி. 10. 8 : 3.

[1] ‘ஶாதி குளிர்நிலாவத்துத்தமே மெத்தமேல்’

என்னுமிடத்து, நிலா என்னுஞ் சொல் அத்துச்சாரியை பெற்றுளது காண்க. இவ்வாறு வருகலை நோக்கி,

[2] ‘இருட்டத்து நிலாவத் தென்
னித்யாதிக் கத்து தன்னெயோ......’

என்று, இக்காலத்தில் ஸ்ரீ ராஜராஜ வர்ம கோயிற்றம்பிரானவர்கள் இலக்கணம் வகுத்துள்ளார். அன்றியும் அவர்,

[3] ‘அத்து வேதிலுமே சேரும்
கால தேஶ விவக்ஷயில்’

என்று சூத்திரம் செய்து,

(காற்றத்து—காற்றுள்ள இடத்து அல்லது காற்றுள்ள காலத்து)
மழயத்து—மழையுள்ள இடத்து அல்லது மழையுள்ள காலத்து

என்று உதாரணமும் காட்டியுள்ளார். வெயிலத்து, மழயத்து என்பது அம்மொழியில் சாதாரண வழக்கு.

3. உள் (உருபு) :

உள் என்னும் ஏழனுருபு ஒரு பொருளை ஒரு குழுவினின்று பிரிந்து உறுதிப்படுத்தும் பொருளில் (நிர்த்தாரணார்த்தத்தில்), தமிழ் இலக்கணத்திலும் இலக்கியத்திலும் பண்டு வழங்கப்பட்டுளது. பிற் காலத்தில் அவ்வழக்குக் கெட்டது. இக்காலத்தில் அதனை நோக்கும் எண்ணமே இல்லாதொழிந்தது. அதனால், ‘அவருள் இவன் நல்லவன்’ என்று எழுதவேண்டுவதனை, ‘அவரில் இவன் நல்லவன்’ என்று எழுதி விடுகின்றனர். ‘அவரில் இவன் நல்லவன்’ என்பது ‘அவரைக்காட்டிலும் இவன் நல்லவன்’ என்னும் பொருளைத் தருதலையன்றி, ‘அவருள் இவனே நல்லவன்’ என்னும் பொருளைத் தாராதன்றே?

தெலுங்கு கன்னடங்களில் நிர்த்தாரணார்த்தத்தில் உள் என்பதுவே வருகின்றது. உள் என்பது தெலுங்கில் ‘லோன்’, ‘லோபல’ என்று வழங்கும்; கன்னடத்தில் ‘ஒள்’ என்று வழங்குகின்றது.

[4] ‘லோபல நிர்த்தாரணேத்பவா ஷஷ்ட்டீ’

‘நிர்த்தாரணார்த்தத்திற் பிறந்த ஷஷ்ட்டிக்கு லோபல என்பது வரும்’ என்பது தெலுங்கு இலக்கணம்.

[5] ‘ஆதாரம ததிகரண மல்லி ஸப்தமி திளி நிர்த்
தாரண......அர்த்தகதம்’.

என்பது கன்னட இலக்கணம். ‘ஆதாரமாயிருப்பது அதிகரணம் எனப்படும். அங்கு ஏழனுருபு வரும். தெளி; அது நிர்த்தாரணம்...... பொருள்களை உடையது’ என்பது இதன் பொருள்.

இவ்விலக்கணம் மாறாது இவ் விருமொழியிலும் இன்றும் நிலைத்துளது. வழக்கிலும் அவ்வாறே வழங்குகின்றது.

---

1. சந்த்ரோத்ஸவம். 1 : 62.
2. கேரளபாணினீயம். சூ. 68.
3. „ சூ. 67.
4. ஆந்த்ர ஶப்த சிந்தாமணி. 3:31.
5. ஶப்தமணி தர்ப்பணம். 195.

4. தருதல், வருதல் என்னுஞ் சொற்கள்:

ஆசிரியர் தொல்காப்பியனார், தருதல் வருதல் கொடுத்தல் செல்லுதல் என்னும் நான்கு சொற்களும் மூன்றிடங்கட்கும் வரும் என்று முதலிற் கூறி, பின்னர்,

[1] 'தருசொல் வருசொல் ஆயிரு கிளவியும்
தன்மை முன்னிலை ஆயி ரிடத்த'

[2] 'ஏனை இரண்டும் ஏனை இடத்த'

என்று வகுத்துக் கூறியுள்ளார். அவர் கூறிய இலக்கணம் பண்டைச் செய்யுட்களிலேயே பிறழ்வதாயிற்று. இக்காலத்தில் அந் நியதி அறவே யொழிந்தது. ஆயின், மலையாள மொழியில், கல்லாதவர் இளஞ்சிறுஅர் முதலியோரும், 'தரு' என்னுஞ் சொல்லைப் படர்க்கையிலும, 'கொடு' என்னுஞ் சொல்லைத் தன்மை முன்னிலைகளிலும் வழங்குதல் இலர். செய்யுட்களிலும் யான் அறிந்தவரை பிறழ்ந்துவந்திருப்பதாகத் தெரியவில்லை.

5. தன்மை, முன்னிலைப் பெயர்களோடு விகுதி சேர்ந்து வருதல்:

படர்க்கைப் பெயரைத் தன்மை முன்னிலைகளில் வழங்கும்போது அப்பெயரொடு தன்மை முன்னிலையைக் குறிக்குஞ் சொல்லைச் சேர்த்து வழங்கும் வழக்குப் பண்டைச் செய்யுட்களில் உளது. அஃதாவது, அடியன் என்னும் படர்க்கைப் பெயரைத் தன்மைக்கண் வழங்கும் போது, அதனோடு, தன்மையைக் குறிக்கும் ஏன் என்பதனைச் சேர்த்து அடியனேன் என்று வழங்குதல்போல்வது.

[3] 'யாமவன் கிளைஞரேம்'

[4] 'வான வரம்பனை நீயோ பெரும'

[5] 'யாரை யோநீ'

[6] 'சுரத்திடை யிருந்தனிர் யாரீர்'

என்று பண்டைச் செய்யுட்களில் வந்திருப்பன காண்க. தன்மையொருமையைக் குறிக்க 'என்' என்பதனையும், தன்மைப் பன்மையைக் குறிக்க 'ஓம்' என்பதனையும் சேர்த்து வழங்கும் வழக்குச் சாசனங்களில் யாண்டுங் காணலாகும். இவ்வழக்குப் பிற்காலத்தில் அருகியது. முன்னிலையைக் குறிக்க ஐ, இர், ஈர் என்பன சேர்த்து வழங்கும் வழக்கும் ஒழிந்தது. ஆயின், இதுபோன்ற வழக்குத் தெலுங்கில் நிலைபெற்றுளது. இதுபற்றிய இலக்கணம் [7]ஆந்த்ர ஶப்த சிந்தாமணியில் நான்கு சூத்திரங்களிற் கூறப்பட்டுளது. அவ்விலக்கணத்திற்கு மாறாக—படர்க்கைப் பெயரை அப்படியே தன்மை முன்னிலைகளில் வழங்குதல்—இன்றளவும் இல்லை. உலக வழக்கிலும் அந் நியதி பெரும்பாலும் உளது. கன்னடமொழியில் இவ்வழக்கு உறழ்ச்சியாய் வரும் என்பது [8]ஶப்த மணி தர்ப்பணத்தினால் அறியப்படுகின்றது.

---

1. தொல். சொல். 29.
2. „ 30.
3. புறம். 144.
4. „ 2.
5. சிலப். 20:49.
6. புறம். 141.
7. ஹலந்தபரிச்சேதம். 32—5.
8. ஶப்தமணி தர்ப்பணம். 230.

6. எல்லாம் என்னுஞ் சொல் :

எல்லாம் என்னுஞ் சொல் அஃறிணைப் பன்மையை உணர்த்துஞ் சொல். அது, தன்மைப்பன்மைக்கண் அஃறிணையை உளப்படுத்திய வழியன்றி உயர்திணைக்கண் வருதல் இல்லை என்று ஆசிரியர் தொல்காப்பியனார்,

[1]'தன்னு ளுறுத்த பன்மைக் கல்ல
துயர்திணை மருங்கி னாக்கம் இல்லை'

என்னுஞ் சூத்திரத்திற் கூறியுள்ளார். அதன்படி 'யாமெல்லாம்' என்றல் அமையுமேயன்றி, படர்க்கைக்கண், 'அவரெல்லாம்' என்றல் அமையாது; 'அவரெல்லாரும்' என்பதே அமையும். ஆயின்,

[2]'புலவ ரெல்லாம் நின்னோக் கினரே'

என்று பண்டைச் செய்யுளிலேயே வந்துளது.

எல்லாம் என்னுஞ் சொல் தெலுங்கில் எல்லன் என்று வழங்கும். அஃது அஃறிணைச் சொல்லொடு சேர்ந்து 'அவியெல்லன்' (அவையெல்லாம்) என்று வருமேயன்றி, உயர்திணைச் சொல்லோடு சேர்ந்து, 'வாரெல்லன்' (அவரெல்லாம்) என்று வருதலே இல்லை. இக்காலத்து வழக்கிலும் அவ்வாறே உளது.

எல்லாம் என்பது புதுக் கன்னடத்தில் எல்லவு என்று வழங்கும். அஃது அஃறிணைப் பெயரோடுமட்டுமே சேர்ந்துவரும். உயர்திணைப் பெயரோடு 'எல்லரு' என்பதுவே சேர்ந்துவரும். 'அவரெல்லரு பந்தரு' (அவரெல்லாரும் வந்தனர்) என்று வருதலேயன்றி, 'அவரெல்லவு பந்தரு' (அவரெல்லாம் வந்தனர்) என்று வருதலே இல்லை.

7. உயர்திணைப் பெயருக்கு வரும் அடைமொழி :

உயர்திணைப் பெயர்க்கு அடையாக வரும் எண்கள் எண்ணியற் பெயராய் வருதலே பழைய வழக்கு; அஃதாவது—அரசர் என்னுஞ் சொற்கு அடையாக மூன்று என்னும் எண் வரல்வேண்டுமாயின், அது மூவர் என்றே வரும் என்பதாம். 'மூவரரசர்' என்று வருமேயன்றி, 'மூன்று அரசர்' என்று வாராது. 'பெருந்தேவி பொறை உயிர்த்த கட்டிற்கீழ் நால்வர் மக்கள் உளர்' என்னும் உதாரணம் அமைவுடையது. இம் முறைமையை உட்கொண்டே, பல் சான்றோர் பல்லரசர் என்புழி, நிலைமொழியீற்று ரகரமெய்யும் அதன் மேனின்ற அகரமும் கெட்டன என்று [3]ஆசிரியர் நச்சினார்க்கினியர் எழுதியுள்ளார். ஆயின், இவ் வமைதி பிற்காலத்தில் அருகுவதாயிற்று; இக்காலத்தில் பெரும்

1. தொல். சொல். பெய. 33.
2. புறம். 42.
3. எழுத்ததி. 153 உரை.

புலவர் நூல்களிலும் காண்பது அரிதாயுளது. தெலுங்கிலும், கன்னடத்திலும் இந் நியதி நிலைபெற்றுளது. தெலுங்கில், 'இத்தரு மனுஷ்யுலு வச்சிரி' (இருவர் மனிதர் வந்தனர்) என்று வழங்குதலேயன்றி, 'ரெண்டு மனுஷ்யுலு வச்சிரி' என்று வழக்கிலும் வழங்குதல் இல்லை. அவ்வாறே கன்னடத்திலும் 'இப்பரு மனுஷ்யரு பந்தரு' என்றே வழங்குகின்றது. 'எரடு மனுஷ்யரு பந்தரு' என்று வருதல் இல்லை.

இக் கட்டுரையினால், தமிழின் பழைய வழக்குக்களுட் பல, தமிழிற் போல அழிந்துபோகாமல், கன்னடம் முதலிய மொழிகளில் நிலைபெற்றிருப்பன அறியலாகும். இவ்வாறு உள்ளவை இன்னும் பல.

வே. வேங்கடராஜுலு

வைத்தியநாத தேசிகர்

மன்னுதென் கமலை வைத்திய நாதன்
பொன்னடிக் கமலப் போதினைச்
சென்னியிற் சேர்த்துது மதிசிறந் திடவே

என்பது இலக்கண விளக்கம் என்ற நூலின் முகப்பு ஏடுகளிற் காணப் படும் செய்யுள். இச் செய்யுளிற் கண்ட வைத்தியநாத தேசிகர் திருவா ரூரிலே பரம்பரைச் சைவாசாரியர் மரபிலே தவவணைக் குடியில் வந்த வன்மீகநாத தேசிகரின் முதன்மனைவியின் புத்திரராவர். இளமையிலே தாயினையிழக்க நேர்ந்தமையாலும், மாற்றாந் தாயினது பராமரிப்புக் குறைவாலும் வைத்தியநாதர் சிறிது துன்பமடைந்து வருந்தினரென்று அவரது பரம்பரையினர் கூறுவர். ஆயினும் அத்துன்பம் நீண்டநாள் நிலைத்திருக்கவில்லை. அவருடைய தந்தையாரான வன்மீகநாத தேசிக ரிடம் கல்விபயின்றவரும், அக்காலத்திலே ஸ்ரீ கமலைவசந்தத் தியாகேச னது அபிடேககட்டளை அன்னதானகட்டளைகளின் விசாரணைக் கர்த் தருமாயிருந்த அகோரமுனிவர்[1] என்பார் வைத்தியநாதரது பரிதாப நிலையையறிந்து அவரை யழைத்துவந்து தம்மோடு வைத்துக்கொண்டு கல்வி கற்பித்து வந்தார். உணவுக்கவலை யொழியவே, வைத்தியநாதர் தம் காலத்தை வீண்போக்காது கல்வி கற்பதே நோக்கமாகக் கொண் டார். ஆசிரியராயமைந்த அகோர முனிவரும் தமது குருபுத்திரரைப் பலவிதத்திலும் அன்போடு பாதுகாத்து வந்தனராயினும் கல்வியில் மட்டும் கடுமையுடையவராகவே யிருந்தாரென்று கன்ன பரம்பரைச் செய்தி கூறும். மாணவர் கல்வி பயிலுங்கால் சோர்வுற்றால் ஆசிரியர் தம் கையிலுள்ள கரகநீரைப் பெய்துவிடுவர் என்று கூறுவர். இவ்வா றாகப் பலநாள் கல்வி கற்றுவந்தார்.

அக்காலம் காசிபோந்து கங்கையாடி வருவது பெரும்பேறாகக் கருதப்பட்டகாலம். அகோரமுனிவரும் காசியாத்திரை செல்லும் நோக்குடையராய் அப்பயணத்திற்கு ஆவன புரிந்துவந்தார். ஒரு நாள் தம் மாணாக்கர்க்கு முனிவர் தமது காசியாத்திரையைக் குறித்துக் கூறுதலும், மாணவராகிய வைத்தியநாதரும் தமக்கு அப் பொழுது திருவாரூரிலே ஒரு பற்றுக்கோடு மின்மையால் தாமும் தமது ஆசிரியரோடு காசிக்கு வருவதாகக் கூறினர். ஆசிரியர் வைத் தியநாதரது இளமையையும் இல்லறவாழ்க்கை நிலையினையும் வழியி னது அருமையையும் எத்துணை எடுத்துக் கூறியும், வைத்தியநாதரது மனம் அமைதியுறவில்லை. அதனைக் கண்ட முனிவரும் மாணவ ராகிய வைத்தியநாதர் தம்மோடு காசியாத்திரை செல்வதற்கு ஒருவாறு ஒருப்பட்டார்.

1. இவ் அகோர முனிவர் திருக்குடந்தைப் புராணம், திருக்கானப்பேர்ப் புராணம், வேதாரணிய புராணம் என்ற நூல்களின் ஆசிரியராவர்.

இருவரும் ஒரு நன் முகூர்த்தத்திலே திருவாரூரை விட்டுப் புறப்பட்டு இடையிலுள்ள பல தலங்களையும் தரிசித்துக்கொண்டு திரு அண்ணாமலையை யடைந்து ஒரு மடத்திற் றங்கினார்கள். முனிவரர் தமது ஆன்மார்த்த பூஜையின் பொருட்டுச் சென்றனர். வைத்தியநாதர் நித்தியக்கடன்களைக் கழித்தவளவிலே தமது பாடபுத்தகத்தைக் கையிற்கொண்டு யோகபட்டை கட்டிப் பயிலப் புகுந்தவர் மெய்மறந்து நின்றார். ஆசிரியர் தமது பூஜையை முடித்துக்கொண்டு வந்து மாணவரைப் பார்த்தார். மாணவர் இருந்த நிலை முனிவரர்க்கு எவ்வாறு தோன்றியதோ அது அறிவதற்கில்லை. அவர் வைத்தியநாதரை மும்முறை வலம்வந்து சாஷ்டாங்கமாகத் தண்டனிட்டு, இனித் தாம் சீடரும் வைத்தியநாதர் குலமுறைப்படி குருவுமாயினராகக் கூறிக் குருவுக்குரிய சிறப்புக்களையுஞ் செய்தனர்.

அகோரமுனிவரர்க்கும் வைத்தியநாத தேசிகர்க்கும் இதுவரையிருந்துவந்த தொடர்பு வேறுபட்டதாலே, இனித் தேசிகர் தம்மோடு காசி செல்வது ஏற்றதன்றெனக் கூறியதோடு தமது உடன்சாலை மாணவரும் பிரபுவாயுமுள்ள ஒருவர் திருநெல்வேலியின் கண்ணே இருப்பதாகவும், அவ்விடம் செல்லுமாறும் வேண்டிக் கொண்டதோடு அவ்வன்பினருக்கு[2] ஒரு முடங்கலும் எழுதிக் கொடுத்துத் தேசிகரை ஊர்போக விடுத்துத் தாம் காசி நோக்கிச் சென்றார்.

வைத்தியநாத தேசிகர் திரு அண்ணாமலையிலிருந்து புறப்பட்டுத் திருவாரூர் சென்றனர். சிறிதுகாலங் கழிந்து, ஆரூரினின்றும் புறப்பட்டுத் திருநெல்வேலி நோக்கிச் சென்றார். இடையிலே கயத்தாற்றில் அப்பொழுது மதுரையை யாண்ட திருமலைநாயக்கரது காரியகர்த்தராக விருந்த திருவேங்கடநாத ஐயரைச் சந்தித்தார். தேசிகருடைய கல்வித்திறமையையும் அடக்கம் வாய்மை பொறுமை முதலாய நற்குணங்களையும் கண்ட திருவேங்கடநாதையர் தேசிகரைத் தமது மக்களுக்குத் தமிழாசிரியராக அமர்த்தினார். தாம் பாடம் கற்பித்துவரு நாளிலே, இலக்கண பாடம் சொல்லிவருகையில் தாம் கற்ற நன்னூலும் சைன முனிவரான மயிலைநாதருரையும் பல இடங்களில் தொல்காப்பியர் கருத்துக்கு மாறுபடுவது கண்டு இயன்றவரை நன்னூற் சூத்திரங்களை வைத்துக்கொண்டு வேண்டிய விடங்களிற் றிருத்தியும் புத்துரை வகுத்தும் பாடம் போதித்து வந்தாரென்று கூறுவர். அதுவே நாளடைவில் **இலக்கணவிளக்கம்** எனப் பெயர் பெற்றது.

வைத்தியநாத தேசிகர் மலையாளஞ் சென்று அந் நாட்டு அரசரின் மேற் பல பிரபந்தங்கள் பாடி, அவராற் பல சன்மானங்களும் சில ஊர்களும் முற்றூட்டாகப் பெற்றதோடு அவரது அவைக்களத்தினரால் 'ஓதும் பிரபந்தங்கள்............கயிலைவரு வைத்தியநாத குருவே' எனத் துதிக்கப்பட்டார். பின்னர் வடநாடு சென்று திண்டிவனத்தை

2. இவ்வன்பினர் யாவரென இதுபொழுது தெரிதற்குரிய சான்றுகள் கிடைத்தில.

யடுத்த மயிலாசலத்திலே எழுந்தருளியிருந்த சிவஞான பாலையர்மீது பாசவதைப்பரணி என்ற நூலும் மயிலாசலபதியான முருகன் மீது பிள்ளைத்தமிழும் பாடி அரங்கேற்ற, அவற்றிற்குச் சன்மானமாகப் பாலையருக்குச் சொந்தமாயிருந்ததும் சூரும்பேட்டிலுள்ளதுமான பத்துக் காணி நிலமும் ஓராள் சாகுபடி செய்யும் உப்பளமும் மானியமாகப் பெற்றார்.[3]

திருவாரூரிலே இருக்கின்ற காலத்திலே தியாகேசப் பெருமான் மீது திருவாரூர்ப் பன்மணிமாலை என்ற சிறு பிரபந்தத்தைச் செய்தார். திருச்சிராப்பள்ளியை யடுத்த கருவூர்ப்பக்கங்களில் வாழும் பன்னிரண்டாஞ் செட்டிகளென்ற ஒருவகை வணிக மரபினரது வேண்டுகோட்கிணங்கி திருவாட்போக்கிப் புராணம் பாடினார். பின்னர் அமர்நீதி நாயனார் வாழ்ந்து முத்தியடைந்த திருப்பதியான திருநல்லூரின் மேல் நல்லூர்ப் புராணம் பாடினார். இந் நல்லூர்ப் புராண ஏடுகளின் இறுதியிலே,

தவிப்பார்க் குறுதுணை வன்மீக நாதன் றனயனிங்கப்
புவிப்பாற் புலவன் வயித்திய நாதன் புகன்றசெஞ்சொற்
கவிப்பாகந் தேவர்க் கவிப்பாகம் போலின்பங் காட்டுங்கற்றோர்
செவிப்பா லுள்ளேசென்று சித்தத்தி லேநின்று தித்திக்குமே.

பொன்னெடுஞ் சடிலத் தெம்பிரா னல்லூர்ப்
 புராணமாக் காதைசெந் தமிழாற்
கன்னலுந் தேனு மமுதமு மதுரக்
 கனியும்போற் கட்டுரை செய்தான்
பன்னுமெய்ப் புகழான் றவத்துணை முதல்வன்
 பாரெலாம் வணங்குதென் கமலை
மன்னவன் கல்விக் கடலெனச் செழித்த
 வயித்திய நாதம்பி கனே.

'இது சொன்னான் புதுப்பத்தூர் தவத்துணை கோத்திரத்தான் ஒப்பிலாமணி யென்றறிக' என்றெழுதப் பட்டுளது கொண்டு இதன் பெருமை விளங்கும்.

தேசிகர் நூல் செய்தலில் வல்லவரா யிருத்தல் போலவே பாடஞ் சொல்லுதலிலும் வல்லவராவர். இவர் இடைவிடாது பாடஞ் சொல்லும் வழக்கமுடையவ ரென்ப. அதற்கேற்ப அவ்வாறு ஓயாது பாடஞ் சொல்லுவதாலுண்டாகுந் தாள்வலியைப் போக்கத் தவிட்டை வறுத்து ஒத்துக் கொடுப்பது வழக்கமாம். அவர் தமது மனைவியாரை அழைத்து,

'தகதக தங்கம் தாளை வலிக்குது
 தவிடு வறுத்துத் தா'

3. இந்நிலமும் உப்பளமும் இவருடைய சந்ததியாரிடமிருந்து கி. பி. 1894-ம் ஆண்டில் கைமாறியது.

என்று கூறுவராம். இவரிடம் கல்விகற்றுச் சீரும் சிறப்புமாக வாழ்ந்தோர் பல்லோராவர். அவர்களுள்,

கூடுஞ் சபையிற் கவிவா ரணங்களைக் கோளரிபோற்
சாடுஞ் சதாசிவ சற்குருவே முன்னின் றந்தைதம்மாற்
பாடும் புலவர்க ளானேமின் றிச்செம்மற் பட்டியெங்குங்
காடுஞ் செடியுடன் றேதமிழ்க் காரிகை கற்றதுவே

என்று பாடியவர் படிக்காசுப் புலவர்.

குடந்தைப் புராணம்[4] பாடிய அரசூர் சோக்கப் புலவர் மற்றொரு சீடர். இவர் தமது ஆசிரியரைக் குடந்தைப் புராணத்தில்

அவமொழிக் கென்னுளத் தமுத மூறுதீஞ்
சுவையெனத் தமிழ்வளஞ் சுரந்து நல்குமே
தவமெனக் கமலையி லிருந்த தேசிகன்
றவவணை வயித்திய நாதன் றாள்களே

என்று துதித்திருக்கின்றார். சிவரகசியம் பாடிய ஒப்பிலாமணி தேசிகர் மற்றொரு சீடர் என்பது அவர் நல்லூர்ப் புராணத்தைக் குறித்துப் பாடிய சிறப்புப்பாயிரங்களால் நன்கு விளங்கும்.

இவர் கல்விச்செல்வம் பெற்றிருந்ததுபோல மக்கட் செல்வமும் நிரம்பப் பெற்றிருந்தார். இவரது மனைவியார் 'தங்கம்' எனப் பேர் பெறுவர். சதாசிவம், தியாகராஜன், சிதம்பரநாதன், வடுகநாதன், வன்மீகநாதன் என்ற பழனி என ஐவர் மக்களுண்டு. இவர்கள் ஐவரும் நன்கு கல்விகற்ற வித்வான்களாகவே வாழ்ந்தனர்.

இவரதுகாலம் திருவேங்கடநாதரது காலமாகிய பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியே யாகும். இவரது சீரையுஞ் சிறப்பையுங் குறித்து இலக்கணக்கொத்து[5] எழுதிய சுவாமிநாத தேசிகர்

'என்கண் காணத் திருவா ரூரிற்
சிறப்புற் றிலகும் வைத்திய நாதன்
இலக்கண விளக்கம் வகுத்துரை யெழுதினன்'

என்று கூறியுள்ளார்.

ச. சோமசுந்தர தேசிகர்.

4. குடந்தைப்புராணம் அச்சாகவில்லை. இது சகசி மகாராஜாவின் சபையில் அரங்கேற்றப்பட்டது.

5. நாவலர் அச்சிட்ட இலக்கணக் கொத்தில் சிறப்புற்றிலகும் என்பது திருக்கூட்டத்தில் என்று திருத்தப்பட்டுளது.

TAMIL, LITERARY AND COLLOQUIAL

BY

R. P. SETHU PILLAI,

(c) *Lexical*

The vocabulary of the literary language consists of four classes of words ; viz.

1. *Iyarcol*—(simple, common words)

2. *Tiricol*—(literary words)[1]

3. *Tisai-c-col*—(words borrowed from the twelve countries bordering the ancient *cen-tamil* land)[2]

4. *Vaḍa-col*—(literally northern words). Loan-words in Sanskritic and Prakritic forms.

1. It includes homonyms and synonyms (*Tolkappiyam*, Col. 399.)

2. Tolkappiyam, col. 400. The following words are given by the commentators as examples of *Ticai-c-col.*

பெற்றம்	perram (cow)—Teṉ-pāṇḍi-nāḍu
தள்ளை	taḷḷai (mother)—Kuṭṭa-nāḍu
ஞெள்ளை	ñeḷḷai (dog)— do.
அச்சன்	accaṉ (father)—Kuḍa-nāḍu
கையர்	kaiyar (cheats)—Karkā-nāḍu
எலுவன்	eluvaṉ (man-friend)—Cīta-nāḍu
இகுளை	ihuḷai (woman's confidante)— do.
தந்துவை	tanduvai (mother's brother's wife)— do.
ஞமலி	ñamali (dog)—Pūḻi-nāḍu
பாழி	pāḻi (pool)— do.
செறு	ceru (field)—Aruvā-nāḍu
கேணி	kēṇi (pool)— do.
குட்டை	kuṭṭai (kuruṇi—a measure)—Aruvā-vaḍatalai-nāḍu

The following are instances of *vaḍa-col* borrowed in Tamil in their prakritic form.

	Tamil.	Prakrit.	Sanskrit.
அத்தாணி	attāṇi	attāṇi	āsthāna
ஆணை	āṇai	āṇā	ājñā
அய்யன்	ayyaṉ	ayya	ārya
உய்யாணம்	uyyāṇam	uyyāna	udyāna
கண்ணன்	kaṇṇaṉ	kaṇha	kṛṣṇa
கப்பரை	kapparai	khappara	karpara
சவுக்கம்	cavukkam	caukka	catuṣka
சாவகன்	cāvakaṉ	śāvaka	śrāvaka
சீயம்	cīyam	sīha	simha
சிப்பி	cippi	śippī	śukti
சுங்கம்	cuṅgam	suṅka	śulka
சுண்ணம்	cuṇṇam	cuṇṇa	cūrṇa
சுன்னம்	cuṉṉam	sunna	śūnya
தாதி	tādi	dhāti	dhātrī
நக்கன்	nakkaṉ	nakka	nagna
நிக்கந்தன்	nikkandaṉ	niggantha	nirgrantha
நிச்சம்	niccam	niccam	nitya
படிகம்	paḍikam	paḍiggaha	prati-graha
படிமை	paḍimai	padimā	pratimā
பந்தி	pandi	panti	paṅkti
பயணம்	payaṇam	payaṇa	prayāṇa
பல்லக்கு	pallakku	pallaṅka	paryaṅka
பளிங்கு	paḷiṅgu	phalika	sphaṭika
பாகதம்	pākatam	pākata	prākṛta
புடவி	puḍavi	puḍhavi	pṛthvī
மச்சம்	maccam	maccham	matsya
முத்தி	mutti	mutti	mukti
மோனம்	mōṉam	mōna	mauna
வட்டி	vaṭṭi	vaṭṭi	vṛddhi
வண்ணம்	vaṇṇam	vaṇṇa	varṇa
வதம்	vatam	vatam	vrata

The vocabulary of the colloquial language is replete with pleonasms, reduplications and expressions pertaining to diverse arts and occupations.

(1) *Pleonasms*

(a) The following are instances of pleonasms in which a literary word is coupled with its popular equivalent.

அரைநாண்கயிறு	arai-nāṇ-kayiru > ara-nā-k-kayaru
சூறாவளிக்காற்று	cūṟā-vaḷi-k-kāṟṟu > cūṟa-vaḷi-k-kāttu
சகடவண்டி	cakaḍa-vaṇḍi > cakkaḍā-vaṇḍi
பழுதைக்கயிறு	paḻutai-k-kayiru > paḻutai-k-kayaru
பேழைப்பெட்டி	pēḻai-p-peṭṭi > pōḻa-p-poṭṭi
புயல்காற்று	puyal-kāṟṟu > pusal-kāttu
வெட்டரிவாள்	veṭṭ-arivāḷ > veṭṭ-aruvāḷ

(b) In the following pleonasms an indigenous word is yoked to an alien word.

naḍu (Tamil)-matti (madhya, Skt.)—naḍu-matti	நடுமத்தி
naḍu (Tamil)-mayyam (madhya, Skt.)—naḍu-mayyam	நடுமய்யம்
gate (Eng.)-vāsal (Tamil)—kēṭṭu-vāsal	கேட்டுவாசல்
shop (Eng.)-kaḍai (Tamil)—cāppu-k-kaḍai	சாப்புக்கடை
civappu (Tamil)-red (Eng.)—civappu-reṭṭu	சிவப்புரெட்டு
kaḍai (Tamil) -bāzār (Persian)—kaḍai-basār	கடைபசார்

(2) *Reduplications*

(*a*) Rhyming reduplication.

vāṭṭa-cāṭṭam	வாட்டசாட்டம்
vambu-tumbu	வம்புதும்பு
koñja-nañjam	கொஞ்சநஞ்சம்
asaṭṭū-p-pisaṭṭu	அசட்டுப்பிசட்டு
pōkkiri-cākkiri	போக்கிரிசாக்கிரி
narukku-p-pirukku	நருக்குப்பிருக்கு
pākki-cākki	பாக்கிசாக்கி
caṭṭu-p-piṭṭu	சட்டுப்பிட்டு
cāṭṭu-māṭṭu	சாட்டுமாட்டு
cāla-mālam	சாலமாலம்
cāḍai-māḍai	சாடைமாடை
taṭṭu-muṭṭu	தட்டுமுட்டு
nīkku-p-pōkku	நீக்குப்போக்கு
cākku-p-pōkku	சாக்குப்போக்கு
kaṭṭu-muṭṭu	கட்டுமுட்டு

(b) Stylistic or rhetorical reduplication.

kaṉṉ-aṅ-garēr	கன்னங்கரேர்
cekka-c-cevēr	செக்கச்செவேர்
paccai-p-pasēr	பச்சைப்பசேர்
veḷḷai-veḷēr	வெள்ளைவெளேர்
ciṉṉam-ciṟu	சின்னஞ்சிறு
cappu-c-cavaṟu	சப்புச்சவறு
taṉṉam-taṉi	தன்னந்தனி
puttam-pudu	புத்தம்புது
paṭṭa-p-pahal	பட்டப்பகல்
veṭṭai-veḷi	வெட்டைவெளி
naṭṭai-naḍu	நட்டைநடு (நட்டை நடுப்பெற)
nahai-naṭṭu	நகைநட்டு
poṭṭu-p-poḍi	பொட்டுப்பொடி
taṭṭu-t-taḍai	தட்டுத்தடை

(3) Expressions pertaining to arts and occupations.[3]

ஏழாம்பொருத்தம்	ēḻām-poruttam—(Astrology) —incompatability of temperament.
கம்பிநீட்டல்	kambi-nīṭṭal—(Goldsmith's art) –to steal away.
கட்டுஅவிழ்த்தல்	kaṭṭu-aviḻttal[4]—(Medical treatment) —to disclose one's real state of affairs.
காதுகுத்தல்	kādu-kuttal—(Goldsmith's art) —to beguile.
காக்காய்பிடித்தல்	kākkāy-piḍittal—(Bird-catching) —to coax by word or deed.
குல்லாப்போடுதல்	kullā-p-pōḍutal[5]—(Dressing)—to cajole.
சரடுவிடுதல்	caraḍu-viḍutal—(Goldsmith's art) —to concoct and circulate a story.
சாயம்வெளுத்தல்	cāyam-veḷuttal—(Dyeing) —to appear in true colours
பதம்பார்த்தல்	padam-pārttal—(Cooking) —to test.

3. The particular art or occupation is enclosed in brackets.

4. எல்லாம் மூன்றுங்கட்டவிழ்த்தால் தெரியும்.

5. This expression probably owes its origin to the practice of wearing a head-dress to please the Muslims when they were the rulers of this land.

பூசி மழுப்பல்.	pūsi-maḻuppal—(Painting) —to explain away.
பித்தலாட்டம் செய்தல்	pittalāṭṭam-ceydal[6]—(Alchemy) —to cheat.
மல்லாடல்	mallāḍal[7]—(Wrestling) —to bandy words.
மன்றாடல்	maṉṉāḍal < maṉṟāḍal (Pleading) —to make a persistent request.

The vocabulary of the colloquial language comprises, besides Sanskrit derivatives, words drawn from cognate languages (Telugu, Kanarese, Malayalam), Classical languages (Persian, Arabic), North-Indian languages (Marathi, Hindustani) and modern European languages (Portuguese, Dutch, French, English), a classification of which is given below.[8]

1. *ORNAMENTS*

அட்டிகை	aṭṭikai < K. aḍḍike
கொலுசு	kolusu < T. golusu
சிமிக்கி	cimikki < H. camkī
தாயத்து	tāyattu < A. corruption of ta'wīdh ?
தோடா	tōḍā < H. tōṛā
பாட்லா	pāṭlā < Mhr. pāṭalī.
பாசிபந்து	pāsi-pandu < P. bāzū-band
பில்லாக்கு	pillākku < Tur. bulāq, bulāk
நத்து	nattu < H. nath
பேசரி	pēsari < H. bēsar
நகாசு	nahāsu < A. naqsh
ராக்கடி	rākkaḍi < H. rākhṛi
லோலக்கு	lōlakku < H. lōlak
மெடல்	meḍal < E. medal

2. *APPAREL*

உருமால்	urumāl < P. rūmāl
கதர்	kadar < H. khudrā = rough

6. Pittalāṭṭam (probably pittala+hāṭaka)—Deception, fraud as in passing brass for gold. (T.L.)

7. " கல்லாடம் படித்தவனோடு மல்லாடாதே "

8. The classified list is not exhaustive but only illustrative.

குடித்துணி	kuḍittuṇi < P. kurta
கமிசு	kamisu < A. qamīṣ
குல்லா	kullā < P. kulāh
சொக்காய்	cokkāy < T. tcokkā
சரிகை	carihai < P. zarī
சகலாத்து	cahalāttu < P. saqallāt, saqalāt
சாக்கட்டு	cākkaṭṭu < E. jacket
சாரி	cāri < P. sārī
சால்வை	cālvai < P. shāl
சிராய்	cirāy < A. shara'ī
டிராயர்	ḍirāyar < E. drawers
டோரியா	ḍōriyā < H. ḍōriyā
தாவணி	tāvaṇi < P. dāmanī
துப்பட்டா	tuppaṭṭā < H. dū-paṭṭa
தோத்தி	tōtti < H. dhōtī
துவாலை	tuvālai < Port. toalha
தொப்பி	toppi < H. tōpī
நேரியல்	nēriyal < M. nēriyal
பாகை	pāhai < H. pāg
பாடி	pāḍi < E. bodice
புட்டா	puṭṭā < H. būṭā
நாடா	nāḍā < H. nālā (P. nawār, nuwār)
நிசார்	nisār < A izār
மகமல்	mahamal < A. makhmal
மல்	mal < P. malmal
முண்டாசு	muṇḍāsu < H. mūṇḍ+?
லங்கோடு	laṅgōḍu < H. laṅgōṭī
ஜிப்பா	jippā < A. jubba.
ஜோடு	jōḍu < H. jōṛ
லுங்கி	luṅgi < P. luṅgī
சூட்டு	cūṭṭu < E. suit
சர்ட்டு	carṭṭu < E. shirt
கோட்டு	kōṭṭu < E. coat
காலர்	kālar < E. collar
டை	ṭai < E. tie
பனியன்	paniyan < A. bunyān
பாக்கெட்டு	pākkeṭṭu < E. pocket

பித்தான்	pittāṉ < E. button[9]
பிளானல்	piḷāṉal < E. flannel
பிலுட்டு	piluṭṭu < E. belt
பூடுசு	pūḍusu < E. boots
சப்பாத்து	cappāttu < Port. sapato

3. *CONFECTION AND CONDIMENTS*

அல்வா	alvā < A. ḥalwā'
காராப்பூந்தி	kārā-p-pūndi < Ta. kāram + H. būndī
கிச்சடி	kiccaḍi < H. khichṛī
கீர்	kīr < H. khīr
குல்கந்து	kulkandu < gul-qand (P. gul + A. qand)
கேசரி	kēsari < H. kēśarī
கோவா	kōvā < H. kho'ā
கொச்சு	koccu < H. kaccā
சப்பாத்தி	cappātti < P. capātī
சட்னி	caṭni < H. caṭnī
சாம்பார்	cāmbār < Mhr. sāmbhār
லட்டு	laṭṭu < H. laḍḍū
சிலேபி	cilēbi < A. zalābiyya
சொஜ்ஜி	cojji < H. sūjī
சேமியா	cēmiyā < Mhr. sevayā, H. sewaīn
கோசும்பரி	kōsumbari < Mhr. kōśimbarī
டாங்கர்	ṭāṅgar < Mhr. daṁgar
பட்டாணி	paṭṭāni < Mhr. puṭānā
பக்கோடா	pakkōḍā < H. pakōṛā
பஜ்ஜி	pajji < H. bhūjya
பருப்பி	paruppi < P. barfī
பாதாம்	pādām < P. bādām
பாத்து	pāttu < Mhr. bhāta
பூரி	pūri < H. pūrī
பூந்தி	pūndi < H. būndī
புலாவ்	pulāv < P. pulāo
பேணி	pēṇi < H. phēṇi
பேடா	pēḍa < H. pēṛā
மசாலா	masālā < A. maṣāliḥ

9. பொத்தான் pottāṉ, a variant of pittāṉ is probably a corruption of the Portugese botão.

மிட்டாய்	miṭṭāy < H. mīṭhā
முரப்பா	murappā < A. murabba
மைசூர் பாகு	maisūr-pāhu < probably A Miṣrī+skt. pāk.
மைதா	maidā < P. mayda
ரவை	ravai < H. ravā
தோசை	tōsai < Port. doce
ரொட்டி	roṭṭi < H. rōṭī
ஐஸ்கிரீம்	aiskirīm <E. ice-cream
கேக்கு	kēkku < E cake
கருவாடு	karuvāḍu < Port. cravado ?
சாக்கலட்டு	cākkalaṭṭu < F. chocolat
பப்பிரமெண்டு	pappiramenḍu < E. pepper-mint
பிசுக்கொத்து	pisukkottu < E. biscuit
டோஸ்டு	tōsṭṭu < E. toast

4. *FRUITS AND DRINKS*

அன்னாசி	annāsi < Port. ananās (Braz. nanas)
ஆரஞ்சி	ārañji < E. orange
ஆப்பிள்	āppiḷ < E. apple
ஆல்பக்கடா	ālpakkaḍā < P. ālū-Bukhāra
எலுமிச்சை	elumiccai[10] < A. laymūn + P. tursh
கொய்யா	koyyā < Braz. guayaba, Port. goiaba.
சப்போட்டா	cappōṭṭā < E. sapodilla
சீத்தாப்பழம்	cīttā-p-paḻam < H. sitāphal
தம்பட்டம்	tambaṭṭam < E. tomato
பப்பாளி	pappāḷi < Malay. papaya
பறங்கிப் (பழம்)	paṟaṅgi-p-(paḻam)[11] < P. frangī+Ta.
பம்பளிமாசு	pambaḷimāsu < Malay. pampelmoose
பேரிக்காய்	pēri-k-kāy < E. pear+Ta
மங்குஸ்தான்	maṅgustāṉ < Malay. maṅgistan
ஒயின்	oyiṉ < E. wine
ஓவல்	ōval < E. ovaltine

10. P { tursh—sour. / turush } Probably i the prothetic prefix of lumiccai, (corruption of laymūn tursh) has changed into e. lumiccai>ilumiccai>elumiccai.

11. *Farangi* or *firangi* is a Persian corruption of *frank*. In Persian Firangistan' is the name for Europe.—See Portugese Vocables in Asiatic Languages, pp. 17-18.

கலர்	kalar < E. colour
கோலா	kōlā < H. kēlā
காப்பி	kāppi < E. coffee
கொக்கோ	kokkō < E. cocoa
சர்பத்து	carpattu < A. sharbat
சாயா	cāyā < Chin. tshā. (P. cāy).
சாலத்து	cālattu < E. salad (fruit-salad)
சோடா	cōḍa < E. soda
பிராந்தி	pirāndi < E. brandy
தேநீர்	tē-nīr < Malay. tē+Ta. (Chin. t'e)
லெமனெட்டு	lemaṉeṭṭu < E. lemonade

5. *ARCHITECTURE.*

ஆர்ச்சு	ārccu < E. arch
கமான்	kamāṉ < P. kamān
கர்டர்	karḍar < E. girder
கக்கூசு	kakkūsu < Dut. kakhhuis
குசினி	kusiṉi < Port. cozinha (F. cuisine)
காம்பரா	kāmbarā < E. camera
காம்பவுண்டு	kāmbavuṇḍu < E. compound
காடியானா	kāḍiyāṉa < H. gāṛī+P. khāna
கேட்டு	kēṭṭu < E. gate
கிராதி	kirādi < Port. grade
கோரி	kōri < P. gōr
சன்னல்	caṉṉal < Port. janela
செட்டு	ceṭṭu < E. shed
பங்களா	paṅgaḷā < E. bangalow
பட்டகசாலை	paṭṭakasālai < K. paṭaśāle
பாலம்	pālam < H. pāl (P. pul)
தார்சா	tārsā < E. terrace ?
மால்	māl < A. maḥall
வராந்தா	varāndā < Port. veranda cf. P. bar-āmada

6. *FURNITURE*

அலமாரு	alamāru < Port. almario, armārio
ஈச்சேர்	īccēr < E. easy-chair
குரிச்சி	kuricci < A. kursī
சோபா	sōpā < E. sofa (A. ṣuffāḥ)

டீப்பாய்	ṭīppāy < E. teapoy (P. sih+pāe).
பங்கா	paṅgā < H. phaṅkā
பீரோல்	pīrōl < E bureau
பெஞ்சி	peñji < E. bench
மேசை	mēsai < Port. mesa, P. mez, mīz

7. *UTENSILS*

குண்டான்	kuṇḍāṉ < Mhr. guṇḍā
கெண்டி	keṇḍi < Mhr. giṇḍī
கோப்பை	kōppai < E. cup
கூசா	kūsā } < A. kūz
கூஜா	kūjā }
தமிளர்	tamiḷar < E. tumbler
பீங்கான்	pīṅgāṉ < Chin. pēn+ngān
லோட்டா	lōṭṭā < H. lōṭā
அண்டா	aṇḍā < H. haṇḍā
தேக்கிசா	tēkkisā < P. dēgca
கெட்டில்	keṭṭil < E. kettle
வாளி	vāḷi < H. bāltī

8. *SUNDRY ARTICLES.*

அரிக்கன்	arikkaṉ < E. hurricane lamp
ஆரொட்டி	āroṭṭi < E. arrowroot
ஆக்கர்	ākkar < E. auger
இசுக்கோல்	isukkōl < E. screw
இஞ்சின்	iñjiṉ < E. engine
ஊக்கு	ūkku < E. hook
கப்பி	kappi < A. qabb
குப்பி	kuppi < H. kuppī
கித்தான்	kittāṉ < A. kattān
கீல் (கீர்)	kīl < A. qīr (commonly kīl-eṇṇai)
கோலி	kōli < P. gōlī, gūlī
கொப்பரை	kopparai < H. khoprā
சமுக்காளம்	camukkāḷam < H. jamkūṛā
சாக்கு	cākku < Dut. zak
சாவி	cāvi < Port. chave=key
சாடி	cāḍi < Port. jarra
சிமிட்டி	cimiṭṭi < E. cement

சிலேட்டு	cilēṭṭu < E. slate
டப்பா	ṭappā < H. ḍabba
டப்பி	ṭappi < H. ḍibbī, ḍabbī
படுதா	paḍutā < P. parda
பம்பு	pambu < E. pump
பல்பு	palbu < E. bulb
பாட்டில்	pāṭṭil < E. bottle[12]
பிக்காசு	pikkāsu < E. pick-axe
பீப்பாய்	pīppāy < Port. pipa
பொனல்	poṉal < E. funnel
மிசியன்	misiyaṉ < E. machine
மில்	mil < E. mill
மீட்டர்	mīṭṭar < E. meter
நட்டு	naṭṭu < E. nut
லஸ்தர்	lastar < E. cluster
லாந்தல்	lāndal < E. lantern[13]
ராட்டு	rāṭṭu < H. rahat
வாச்சு	vāccu < E. watch
ஜாக்கி	jākki < E. jack (instrument)

9. *LUXURIES*

அம்பர்	ambar < A. 'anbar
அத்தர்	attar < A. 'iṭr
அபின்	apiṉ < P. apyūn
உக்கா	ukkā < A. ḥuqqa
ஊது பத்தி	ūdu patti < A. 'ūd + H. battī
கசகசா	kasakasā < P. k͟has͟hk͟hās͟h
கஞ்சா	kañjā < H. gānjhā
சோப்பு	cōppu < E. soap
சவ்வாது	cavvādu < A. zabād
சிகரட்டு	cikaraṭṭu < E. cigarette
சாம்பிராணி	cāmbirāṇi < Malay. sāmrāni
சாலாமிசிரி	cālāmisiri < A. tha'labī + Miṣrī
ரவேஸ்	ravēs < P. rawis͟h
ரேக்கு	rēkku < P. bārīk

12. போத்தல் pōttal, a variant of pāṭṭil, is probably derived from the Dutch bottel.

13. ராந்தல் rāntal, is a variant of lāntal.

10. *CONVEYANCE*

ஏரோப்ளேன்	ērōplēṉ < E. aeroplane
கார்	kār < E. car
கோச்சு	kōccu < E. coach
சட்கா	caṭkā } < H. jhaṭkā
ஜட்கா	jaṭkā } < H. jhaṭkā
சப்பரம்	capparam < H. chappar
சாரட்டு	cārāṭṭu < E. chariot
சைக்கிள்	caikkiḷ < E. cycle=bi-cycle
டக்கு	ṭakku < E. truck
டிராம்	ṭirām < E. tram=tram-car
டோலி	dōli < H. dōlī
மேனா	mēṉā < P. miyāna, mēna
பஸ்	bas < E. bus=omnibus
பீட்டன்	pīṭṭaṉ < E. phaeton
மோட்டார்	mōṭṭār < E. motor
லாரி	lāri < E. lorry
ரயில்	rayil < E. rail=railway train
ரிக்ஷா	rikṣā < Jap. jinrikṣa
ரேக்கிளா	rēkkiḷā < H. rahkalā

11. *COMMUNICATION*

இன்சூர்	iṉsūr < E. insurance
கடுதாசி	kaḍutāsi < A. qarṭās
கவர்	kavar < E. cover
கார்டு	kārḍu < E. card
தபால்	tapāl < H. ṭappāl
போஸ்டாபீசு	pōsṭ-āpīsu < E. post-office
மணியார்டர்	maṇiyāḍar < E. money-order
ரிஜிஸ்தர்	rijistar < E. register=registered letter
லக்கோடா	lakkōḍā < H. lakhōṭā
லேபில்	lēbil < E. label
லெட்டர்	leṭṭar < E. letter

12. *BUSINESS*

அட்வான்சு	aḍvāṉsu < E. advance
அட்டவணை	aṭṭavaṇai < Mhr. athavaṇa
ஆண்டிமாண்டு	āṇḍimāṇḍu < E. on demand

உண்டியல்	uṇḍiyal < H. hunḍī
கசர்	kasar < A. qaṣr or kasr
கசாப்பு	kasāppu < A. qaṣṣāb
கரார்	karār < A. qarār
கண்டிராக்கட்டு	kaṇḍirākkaṭṭu < E. contract
கிட்டங்கி	kiṭṭaṅgi < Malay. gaḍong [14]
குசிலி	kusili < A. ghuzlī
சந்தா	candā < P. candā
சவுக்கார்	cavukkār < H. sāhūkār
சிராப்பு	cirāppu < A. ṣarrāf
சிலாவணி	cilāvaṇi < H. calānā
சிட்டை	ciṭṭai < H. citthā
டெண்டர்	ṭeṇḍar < E. tender
டிப்பாசிட்டு	ṭippāsiṭṭu < E. deposit
தராசு	tarāsu < P. tarāzū
தினுசு	tiṉusu < A. jins
தினுசுவாரி	tiṉusuvāri < A. jins. + P. wār
துபாஷ்	tubāṣ < H. dobāshī
பட்டியல்	paṭṭiyal < H. paṭṭī
பண்டு	paṇḍu < E. fund
பசார்	pasār < P. bāzār
மகமை	mahamai < A. muhimm
மேஸ்திரி	mēstiri < Port. mestre[15]
மார்க்கட்டு	mārkkaṭṭu < E. market
மௌசு	mausu < A. mawj
நிரக்கு	nirakku < P. nirkh, narkh
ரகம்	raham < A. raqm
வட்டம்	vaṭṭam < H. baṭṭā
வங்கி	vaṅgi < E. bank
லாலா	lālā < H. lālā
லேவாதேவி	lēvādēvi < H. lēnā-dēnā

